வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.




புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 கார்த்திகை திங்கள் 3-ம் நாள் (18—11—1962) ஞாயிற்றுக்கிழமை ஐ. ஆகிர் 19 | இதழ் 25

# பாதுகாப்பு நிதியை அனுப்பத் தடையா?

## கொம்யூனிஸ்டு கட்சி முயற்சியின் விளைவு

சீன ஆக்கிரமிப்பிலிருந்து பாரத நாட்டைப் பாதுகாப்பதற்காக இந்திய தேசிய பாதுகாப்பு நிதிக்கு இங்கிருந்து பணம் அனுப்புவது தடுக்கப்படலாமென்றும், அதற்கு நாணய செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரி அனுமதி வழங்க மாட்டாரென்றும் அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது. இச் செய்தி சீன ஆக்கிரமிப்பைக் கண்டிக்கும் மக்களிடையே பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளதென்றும் அறியப்படுகிறது. இந்திய யுத்த முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் இலங்கை கொம்யூனிஸ்டுத் தலைவர் ஒருவர் இது சம்பந்தமாக அரசாங்கத்தின் மிக முக்கிய நபர் ஒருவரை அணுகினாரென்றும், அதன் விளைவாகவே நிதி இந்தியாவுக்கு அனுப்புவது தடுக்கப்படலாமென்றும் கூறப்படுகிறது.

இலங்கையிலுள்ள இந்திய வர்த்தக, கலாசார ஸ்தாபனங்கள் இந்திய பாதுகாப்பு நிதிக்கு பெருந்தொகை நன்கொடை வசூலித்திருப்பதாகத் தெரிகிறது. தோட்டத் தொழிலாளர்களும் நிதிக்கு நன்கொடை வழங்கி வருகின்றனர்.

வட இலங்கை வர்த்தக ஸ்தாபனங்களும் நிதி திரட்டுகின்றது. தமிழரசுக் கட்சியும் பொதுக் கூட்டங்களில் மக்களிடமிருந்து நிதி வசூலிக்கிறது. இம் மாதிரி பெருந்தொகையான பணத்தை வசூலித்து இந்தியாவுக்கு அனுப்புவதால் ஏற்கனவே மோசமடைந்துள்ள இந் நாட்டின் நிதி நிலைமை மேலும் மோசமடையக் கூடுமென்றும் அரசாங்கம் கருதுகிறதாம்.

ஆகவே இந்தியப் பாதுகாப்பு நிதிக்குப்பணம் அனுப்புவதற்குப் பதிலாக இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை, சப்பாத்து, பனியன், சட்டை முதலிய உள்நாட்டுப் பொருட்களை விலைக்கு வாங்கி இந்தியா

(19-ம் பக்கம் பார்க்க)



செருக்களத்தில் கணவனும் சாய்ந்துவிட்டான். 'வீட்டுக் கொருவீரன் வாரீர்' என்று போர்ப் பறை முழங்குகிறது. தன் வீட்டிலிருந்து செல்ல யாரும் இல்லையே என்று தவித்த தலைவி, பால் மணம் மாறாத பச்சிளம் பாலகனைப் போர்க்களம் அனுப்புகிறாள். மார்பிலே விழுப்புண் பெற்று வீரமரணம் அடைந்தான் மகன், என்பதை அறிந்து பூரிக்கிறாள்.
சங்க காலச் சிறப்பு இது.

அஹிம்சையால் அடிமை விலங்கறுத்த அன்னையை இன்று அந்நியன் படை கொண்டு தாக்க முனைந்துவிட்டான். சரித்திரம் திரும்புகிறது.

பாரதத்தின் புதல்வர்களே! வீரவரலாறு படைக்க விரைந்து செல்லுவீர்! வெற்றிகாணுவீர்!

# மாஸ்கோ உத்தரவு இன்னும் வரவில்லை

## சீனர்கள் ஆக்கிரமிப்பை ஆதரிப்பதா? கொம்யூனிஸ்டுகள் திண்டாட்டம்

இலங்கை மக்கள் சீன ஆக்கிரமிப்பைக் கண்டிக்கின்றனர். அவர்கள் மத்தியில் ஆக்கிரமிப்பை ஆதரித்துப் பேசுவது எப்படி என்ற கேள்வி இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சியிலே கருத்து வேற்றுமையை ஏற்படுத்தியுள்ளது.

சீன—இந்திய யுத்தம் சம்பந்தமாக இன்னும் திட்டவட்டமான ஒரு முடிவைச் செய்ய முடியாத சங்கடமான நிலைமையில் சிக்கித் தவிக்கிறது இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி. இது சம்பந்தமாக மாஸ்கோ முடிவு என்ன என்பது இன்னும் தெரியவில்லையாம்.

மாஸ்கோ உத்தரவின்றி சுயேச்சையாக எந்த முடிவையும் செய்யக்கூடிய நிலையில் கொம்யூனிஸ்ட் கட்சி இல்லை. ஏனெனில் கட்சி ஒரு முடிவைச் செய்து, பின்னர் ரஷ்யாவின் போக்கு இந்த முடிவுக்கு மாறானதாயிருந்தால் விபரீதம் விளைந்துவிடுமல்லவா? எனவே இலங்கைக் கொம்யூனிஸ்டு மேலிடம், மாஸ்கோ முடிவு தெரியும் வரை காத்திருக்கிறதாம்.

மாஸ்கோவில் ரஷ்யக் கொம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி அண்மையில் கூடுகிறது. சீன ஆக்கிரமிப்பு சம்பந்தமாக அக்

(19-ம் பக்கம் பார்க்க)

## பேர்ஸ் டயறிகள் [PURSE DIARIES] 1963

| | |
|---|---|
| இங்கிலிஷ் பேர்ஸ் டயறி (No. 5)<br>(இரண்டு பக்கத்திற்கு ஒரு கிழமை) | 2-10 |
| இங்கிலிஷ் பேர்ஸ் டயறி (No. 4)<br>(ஒரு பக்கத்திற்கு இரண்டு நாள்) | 2-60 |
| தமிழ் ஆங்கில பேர்ஸ் டயறி (No. 2)<br>(ஒரு பக்கத்திற்கு இரண்டு நாள்) | 2-60 |
| தமிழ் ஆங்கில பேர்ஸ் டயறி (No. 1)<br>(ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 3-10 |
| பின்னல் பேர்ஸ் டயறி (Business)<br>(ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 3-85 |
| டெஸ்க் பிளாஸ்டிக் டயறி (பெரியது)<br>(மூன்று பக்கத்திற்கு ஒரு கிழமை) | 2-95 |
| டேபிள் பிளாஸ்டிக் டயறி (பெரியது)<br>(ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 4-35 |
| புள்ஸ்காப் டயறி (கலிகோ பைண்ட்)<br>(ஒரு பக்கத்திற்கு ஒரு நாள். வர்த்தகர்கள் கணக்குப் புத்தகமாகப் பாவிக்கக் கூடியது) | 13-50 |
| வலற் (Wallet) டயறி<br>(2-50 பெறுமதியான வலற் பேர்ஸ் கொண்டது) | 4-85 |
| டேபிள் கலண்டர் (Table Calender)<br>(பிளாஸ்டிக் ஸ்டான்டுடைய மேசைக் கலண்டர்) | 4-75 |


குறிப்பு : விரும்பும் டயறியின் விலையையும், டயறி ஒன்றுக்கு 35சதம் தபாற் செலவும் அனுப்பினால் பார்சலில் அனுப்பப்படும்.

மெய்கண்டான் அச்சியந்திரசாலை,
161, செட்டியார் தெரு, கொழும்பு.

சீன ஆக்கிரமிப்பு எதிர்ப்பு இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேற்கு, மத்திய எல்லைப் பகுதி




H—H காஷ்மீரில் இந்திய—பாகிஸ்தான் யுத்த நிறுத்தக் கோடு.
= இந்திய—சீன எல்லைக் கோட்டுக்குத் தெற்கே இரட்டைக் கோடிட்ட பகுதி வரை சீனு தனது பிரதேசம் எனக் கோருகிறது.
A A அக்சாய்—சின்வீதி—சீன மாகாணங்களாகிய சிங்கியாங்கையும் திபெத்தையும் இணைப்பது.
Z—Z L மத்திய எல்லைப் பகுதி.
சுகுல் — அடுத்த கட்டத்தில் யுத்த பிரபல்யமடையப் போகும் காஷ்மீர் பட்டினம்.
ஸ்ரீநகர் — காஷ்மீர் தலைநகரம்.
பாரகோட்டி — முதன் முதல் சீனு ஊடுருவிய பிரதேசம்.

# மக்மஹன் கோட்டை ஏற்க மக்கள் சீனு மறுப்பதேன்?

**மக்மோஹன் எல்லைக் கோடுதான் சர்வதேசங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்திய—சீனு எல்லைக் கோடாகும். இந்த எல்லைக் கோட்டை சீனுவும் நேற்றுவரை ஏற்றுக் கொண்டிருந்தது. ஆனால் இன்று ஏற்க மறுத்து, இந்தியாவுடன் போர் தொடுக்க முற்பட்டுவிட்டது.**

**எல்லைப் புறங்களிலுள்ள நாடுகளின் விபரங்களையும், போர் உச்சமடைந்துள்ள பகுதிகளையும், பட விளக்கங்களையும் இங்கு காணலாம்**

இந்தியாவிற்கு வடக்கே இருக்கிறது சீனு. இவ்விரண்டு பிரமாண்டமான நிலப் பரப்புகளுக்குமிடையே இருக்கின்றன இமயமலைத் தொடர்கள். இமய மலைத் தொடர்கள் கடல் மட்டத்திலிருந்து சுமார் 30,000 அடி உயரத்திலும் உண்டு. இந்த உயரத்தில் இருக்கின்றது திபெத் பீடபூமி. "உலகத்தின் முகடு" என்று அழைக்கப்படும் இந்தப் பீடபூமியின் தென்புறத்துச்சுவர் முகப்பாக அமைந்திருக்கின்றன இமய மலைத் தொடர்கள். சீன-இந்திய எல்லையில் இம்மலைத்தொடர்கள் முக்கியமானவை.

சீன-இந்திய எல்லை மேற்கே அப்கானிஸ்தான் மே. பாகிஸ்தான் எல்லைகளிலிருந்து கிழக்கே பர்மா எல்லைவரை (B) நீடிக்கிறது. ஆனால் இடையில் இந்த எல்லை தொடர்பு அற்றிருக்கிறது. ஏனெனில் இமாலய மலை அடியில் இந்தியாவுக்கும் சீனுவுக்குமிடையே இருக்கிறது நேபாளம். (படம் பார்க்க). இது ஒரு பூரண சுயாதிபத்திய இராச்சியம்.

நேபாளத்துக்குக் கிழக்கே நேபாளத்துடன் ஒட்டியபடி சிக்கிம் என்ற இராச்சியம் உண்டு. சிக்கிமுடன் ஒட்டியபடி கிழக்கே இருக்கிறது பூட்டான். சிக்கிம், பூட்டான் ஆகிய இராச்சியங்களும் இந்திய பாதுகாப்புக்கு உட்பட்டவை. வெளிநாட்டுத் தொடர்புகளில் பூரணமாகவும் உள்நாட்டு விவகாரங்களில் சில அம்சங்களிலும் இந்தியா இந் நாடுகளில் ஒப்பந்தங்கள் மூலம் உரிமை பெற்றிருக்கிறது. சிக்கிம் பூட்டான் எல்லைகளைத்

குர்மி

தவிர்த்து இந்திய-சீன எல்லை சுமார் 2,200 மைல் நீளமானது. இவ்வெல்லையை கிழக்கு, மத்திய, மேற்குப் பகுதிகளெனப் பிரிக்கலாம்.

### மேற்குப் பகுதி

மேற்கே அப்கானிஸ்தான், மே. பாகிஸ்தான் எல்லையிலிருந்து பஞ்சாப் எல்லைவரை (Z வரை) மேற்கு எல்லைப் பகுதியாகும். காஷ்மீரின் வடமேற்குப் பகுதியான ஜில்கிட்டிலிருந்து அக்சாய்-சின் வரை நீடிக்கும் எல்லைக்கோடு மேற்கு கிழக்காகப் போவதை [(அ) படத்தில்] காணலாம். இந்த எல்லைக்கோட்டுக்கு வடக்கே இருக்கிறது சீனுவின் பகுதிகளிலொன்றான சிக்கியாங் மாகாணம்.

அக்சாய்-சின்னிலிருந்து தெற்கே திரும்பும் எல்லைக் கோடு காஷ்மீர் பிரதேசத்தின் தெற்குப் புறத்திலிருக்கும் பஞ்சாப் எல்லை [(அ) படத்தில் Z] வரை செல்கிறது. காஷ்மீரின் இப்பகுதிக்கு லடாக் என்று பெயர். அக்சாய்-சின்னுக்குக் கிழக்கேயுள்ள சீனப் பிரதேசம் திபெத்.

சிக்கியாங், திபெத் ஆகிய பகுதிகளுடனிருக்கும் இந்திய எல்லைக்கோடு சுமார் 1100 மைல் நீளமானது. இதில்சுமார்மூன்றில்இரண்டு லடாக் பிரதேசத்தையொட்டியிருக்கிறது. சீனர் உரிமை கோரும் பிரதேசம் எல்லைக்குத் தெற்கே இரட்டைக் கோடிட்ட பகுதி [படம்(அ)] களை உள்ளடக்கியிருக்கிறது.

மத்திய, கிழக்கு எல்லைப் பகுதிகளை உட்படுத்தி சீனர் உரிமை கோரும் இந்தியப் பிரதேசத்தின் முழுப்பரப்பும் 50,000 சதுர மைல். இலங்கையைப் போல இரண்டு மடங்கு விஸ்தீரணம்!

சீன-இந்திய எல்லைப்பகுதிகளில் வெண்பனிக்கட்டிகளைத் தவிர வேறெதையுமே காணமுடியாது. நிர்மானுஷ்யமான பிராந்தியம். இங்கே எல்லைக் காவல் கோஷ்டிகள் கூடப்பாராவுக்குத் தானும் செல்வது மிக மிகக் குறைவு. இதனால்தான் லடாக்கிலுள்ள அக்சாம்-சின் பகுதியில் பெரிய ராஜவீதி ஒன்றை [(அ) படத்தில் A யிலிருந்து A வரை] சீனு கட்டி முடித்திருக்கிறது! சிங்கியாங்கையும் திபெத்தையும் இணைக்கும் நவீன வசதிகள் கொண்ட பிரமாண்டமான வீதி இது!

நீண்ட காலப் பாரம்பரியமாயிருந்தது இந்த எல்லை. அப்பொழுது சுதந்திரமாயிருந்த காஷ்மீர் இராச்சியத்தின் பிரதிநிதிகளும், திபெத் நாட்டின் தலாய் லாமாவின் பிரதிநிதிகளும் ஒன்று கூடி இந்தப்பாரம்பரிய எல்லைக்கு ஒப்பந்த பூர்வமான அங்கீகாரம் கொடுத்தார்கள், 1842ல். 1847ல் இந்திய (பிரிட்டிஷ்) அரசாங்கத்திற்கு எழுதிய கடிதமூலம் இந்த எல்லையைச் சீனு ஏற்றுக் கொண்டது! 1893ல் உத்தியோக பூர்வமாக வெளியிட்ட சீனப் படமொன்றில் இன்று இந்தியப் படங்கள் காட்டும் எல்லை ஆதரிக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

### மத்திய பகுதி

படம் (அ)வில் Z லிருந்து-Z L வரை இருப்பது மத்திய எல்லைப்பகுதி. பஞ்சாப் இமாசலப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், ஆகிய இந்தியப் பகுதிகள் இந்த எல்லையிலுள்ள இந்தியப் பிரதேசம். காஷ்மீரை லடாக் முடிவிலிருந்து (Z) நேபாளம் வரை (ZL) நீடிக்கிறது சீன-இந்திய மத்திய எல்லைப் பகுதி. உத்தரப் பிரதேசத்திலுள்ள பாரகோட்டியில் தான் முதன் முதல் ஜூன் 1955ல், சீனர் தம் இந்திய ஊடுருவலை ஆரம்பித்தார்கள்.

### நீர்ப் பிரிவு

மலைத்தொடர்கள், நதிகள் போன்ற இயற்கை எல்லைகளைச் சர்வதேசிய எல்லைகளாக ஏற்றுக் கொள்வது வழமை. இந்த வழமையை ஒப்பந்தங்கள் மூலம் சட்டபூர்வமாக்கிக் கொள்ளுவார்கள். மத்திய பகுதியிலும் சரி ஏனைய பகுதிகளிலும் சரி பல நூற்றாண்டு காலமாக அனுசரிக்கப்பட்ட எல்லைகளையே இந்தியா வற்புறுத்துகிறது. அத்துடன் இந்த எல்லைகள் சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டவை என்பதையும் இந்தியா நிரூபிக்கிறது.


மலைத்தொடர்கள் எல்லைகளாக ஏற்றுக் கொள்ளப்படும் பொழுது மலை உச்சியிலிருந்து இரு புறங்களுக்கும் ஆற்று நீர் பிரிந்து ஓடும் நீர்ப்பிரிவு (Water Shed)க் கோட்டை எல்லையாக ஏற்றுக் கொள்வதே வழமை. மத்திய எல்லையிலும் இந்தியா இதே கொள்கை அடிப்படையிலேயே தனது நியாயத்தை வற்புறுத்துகிறது. வெகு சமீபத்தில் 1958ல் பிரசுரமான சீனப் படங்களே இந்த எல்லையை எடுத்துக்காட்டுகின்றன!

உத்தரப் பிரதேசத்தில் இந்தியாவிற்கும் திபெத்திற்கும் (சீனு) இடையே கங்கை-சட்லெஜ் ஆகிய நதிகளின் நீர்ப்பிரிவே எல்லையாயிருக்கிறது. சட்லெஜ் நதியின் மேற்கு கிழக்குக் கிளைகளுக்கு நடுவேயுள்ள நீர்ப்பிரிவு இமாசலப் பிரதேசத்தில் எல்லையாயுள்ளது. ரூ-ஸ்பிதி நதிகளின் நீர்ப்பிரிவு பஞ்சாபில் இல்லை.

மலைகளும் பெரிய மலைத் தொடர்களும் இந்தக் கதையைச் சொல்லும் பொழுது சீனர்கள் அதே மலைகளைப் பெயர்த்து விழுங்கிவிடலவா ஏப்பம் விடுகிறார்கள்!—

(3-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு எல்லைப் பகுதி





= மக்மோகன் கோட்டிற்குத் தெற்கே இரட்டைக் கோடு வரையுள்ளது, சீனு உரிமை பாராட்டும் பிரதேசம்.
வட கிழக்கு எல்லைப் பிராந்தியத்தின் உப பிரிவுகள்:
1- காமெங் — தலைநகர்: பொம்திலா
2- சுபன்ஸ்ரீ — தலைநகர்: சைரோ
3- சியாங் — தலைநகர்: அலாங்
4- லோஹீட் — தலைநகர்: தேயு
[அஸாம் (இந்திய) எல்லைப் புறத்திலுள்ள இந்திய இராணுவம் பின்வாங்க வேண்டி ஏற்பட்டால் இந்தியாவிற்குள் தப்பிச் செல்ல இருக்கும் ஒரே பாதை நேபாளத்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் இருக்கும் ஒடுங்கிய பிரதேசம் என்பது கவனிக்கத்தக்கது. பூட்டான் அல்லது சிக்கிமிற்கு ஊடாக மேலும் ஒரு முனையில் சீனு யுத்தத்தை ஆரம்பித்தால் அஸாமிலுள்ள இந்திய இராணுவத்துக்கும் பேராபத்து ஏற்படலாம்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீன ஆக்கிரமிப்பு:**

# எதேச்சாதிகாரத்தின் பாய்ச்சலே!

## ஈழத்துக் காந்தியும்—ஆசிய ஜோதியும்



சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து நடக்கும் போராட்டத்தில் எங்கள் பரிபூரண ஆதரவு உங்களுக்கே என்று ஈழத்துக் காந்தி ஆசியாவின் ஜோதிக்கு உறுதி கூறுகிறார்.

## நாட்டைக் காப்போருக்கு நாமும் துணை நிற்போம்

**இயற்கையாக அமைந்துவிட்ட எல்லைக் கோட்டினையே மதியாமல் சீனு இன்று நாடு பிடிக்கும் படலத்தில் இறங்கிவிட்டது. இரு நாடுகளுக்குமிடை நடைபெறும் இப் போராட்டம் ஜனநாயகத்துக்கும், எதேச்சாதிகாரத்துக்குமிடையே நடைபெறும் போராட்டமாகும். ஜனநாயகத்தைக் காப்பாற்ற இந்தியா எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் ஆதரவளித்து வருகின்றனர். இந்தியாவின் சுதந்திரம் பறி போனுல் இலங்கைக்கும் ஆபத்துத்தான். இந்தியாவுக்கு உதவும் வகையில் போராட்டத்தில் பங்கு கொள்ள இங்குள்ள இளைஞர்களும் தயாராகவுள்ளனர்.**

இந்தியாவுடன் தனது எல்லைத் தகராறைத் தீர்ப்பதற்கு சீனு இந்தியா மீது படையெடுத்தது கண்டிக்கப்படவேண்டிய விடயம்.

ஏகாதிபத்திய வாதிகளால் வகுக்கபட்ட எல்லையென்று சிலரால் வர்ணிக்கப்படும் மக்மோகன் எல்லை உண்மையில் இயற்கையன்னையால் ஆயிரமாயிர மாண்டுகளுக்கு முன்னே வகுக்கப்பட்டது. இது எப்படி என்றுல் இந்த எல்லைக்கு வடக்கே பெய்யும் மழைநீர் திபெத்திற்குள்ளும் தெற்கே பெய்யும் மழை நீர் இந்தியாவிற்குள்ளும் பாய்கிறது. இந்நிலையில் இவ் வெல்லையைநிராகரித்து சீனு இந்தியாமீது படையெடுத்ததைக்கண்டிக்காமல் இருக்க முடியாது.

எல்லைத்தகராறு தொடங்கிய போதிலும் பார்க்க தற்போது கூடுதலான இந்தியப் பிரதேசத்தைச் சீனு தனதென்று கொண்டாடுகிறது. இந்தியத் துருப்புக்கள் தற்பொழுது இருக்குமிடத்திலேயே சண்டையை நிறுத்தி சமரசப் பேச்சு நடத்தும்படி இந்தியாவை யாராகுதல் கேட்டால் அது நீதி நியாயமற்ற வேண்டுகோளில்லாது பிறிதொன்றில்லை.

ஏனென்றுல் இந்தியப்பிரதேசத்தில் எவ்வளவோ பகுதியை சீனத் துருப்புக்கள் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டனர்.

இந்திய மக்கள் இன்றைய நிலையில் தமது நாட்டிற்காக மட்டுமல்லாது ஜனநாயகத்திற்காகவும் பிறநாடுகளின் சுதந்திரத்திற்காகவும் போராடுகின்றனர் என்றே கொள்ள வேண்டும். முக்கியமாக இந்தியாவின் சுதந்திரம் பறிபோனுல் இலங்கையின் நிலை என்னவாகும் என்று சொல்லவே தேவையில்லை.

இந்த யுத்தத்தில் இந்தியாவின் மேல் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் அளவு கடந்த ஆதரவை நாளுக்கு நாள் காட்டிவருவதையிட்டு பெருமைப்படுகிறேன். அவர்கள் இந்தியப் பாதுகாப்பு நிதிக்குப் பொருளுதவி செய்வதோடு நில்லாது, இளைஞர்கள் சிலர் போரிலும் பங்கெடுக்க விரும்புவதாக எனக்கு அறிவித்திருக்கிறார்கள்.

—எஸ். ஜே. வி. செல்வநாயகம்.

### நாவலர் நெடுஞ்செழியன் இரத்த தானம்

தி. மு. க. சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர், நாவலர். இரா. நெடுஞ்செழியன், எல்லையில் போராடும் வீரர்களுக்கு இரத்த தானம் கொடுப்பதாக அறிவித்துள்ளார். சமீபத்தில், சிறையிலிருந்து விடுதலையான திரு. நெடுஞ்செழியன், வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், ஐ. நா. சபை சீனரை முறியடிக்க தனது படைகளை இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும் என்றும், தி. மு.க. தனது முழுச்சக்தியையும், சீனரை விரட்டப்பயன்படுத்தும் என்றும் கூறியுள்ளார். சென்னை சர்க்கார் அமைத்திருக்கும் பாதுகாப்பு கமிட்டியில், நாவலர் நெடுஞ்செழியன் தி. மு. க. சார்பில் அங்கம் வகிக்கிறார்.

**தி. மு. கழக எம்.பிக்கள்**

தி. மு. க. எம். எல். ஏக்களைப்போலவே, தி. மு. க. எம். பிக்கள் ஒன்பது பேரும் ஒவ்வொருவரும் தங்கள் ஒரு மாத சம்பளமான ரூபாய் 400/- போர் நிதிக்கு தருவார்கள் என அறிஞர் அண்ணு கூறியிருக்கிறார்.

நவம்பர் 15ம் தேதியிலிருந்து தமிழகம் பூராவும் சீன ஆக்கிரமிப்பு எதிர்ப்பு கூட்டங்கள், நடத்தி நிதி திரட்ட, அறிஞர் அண்ணு சுற்றுப்பயணம் நடத்துவார்.

## மக்மஹுன் கோட்டை ஏற்க...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கம்யூனிஸ்டுகள், அவர்கள்!!

### கிழக்கு எல்லைப் பகுதி

கிழக்கு எல்லைப் புறத்துக்குப்போகுமுன் சிக்கிம் பூட்டான் எல்லையில் ஒரு வினுடி நிற்கலாம். இந்திய ஆதிபத்தியத்திற்குட்பட்ட இவ் விராச்சியங்களின் எல்லைத் தகராறுகள் இந்தியாவின் பிரச்சினைகளே. இவற்றுள் சிக்கிம் எல்லை 1890ல் ஒப்பந்தம் மூலம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனுல் பூட்டான் பற்றி வழமையான எல்லை சட்டபூர்வமாக ஒப்பந்தம் செய்யப்படவில்லை. மேலும் ஒரு இந்திய-சீன தகராறுக்கும போதிய முகாந்திரம் இது. அத்துடன் பூட்டானில் பெருமளவு பகுதிகள் சீனப் படங்களில் சீனப்பிரதேசங்களாகளாகக் காட்டப்பட்டிருக்கின்றன! படையெடுப்பை விரைவில் எதிர்பார்க்கலாம்?

### மக்மஹுன் எல்லைக் கோடு

பூட்டானிலிருந்து கிழக்கே பர்மா எல்லைவரை நீடிக்கும் இந்திய-சீன எல்லைப் பகுதியே மக்மோஹுன் எல்லைக் கோடு எனப்படுகிறது. இந்தியாவின் வடகிழக்கு மூலையிலிருக்கும் வடகிழக்கு எல்லைப் பிராந்தியத்தில்தான் இன்று பிரதான படையெடுப்பு நிகழ்கிறது. எல்லைக் கோட்டுக்கு அண்மையிலுள்ள பெளத்த மடாலயப்பட்டினமாகிய தவாங் இன்று சீனர் வசமாகிவிட்ட ஒரு பட்டினம்.

நீர்ப்பிரிவு அடிப்படையில் இயற்கையாகவும், பாரம்பரியமாகவும், நீண்ட நூற்றுண்டு நிர்வாகம் காரணமாகவும் வழமையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட எல்லையைச் சட்டபூர்வமாக்கி ஒப்பந்தஞ் செய்யப்பட்டதே மக்மோஹுன் எல்லைக்கோடு. திபெத், சீன இந்திய அரசாங்கங்களின் பிரதிநிதிகள் கொண்ட ஒரு முக்கூட்டு மாநாட்டில் சிம்லாவில் 1914ல் கையொப்பமாகிய ஒப்பந்தம் மக்மோஹுன் எல்லைக்கோட்டைச் சட்டபூர்வமாக்கியது. சீனப்பிரதிநிதியாகிய ஐவான்-சென்னின் கையொப்பத்தைச் சீன அரசாங்கம் பின்னுல் மறுதலித்தது உண்மையே. ஆனுல் சீனுவுக்கும் (இந்தியாவுக்குமிடையே இருந்த) திபெத்துக்கும் உள்ள எல்லை பற்றியே சீனு மறுத்துக் கூறியது. இந்திய-சீன எல்லை பற்றி மக்மோஹுன் கோட்டை சீனு மறுதலித்தது கிடையாது—நேற்றுவரை.


சமீபத்தில் பர்மாவுடன் செய்து கொண்ட எல்லை ஒப்பந்தத்தில் மக்மோஹுன் கோட்டைச சுமார் 120 மைல் வரை பர்மா-சீனு எல்லை வரையறையாகச் சீனு ஏற்றுக் கொண்டிருப்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

படம் (ஆ) வில் இந்திய எல்லைப் பட்டினமாகிய கிபுட்டுவிற்கு கிழக்கே நீண்டிருக்கும் கோடு பர்மா-சீனு எல்லையைக் குறிக்கிறது.

நீண்ட நூற்றுண்டுகளான நிர்வாகம், வாழும் மக்கள் இன ஒற்றுமை, இயற்கை அடிப்படையான எல்லைக் கோடு, பல நூற்றுண்டு கால வழமை ஆகிய பலமிக்க அடிப்படையில் நிறுவப்பட்டு, ஒப்பந்தங்கள் மூலம் சட்ட வலுப்பெற்ற எல்லைக் கோட்டை அத்துமீறிச் சரித்திரப் பழமை மிக்க நட்புறவை உதறி எறியும் சீனு [illegible] பத்தை அம்பலமாக்கிவிட்டது.

**பாரத நாடு**

ஈனப் பறையர்களேனும்
—அவர்
எம்முடன் வாழ்ந்திங்
கிருப்பவர் அன்றே?
சீனத் தராய் விடு வாரோ?-
பிற
தேசத்தர் போற்பல
தீங்கிழைப் பாரோ?
—பாரதியார்




**ஒனேடா எப்படி முன்னணியில் நிற்கிறது?**

★ வருடமொன்றுக்கு 85 லட்சம் தொன் சீமந்து உற்பத்தி செய்யும் ஆசியாவிலே ஆகப் பெரியதும், பழமைவாய்ந்ததுமான ஒனேடா சீமந்து கம்பனியால் தயாரிக்கப்பட்டது.

★ ஜப்பானிய சீமந்து ஏற்றுமதியாளரிடையே தொடர்ச்சியாக முன்னணியில் நிற்கிறது.

★ அமெரிக்க பிரித்தானிய நிர்ணயத்திட்டத்திற்குச் சமதையானது.

எனவே நீங்கள்

**செண்ட் அந்தனீஸ் ஹாட்வேயார் ஸ்டோர்ஸ் லிமிட்டிடமிருந்து**

ஒனேடா வாங்கும் போது ஆசியாவிலேயே சிறந்த சீமந்து வாங்குகிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் நிலை சர்வதேசச் சட்டத்துக்கு முற்றிலும் முரணானதாகும்

## எல்லைகள் பற்றிய சட்ட நுணுக்கங்களை விளக்குகிறார் டாக்டர் கிருஷ்ணராவ்

"இந்திய—சீன எல்லைப் பிரச்சினையில் சீனாவின் நிலை சர்வதேசச் சட்டத்துக்குட்பட்டதாகாது. சர்வதேச எல்லைகள் கட்டாயமாக நிர்ணயிக்கப்பட வேண்டுமென்ற விதி சர்வதேச சட்டத்தில் கிடையாது" என்று டாக்டர் கிருஷ்ண ராவ் ஒரு கட்டுரையில் கூறுகிறார்.

டாக்டர் கே. கிருஷ்ண ராவ், இந்திய வெளிநாட்டு விவகார இலாகாவின் சட்ட ஆலோசகராவார். அவர் சர்வதேசச் சட்ட சஞ்சிகை ஒன்றில் அண்மையில் எழுதியுள்ள கட்டுரையில், இந்திய—சீன எல்லைப் பிரச்சினையில் சீனாவின் நிலை சர்வதேசச் சட்டத்துக்குட்பட்டதாகாதெனக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது கட்டுரையில் வெளியிட்டுள்ள கருத்துக்கள் இந்திய அரசாங்கத்தின் கருத்துக்கள் என்று கருத வேண்டும் என்பதில்லை.

டாக்டர் ராவின் கட்டுரையில், சீனர் எடுத்துக்கொண்டிருக்கும் நிலையைப் பற்றி விபரமாகக் கூறப்பட்டுள்ளது.

சீனாவின் நிலை இதுதான்: சீன—இந்திய எல்லைகள் 'சீனத்தின் திபேத் பகுதிக்கெதிராக ஆக்கிரமிப்பு செலுத்தும் பிரிட்டிஷ் கொள்கை'யின் அடிப்படையிலேயே வகுக்கப்பட்டன. சீன—இந்திய எல்லை ஒருபோதும் நிர்ணயிக்கப்படவேயில்லை.

இந்தியாவின் நிலை பற்றியும் டாக்டர் ராவ் கூறுகிறார், தமது கட்டுரையில். சீன—இந்திய எல்லை முழுவதும் திட்டவட்டமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது ஒப்பந்தம் அல்லது வழக்கம் அல்லது இரண்டு முறைகளிலும் நிர்ணயிக்கப்பட்டதாகும். இப்படி நிர்ணயிக்கப்பட்ட எல்லை வரைக்கும் இந்தியா செலுத்திவந்த அதிகாரத்தை இதுவரை, எந்தச் சீன அரசாங்கமும் ஆட்சேபித்ததில்லை.

### அந்த விதி சர்வதேசச் சட்டத்திலில்லை

எல்லை நிர்ணயம் பற்றி டாக்டர் ராவ் குறிப்பிடுகையில், சர்வதேச எல்லைகள் கட்டாயமாக நிர்ணயிக்கப்பட வேண்டுமென்ற விதி சர்வதேசச் சட்டத்தின் கீழ் இல்லை என்று கூறுகிறார்.

நாடுகளுக்கிடையே எல்லைகள் பற்றிச் சச்சரவு வரும் போதெல்லாம், நீண்டகாலமாக ஏற்று வரப்பட்ட எல்லைகளையே சரியெனக்கொள்வதே சாதாரண வழக்காகுமென்றும், இதற்கு உதாரணமாக, லத்தீன் அமெரிக்க நாடுகளில் அவற்றின் ஸ்பானிய, போர்த்துக்கேய ஆட்சியாளர்களின் பிரதிநிதிகளால் வரையறுக்கப்பட்ட எல்லைகளைத்தான் இன்றும் ஏற்று வருகிறார்களென்றும் டாக்டர் ராவ் மேலும் தமது கட்டுரையில் விளக்கம் தருகிறார்.

'இரு நாடுகள், குறிப்பிடப்பட்ட எல்லைக்குள் நின்று சில குறிப்பிடப்பட்ட இடங்கள் வரைக்கும் நீண்டகாலமாக நிர்வாக நடவடிக்கைகள் எடுத்துவந்தால், அந்தக் குறிப்பிடப்பட்ட இடங்களைச் சேர்க்கும் கோடுதான் இரு நாடுகளுக்குமிடையேயுள்ள எல்லைக் கோடாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.'

'இந்தக் குறிப்பிடப்பட்ட இடங்களில் அரசாங்க நடவடிக்கைகள் நடைபெறுவதற்கு உறுதியளிப்பது என்னவெனில், கால வளர்ச்சியின் அனுசரணையின்கீழ், தற்போது வழங்கிவரும்நிலை சர்வதேச ஒழுங்குமுறைக்கு உட்பட்டதொன்றாகும் என்ற பொது நம்பிக்கையே.'

### 1684 தொடக்கம்......

சீன—இந்திய எல்லையின் சரித்திரத்தை விவரமாக ஆராயப்புகும் இக்கட்டுரை லடாக்குக்கும் திபேத்துக்குமிடையேயுள்ள எல்லை சம்பந்தமான ஒப்பந்தங்கள் 1684-ம் வருடம் தொடக்கமே கைச்சாத்திடப்பட்டு வந்திருக்கின்றன என்று கூறுகிறது.

இந்த எல்லை மீண்டும் 1842-ம் ஆண்டு வலியுறுத்தப்பட்டது. தலாய் லாமாவின் மாகாண கவர்னர்களுக்கும், காஷ்மீர் மகாராஜாவின் பிரதிநிதிகளுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தமொன்றிலே, மற்ற விஷயங்களுடன், "லடாக்குக்கும் திபேத்துக்குமிடையேஉள்ள எல்லை, ஏற்கனவே உள்ளது போலவே தொடர்ந்து இருக்கும்" என்றும் குறிப்பிடப்பட்டது.

### மூன்று காரணங்கள்

சீனா இந்த ஒப்பந்தத்தை மூன்று காரணங்களுக்காக ஏற்க மறுக்கிறது. (1) 1842 ஒப்பந்தத்துக்கு சீனா தனது பிரதிநிதி எவரையும் கலந்துகொள்ள அனுப்பவில்லை. அத்துடன் அதை அங்கீகரிக்கவும் இல்லை. (2) அந்த ஒப்பந்தம் திபேத்துக்கும் லடாக்குக்குமிடையேயுள்ள எல்லையைச் சரிவர நிர்ணயிக்கவில்லை. பொதுவாக, திபேத்தும் லடாக்கும் தமக்கிடையேயுள்ள எல்லைகளை அங்கீகரிக்க வேண்டுமென்றே குறிப்பிடுகிறது. (3) இந்த ஒப்பந்தத்துக்கு சிங்கியாங்கின் சம்மதம் பெறப்படவில்லை.

சீனாவின் இந்த நிலையைப் பற்றிக் குறிப்பிடுகையில், சீன ஆயுத உதவியில்லாவிடில் திபேத் ஸரவார் சிங்கின் துருப்புக்களை முறியடித்து, 1842-ம் ஆண்டு ஒப்பந்தத்தையும் செய்திருக்க முடியாதென்று டாக்டர் ராவ் கூறுகிறார். ஒப்பந்தத்தின் அம்சங்கள், சீனாவும் ஒப்பந்தத்துக்குட்பட்ட ஒரு அங்கம் என்பதை எடுத்துரைக்கின்றன.

திபேத்தின் விளக்கமும் இதை ஏற்றுக்கொள்கிறது. ஒப்பந்தத்தின் முன்னுரையிலே சீனாவும் ஒப்பந்தத்துக்குச் சார்புடைய நாடு என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆகவே, இந்த நிலையில், அங்கீகாரம்தேவையுமில்லை, தேவையென்று ஒப்பந்தம் விதியமைக்கவுமில்லை.

அப்படிச் சீனா ஒப்பந்தத்துக்குக் கட்டுப்பட்ட நாடல்ல என்று எடுத்துக்கொண்டாலும்கூட, ஒப்பந்தம் வெளியிடப்பட்ட பின்னரும், ஒப்பந்தத்தின் விதிகள் செல்லுபடியாகா என்று எந்த ஒரு காலத்திலும் சீனா பிரகடனம் செய்யாத பட்சத்தில், அவற்றை அது ஏற்றுக்கொண்டுள்ளது என்பதே அர்த்தம்.

### மாக்மாஹோன் எல்லைக் கோடு

மாக்மாஹோன் எல்லைக் கோட்டின் உறுதிநிலை பற்றிக் குறிப்பிடுகையில், டாக்டர் கிருஷ்ண ராவ், அந்தப் பிரச்சினை, 1914-ம் ஆண்டில் திபேத்துடன் பிரிட்டன் தனிப்பட்ட முறையில் செய்துகொண்ட ஒப்பந்தங்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறது என்று கூறுகிறார். திபேத்தின் மீது சீனாவின் ஆதிக்கத்தை பிரிட்டன் ஏற்றுக் கொண்டது என்று வைத்துக்கொண்டாலும், சிம்லா மாநாட்டுத் தீர்மானங்கள் வரைக்கும் கைச்சாத்திடப்பட்ட ஒப்[illegible] வடிக்கைகள் இவற்றைப்பற்றி [illegible]

திபேத்தின் மீது சீனாவுக்கு பிரிட்டனால் அங்கீகரிக்கப்பட்ட ஆதிக்க உரிமைகள்-அப்படிஏதாவது இருந்தால்-அவை உண்மையா என்பது புலப்படும். அத்துடன், திபேத்தின் 1913-ம் ஆண்டு சுதந்திரப் பிரகடனமும் இப்பிரச்சினையைப் பாதிக்கும். இப்பிரகடனத்துக்கு முன்னரே, பிரிட்டன் திபேத்துடன் தனிப்பட்ட முறையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடும்உரிமையைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததையும் நாம் கவனிக்க வேண்டும்.

சீனா திபேத்துடன்சேர்ந்து ஒப்பந்தங்களுக்குக் கைச்சாத்திட்டமை, பிரிட்டனுடன் மாத்திரமல்லாமல் சீனாவுடனும் ஒப்பந்தம் செய்யும் உரிமை திபேத்துக்கு உண்டு என்பதை நிலைநிறுத்தியது, என்கிறார் டாக்டர் கிருஷ்ண ராவ்.

மேலும் தமது கட்டுரையில் டாக்டர் ராவ் வேறு முக்கியமான தகவல்களையும் தெரிவிக்கிறார். சிம்லா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட சமயம் பிரிட்டிஷ் அரசாங்கம் திபேத் ஓர் சுதந்திர நாடென்பதை அங்கீகரித்திருந்தது இதை பிரிட்டிஷ் பிரதிநிதி சிம்லா ஒப்பந்த மாநாட்டுக்கு வந்திருந்த சீனப்பிரதிநிதியிடம் கூறியிருந்தார்.

### கையொப்பம் இருக்கிறதே!

"சீனா இந்த ஒப்பந்தத்தில் தாம் கையொப்பமிடவில்லை என்று கூறினாலும், அதன் பிரச்சினைக்குரிய விஷயமாக விளங்கியது, உள் திபேத்துக்கும் வெளித் திபேத்துக்குமிடையேயுள்ள எல்லைகளன்றி வேறொன்றுமல்ல. திபேத்தின் சுதந்திரத்தை அது ஆட்சேபிக்கவில்லை. அத்துடன், மாக்மாஹோன் எல்லைக்கோடு எங்கு அமைந்துள்ளது என்று தனக்குத் தெரியாதெனச்சீனா கூறமுடியாது. ஏனெனில், அதன் பிரதிநிதி, மாக்மாஹோன் எல்லைக்கோட்டைக் கொண்ட தேசப்படத்தை அங்கீகரித்துக் கையொப்பமிட்டிருக்கிறார் நிலைமை இப்படியிருந்தும், சீனா தொடர்ந்தும் மாக்மாஹோன் எல்லைக்கோடு பற்றித் தனக்குத் தெரியாது என்று கூறி வருவது வியப்புக்குரியதே.'

"சீனாவுக்கு அந்நேரத்தில் திபேத்தின் மீது எத்தகைய ஆதிக்கமும் இருந்ததில்லை. திபேத் சம்பந்தமாக 1919ல் சீனா முன்கொணர்ந்த தீர்மானங்களில் மாக்மாஹோன் எல்லையைப் பற்றிக் குறிப்பிடவேயில்லை. அத்துடன் எயிச்சிஸனுடைய ஒப்பந்தத் தொடரின் நான்காவது பதிப்பில் மாக்மாஹோன் எல்லைக்கோடு திட்டவட்டமாக வலியுறுத்தப்பட்டுள்ளது."

இந்தச் சந்தர்ப்பத்தில், 1914-ம் ஆண்டுக்கு முன் இருந்துவந்த இயற்கையான தேச வழக்கான, நிர்வாக எல்லைகளையே பிரிட்டிஷ்—இந்திய நிர்வாகம் ஏற்றுக்கொண்டது. பின்னர் 1936, 1938-ம் ஆண்டுகளில் மாக்மாஹோன் எல்லை திபேத் பிரதிநிதிகளால் வலியுறுத்தப்பட்டது. அண்மையில் சீனப் பலாத்காரமாக எல்லையை மீறிப் பிரவேசிக்கும் வரை, இந்த எல்லையே அங்கீகரிக்கப்பட்டு வந்திருக்கிறது.

### திபேத் ஒரு சுயேச்சை நாடு

1914 தொடக்கம் 1950 வரை திபேத்துக்கும் சீனத்துக்குமிடையே இருந்து வந்த தொடர்புகளை நாம் ஆராய்ந்தோமானால், திபேத் ஒரு சுயேச்சை நாடாகவே விளங்கிவந்ததென்பதையும் சீனா அதன் மீது ஆதிக்கம் செலுத்தவில்லையென்பதும் விளங்குவதுடன், இந்நிலையைச் சீனாவே ஏற்றுவந்துள்ளது என்பதும் ஊர்ஜிதமாகிறது. ஆகவே, இப்பொழுது திபேத்தின் மீது அதிகமான அதிகாரத்தைச் சீனா செலுத்துவதன் மூலம் "இந்திய—திபேத் ஒப்பந்தங்கள் செல்லுபடியாகா" என்று கூறிவிட முடியாது என்று கூறுகிறார் டாக்டர் கிருஷ்ண ராவ். சர்வதேசச் சட்டத்தின்படி, பிரச்சினைக்குரிய நிலப்பரப்பின் மீது எத்தகைய சட்ட உரிமைகளை எந்தவொரு நாடும் கொண்டாடியது என்பதே கேள்வி. இப்பரப்பின் மீது அரசாங்க நிர்வாகம் செலுத்தப்பட்டதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அல்லது கடமைகள் ஆற்றப்பட்டிருந்தால் அவையே அப்பரப்பின் மீது அந்நாடு சட்ட உரிமை கொண்டாடப் போதுமானது என்றும் சர்வதேசச் சட்டம் சொல்லுகிறது.

இந்தியாவுள் அண்மையில் ஏற்பட்டுள்ள சீன ஊடுருவல்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், இந்நடவடிக்கைகளுக்கு முன் பிரச்சினைக்குரிய இந்தியப் பரப்பின் மீது இந் நடவடிக்கைகள் எடுக்கும் நாட்டுக்கு எந்தவிதமான சட்ட உரிமையும்இருந்ததா, அப்படி உரிமையை அந்நாடு கொண்டாடியதா எனக் கண்டு, அப்படி ஏதுமிருந்தால், பிரச்சினை சர்ச்சைச்,

(17-ம் பக்கம் பார்க்க)

# கௌரவத்தை விலைபேசும் சமாதானம் வேண்டாம்


## சமரசம் பற்றி பிரதமர் நேரு

நவம்பர் முதலாந் திகதியன்று பாரதப் பிரதமர் நேரு, பெருமளவில் இந்தியாவை ஊடுருவும் சீனரை இந்தியா எதிர்த்து நிற்பதாகவும், எந்த நாள் வரை எதிர்க்க அவசியமோ அந்த நாள் வரை எதிர்த்தே நிற்குமெனவும், இந்த மாதிரி விஷயங்களில் அரைகுறை மனத்துடன் செயற்பட முடியாதெனவும் திட்டவட்டமாகக் கருத்துத் தெரிவித்தார்.

"கௌரவத்தை விலை கூறும் எந்தவிதசமரசத்துக்கும் இடமில்லை" என்றார் அவர்.

சமரசப் பேச்சு வார்த்தைகள் நடாத்தும்படி புத்திமதி கூறிய சில நாடுகளை மனதில் வைத்து, திரு. நேரு கூறினார்: "எங்களுக்கு சமாதானம்தான் வேண்டும். நாங்கள் சமாதான வழியையே தேட முயலுவோம். ஆனால், எமது கௌரவத்தை விலை கூறும் சமாதானம் சமாதானமாகாது."

"எங்களை எதிர்ப்பவன் எங்கள் சத்துராதியாகி விட்டான்!"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'குமாரச் செல்வன்''
ஏழாலை மேற்கு.

கே: சீன-இந்திய எல்லைப் பிரச்சினையில் மற்ற அரசியல் கட்சிகள் மதில் மேல் இருக்கையில், தமிழரசுக் கட்சி மட்டும் இந்தியாவை ஆதரித்து நிற்பது எதைக் காட்டுகிறது?

ப: அதர்மத்தையும், அநியாயத்தையும், ஆக்கிரமிப்பையும் கண்டிக்கும் துணிச்சல் கட்சிக்கு உண்டு என்பதைக் காட்டுகிறது.

கே: பிரபல கேசரி தயாரிப்பு நிபுணர் அப்பாக்குட்டி அம்மாளுக்கு, ஶ்ரீலங்கா சுதந்திர ஹோட்டல் யுனிவசிற்றியில், நளபாக புறபெசர்ப் பதவி கிடைத்தால் ஏற்றுக்கொள்வாரா?

ப: மாட்டார்—ஏனெனில், கேசரித்தயாரிப்பைக்கற்றுக் கொடுக்கும் இடம் அதுவல்ல.

ஃ

வெள்ளைச்சாமி, மாவத்தகம.

கே: என்னைக் காதலித்த பெண் என்னைத் திருமணம் செய்துகொள்ள மறுக்கிறாள். ஏன்?

ப: நீர் காதலுக்குத்தான் தகுதி—திருமணத்துக்கு அல்ல என்பது அந்தப் பெண்ணுக்கும் தெரியும் போலும்!

ஃ

புவனம், நெல்லிப்பழை.

கே: குயுக்தியாரே! பெண்களைப் பற்றி எழுதும் மாணவனை என்ன செய்யலாம்?

ப: சந்தி சிரிக்க வைக்கலாம்.

ஃ

சி. நடேசமூர்த்தி,
நெல்லிப்பழை.

கே: நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் இப்போது உயிருடனிருக்கிறாரா?

ப: நீர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கோஷ்டியைச் சேர்ந்தவரோ!

எம். எஸ். அப்துல்லா,
பெரியகிண்ணியா.

கே: மூதூர் இரண்டாவது பிரதிநிதி ஜனாப் மஜீத் அடுத்த தேர்தலில் தோல்வி அடைந்தால், இந்தியாவுக்குப் படத்தில் நடிக்க சென்று விடுவதாகக்கூறுகிறாராம். இதன் மர்மம் என்ன?

ப: அவர் நடிக்கத் தெரிந்தவர். இப்பொழுது வாக்காளரிடம் நடிக்கும் நடிப்பைப் பிறகு படத்திலும் நடிக்கலாம் என்று எண்ணுகிறார் போலும்.

கே: மாஜி நிதி மந்திரி பீலிக்ஸின் நவசிறிலங்கா, என்னவாயிற்று?

ப: மந்திரி பதவி போனதும் அவருடன் ஒட்டி நின்றவர்கள் விலகிவிட்டார்கள்! எனவே மீண்டும் மந்திரியாகிவிட்டார்.

ஃ

இதயராஜா, செம்பியன்பற்று.

கே: ஜனநாயக ஆட்சி முறையிலேயே இலங்கை மக்களை வழி நடத்துகிறோம் என்று கூறிக்கொள்ளும் ஆட்சிப் பீடத்தினர், அவசரகாலச் சட்டம் என்னும் அழுங்குப் பிடியை அகற்றாததின் மர்மம் என்ன?

ப: எதையும் அவசர அவசரமாகச் செய்ய வேண்டிய "ரொக்கட்" யுகம் இது. அதற்கு அவசரகாலம் அவசியமாகும். அது அகன்றுவிட்டால் அவசரகாலமில்லாத காலம்—அதாவது சட்டைவண்டிக் காலம்—வந்துவிடுமே!

த. நாகமுத்து, நீர்வேலி.

கே: நான் பெரும் சொத்து உரிமையுள்ளவனாயிருந்தும் எனக்கு ஒருவருமே மணமுடித்து வைக்க முன் வருகிறார்களில்லை. ஏன்?

ப: உங்களிடம் சொத்து இருக்கிற விஷயம் நாரீமணிகளுக்குத் தெரியாது போலும். இல்லையேல் நான் முந்தி, நீ முந்தி என்று போட்டி போட்டுக் கொண்டல்லவா ஓடி வருவார்கள், உங்களை மணக்க.

> ·திருவாளர்
> **குயுக்தியார்**
> C/o/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.

ஆர். ஆறுமுகம், கண்டி.

கே: ஒரு பெண்ணுக்கு ஒரு கணவன் போதுமா?

ப: போதாது. மூன்று கணவர்கள் தேவை. அவளைப் போஷிக்க ஒருவன், அவளைக் காதலிக்க ஒருவன், அவளை உதைக்க ஒருவன்.

ஃ

வி. எஸ். இராதாகிருஷ்ணன்,
திருமலை.

கே: நாட்டிலே பண வீக்கம் ஏற்பட்டால் நெருக்கடி தோன்றும் என்கிறார்களே, பண வீக்கம் என்றால் என்ன?

ப: பண வீக்கம் என்றால் எல்லாரும் பணக்காரர்களாவதும் ஆனால் அந்தப் பணத்தைக் கொடுத்து எதையும் வாங்க முடியாத நிலை ஏற்படுவதும் தான்!

ஃ

க. வேலாயுதம், பதுளை.

கே: குயுக்தியாரே, தங்களின் தாய மொழி என்ன?

ப: மௌனம்.

ஃ

செ. டொமினிக், கொழும்பு-13.

கே: இந்தியப் பிரதமர் நேரு தமது பதவியிலிருந்து ஓய்வெடுக்க நேர்ந்தால் இதற்குத் தகுதியுள்ளவர் யாரென்று கூற முடியுமா?

ப: இந்தியா ஒரு ஜனநாயக நாடு. அடுத்த பிரதமர் யார் என்பதை மக்கள் தான் நிர்ணயிக்க முடியும்.

ஃ

"எஸ். கே. சண்முகநாதன்''
வண்ணார்பண்ணை.

கே: மந்திரி சபை மாற்றத்தில, யாழ், எம். பி. க்கும் ஏதாவது கிடைக்குமா?

ப: கிடைக்காது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எம். பி. களுக்கு மட்டுமே அந்த வாய்ப்பு என்று அரசாங்கப் பாராளுமன்றக் குழு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

கே: சிறிமாவோ, அரசாங்கத்தின், மூன்றாவது நிதி மந்திரி திரு. கருங்கல்லையாமே?

ப: ஆம், கருங்கல்—லே.

ஃ

சி. யோகேஸ்வரி, காரைநகர்.

கே: சீனாவுக்கும், இந்தியாவுக்கு மிடையே நடைபெறும் போரைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: நான் வினோபா பாவேயின் சீடன். அவர் கூறுகிறார் இது கொம்யூனிஸத்துக்கும் ஜனநாயகத்துக்கும் நடக்கும் யுத்தமென்று—அதுதான் என் கருத்தும்.

ஃ

புரட்சிமணி, பலாங்கொட.

கே: மின்னல் வெட்டுக்கும் கன்னியின் கண் வெட்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று கூறுவீரா?

ப: வித்தியாசமில்லை. இரண்டும் செய்வது "பறிக்கும்" வேலை தான். அது கண்ணைப் பறிக்கிறது. இது காளையின் உள்ளத்தைப் பறிக்கிறது.

ஃ

மு. கருணாநிதி, ஏழாலை மேற்கு.

கே: ஓய் குயுக்தியாரே, சத்தியாக்கிரகம் நடக்கும் பொழுது என்ன செய்து கொண்டிருப்பீர்?

ப: சத்தியாக்கிரகச் செய்திகளைத் திரட்டி உடனுக்குடன் மக்களுக்கு வாரி வழங்கிக் கொண்டிருப்பேன்.

கே: அமெரிக்க ஜனாதிபதி தற்பொழுது என்ன செய்துகொண்டு இருக்கிறார்?

ப: கியூபாவில் தனக்குதான் வெற்றி என்று எண்ணிக் கொண்டிருக்கிறார். உண்மையில் வெற்றியடைந்தவர் குருஷேவ்தான் என்பது உலக அபிப்பிராயம்.

தேசமெல்லாம் புகழ் பெற்றது!
சிந்தனைக்கு மகிழ்ச்சியும், உடலுக்கு உற்சாகமும் தருவது—
சோம்பலை நீக்கி............சுறுசுறுப்பைத் தருவது
எல்லோரும் விரும்பும்
செய்யது பீடியே
கைதேர்ந்த தொழிலாளர்களைக்கொண்டு சுத்தமான 'அக்கூள்'
புகையிலையால் தயார் செய்யப்பட்ட செய்யது பீடியை
உபயோகித்து மன மகிழ்ச்சியும், உற்சாகமும் பெறுங்கள்
விசேஷ தயாரிப்பான 'செய்யது பீடி ஸ்பெஷல்'
கைக்கு அடக்கமான அழகிய பெக்கட்டுகளிலும்,
கட்டு லேபள் சுற்றப்பட்டும் வெளிவந்துள்ளது
செய்யது பீடி டிப்போ,
192, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12.
தொலைபேசி: 78001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயக்கு மொழி பேசும் கொம்யூனிஸ மாயவலை

## இந்தியாவின் தோழமையை உதறிய சீனு இலங்கைக்கும் வலை விரிக்கலாம்!

## கொம்யூனிஸ்டுகளின் கொள்கை கொடுமைகளுக்கு வித்திடுகிறது!

**மயக்கு மொழி பேசி மருட்டு விழி காட்டி, மாய வலை விசி இளம் உள்ளங்களைக் கவருகிறது கொம்யூனிசம். உள்ளே மறைந்திருக்கும் கேட்டை உணராது விட்டில் பூச்சிகளாகின்றனர் இவ்விளைஞர்கள். தோழமை கொண்டுறவாடிய இந்தியாவுக்கே உலை வைத்து, கொடுமை பல புரிய முனைந்த கொம்யூனிசம், வளரும் ஜனநாயகத்துக்கு கேடு விளைவிக்கும்; சிந்தனைக்கு விலங்கு பூட்டும் கொம்யூனிசம், தாயையும், தாய் நாட்டையும் அபகரிக்க முயலுபவர்களுக்கே ஆதரவு கொடுக்கும். மேற்றிய நாடு பிடிக்கும், கொள்கையைக் கண்டிக்க முனைபவர்கள், தாங்களே நாடு பிடிக்கும் படலத்தில் இறங்கியது ஏனோ?**

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்துப் பாலூட்டி வளர்த்த தாய் கொடியவன் ஒருவனின் கூரிய வாளுக்கிரையாகி உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் வேளையில், அவளருகில் சென்று அவளின் இறுதியைக் காணவும், கொடிய வனைப் பழி வாங்கவும் துடிதுடிக்கும் ஒருவனை, அவன் தோழன் இடை மறித்து, "இன்றிரவு என் வீட்டில் மது விருந்தொன்று படைக்கிறேன் உண்டு குடித்துக் களித்துவிட்டுப் போ. என்று கூறுகிறான். பொதுவுடமை வாதியான அவன், உயிர் துடிக்கும் தன் தாயை மறந்து தோழனின் அன்புக் கட்டளையிலே கட்டுண்டு, தன் செயல் மறந்து விடுகிறான் அத்தகைய ஒருவனை என்னவென்று கூறுவது? அவன் எத்தகைய கிராதகனாகவிருக்க முடியும்?

தாயையும், தந்தையையும், உறு துணைவியையும், இனத்தையும்- ஏன்? அன்பையும், பண்பையும் மிஞ்சி 'கொம்ரேட்' என்ற பதத்துக்கு மட்டுமே அடங்கி விடுபவன் தான் மேற் கூறப்பட்ட காட்டு மிராண்டிப் போக்குடைய கொம்யூனிஸ்ட் என்று கூறினால், அது மிகையாகாது. கொம்யூனிஸ்டுக்கு வர்க்க பேதத்தைக் கற்பிக்கும் வரட்டுக் கொள்கையைத் தவிர-வரையறுக்கப் பட்டு எல்லை கடவாத சிந்தனையை மீறிய-வேத வாக்கு கிடையாது.

தன்னுடைய கொள்கையை ஒத்த ஒருவனுக்கு தன் தாய் நாட்டையும், தன் பெற்றோரையும், உடன் பிறந்தாரையும், உறவினரையும், உற்றவரையும் காட்டிக் கொடுக்கத் தயங்க மாட்டான் ஒரு கொம்யூனிஸ்ட்.

### காட்டிக் கொடுக்கத் துணிவு!

சில வருடங்களுக்கு முன்னர் ஐரோப்பாவில், நடைபெற்றுக் கொண்டிருந்த கெடுபிடி யுத்தத்தின் போது இத்தாலியக் கொம்யூனிஸ்ட் தலைவர் 'தொகிலியத்தி' பகிரங்க அறிக்கை, ஒன்றை வெளியிட்டார். செம்படைகள் தன்னுடைய நாடான இத்தாலிக்குள், நாட்டை

ஈழத்தரசன்

அடிமைப்படுத்தும் நோக்குடன் பிரவேசிக்குமானல் அதைத்தான் இரு கை நீட்டி வரவேற்க முடியும், என்று.

துரோகச் செயல் புரிந்தாவது, காட்டிக் கொடுக்கும் கயமைத் தனம் கொண்டாவது சிவப்புச் சாயத்தைப் பரப்ப எப்போதும் தயாராகவிருப்பவர்கள் கொம்யூனிஸ்டுகள். கொம்யூனிஸ்டாக மாறும் ஒருவன் தன் மனதை எத்தகைய கொடுமைகளையும் ஏற்கவும், எவருக்கேனும் தயங்காது கொடுமைகளை இழைக்கவும், ஏற்ற முறையில் கடுமைப்படுத்திக் கொள்ளுகிறான்.

### வேறு வழியில்லையா?

மனித சமுதாயத்தில் மலிந்துள்ள ஏற்றத் தாழ்வுகளும், மனிதப் பண்புகளுக்கொவ்வாத இயல்புகளும் மாறி சரி நிலை சமாதானம் அடைய வேண்டுமென்பதை விரும்பாதவர்கள் எவருமே இல்லை. ஆனால் அத்தகைய இலட்சியத்தை அடைய மொஸ்க்கோவுக்கு வால் பிடிக்கவோ, பீக்கிங்கிற்குப் பந்தம் பிடிக்கவோ வேண்டிய அவசியம் இல்லை.

'புரட்சி' என்ற வார்த்தை தான் கொம்யூனிஸ்டுகளின் தாரக மந்திரம். இரத்தத்தில் குளிக்கவும், சமாதானம் விரும்பிகளை இரதத வெள்ளத்தில் குளிக்க வைக்கவும், விரும்புவது உண்மையான கொம்யூனிசமாகுமா? இரத்தப் புரட்சியுடன் தானு சமதர்மம் வளர முடியும்?

"ருஷியாவில் நடைபெறும் ஆட்சியைப் பார். சீனவில் வளரும் பொதுவுடைமைத் தத்துவத்தைப் பார்" என்று அவர்களுடைய வாழ்க்கை வழிகளை நாம் ஏன் கூறி வியந்து பாராட்டிக்கொள்ள வேண்டும்? தங்களுடைய வாழ்க்கை முறைகளை, வசதிகளை வெளிக்காட்ட இந்தியாவிலும் இலங்கையிலும் எதற்காக எண்ணற்ற விளம்பரங்களை மேற் கூறிய இரு தேசங்களும் பரப்ப வேண்டும்?

இங்குள்ள கொம்யூனிஸ்டுகளுக்கு குருச்சேவும், மாசேதுங்கும் தான் கடவுள்கள். மொஸ்கோவில் மழை பெய்தால் மலையகத்தில் குடை விரிப்பார்கள். பீக்கிங்கில் வெள்ளம் வந்தால் பொலன் நறுவையில் அணை கட்டுவார்கள்.

சுயபுத்தியுடனும், தன்னிச்சையுடனும், சமதர்மத்தை மக்களுக்குப்புகட்டி, பிரசார மூலமும், ஜனநாயகத்துக்கு முரணற்றவகையிலும் நல்லாட்சியை மலர வழி வகுப்பதே நியாயம். தனி ஒரு குழுவுக்கோ, ஒரு தனி மனிதனுக்கோ ஆட்சியை அர்ப்பணித்துவிட்டு, கால வரையறையின்றி—எத்தகைய கொடுமைகளையும் சகித்துக் கொண்டுவாழ வேண்டும் என்ற நிலையை உண்டாக்கவேண்டியது அவசியமில்லை.

### சுயசிந்தனைக்குத் தடை

ருஷியாவிலும், சீனவிலும், ஏனைய கொம்யூனிஸ்ட் நாடுகளிலும் மனிதனுடைய சிந்தனு சக்திக்கே மூடுதிரையிடப்படுகிறது. ஒருவனுடைய எண்ணங்களுக்கே கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. ஆளும் பொறுப்புப் பெற்றுக்கொண்ட ஒரு குழுவுக்கோ அல்லது தனிமனிதனுக்கோ கட்டுப்பட்டுவிடுகிறது அவனுடைய சிந்தனை. ஆளும் வர்க்கம் இழைக்கும் அநீதிகளுக்குக்கூட எவரும் 'ஏன்' என்று கேட்கமுடியாது. ஏன்? எதற்காக? எப்படி? என்ற வினக்களை எழுப்ப முடியாத-பகுத்தறிவற்றமிருகமாக மாற்றப்படுகிருன் தனிமனிதன். இத்தகைய ஆட்சிக்கு இங்கெல்லாம் வால்பிடிக்கும் பித்தர் கூட்டம் மலிந்துவருகிறது. கொம்யூனிசக் கொள்கை நல்லதுதான். அதை நடைமுறைக்குக் கொண்டுவரத் துடிக்கும் தற்கால கொம்யூனிஸ்டுகளின் பாதையும், கடைப்பிடிக்கும் நாடுகளில் [illegible] தீமையானவை.



# ரிஷி
# அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்து தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதை பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்து விடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

விலை 1 றாத்தல் ரூபா 35/00
" ½ " ரூபா 22/50

[தபாற் செலவு 95 சதம்]

ஆயுர்வேத டாக்டர்:
**T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்**

**ஞானசுந்தர வைத்தியசாலை,**
187, செட்டியார் தெரு, கொழும்பு.

## வெற்றி உனதே! புறப்படு

—கோவை மகேசன்—

எல்லைப் போரிது! எல்லைப் போரிது!
தொல்லை புரிந்து தூய்மையை மாய்க்க
துட்டராம் சீனர் தொடுத்த போரிது.
திட்டம் திட்டா திருந்திடும் வேளையில்
மட்டம் தட்டிட எண்ணிய சீனர்
மண்ணாசை கொண்டு தொடங்கியபோரிது.
பேராசைக்காரன் நாட்டைப் பிடுங்கிட
போர் தொடுத்துள்ளான்; புறப்படு வீரனே!

இந்திய, நாட்டின் தோழனய் நடித்து
இங்குளோர் கண்களில் மண்ணைத் தூவி
வடக்கு எல்லையை மடக்கிப் பிடிக்கும்
வஞ்சகச் சீனரை—அன்பிலா நெஞ்சரை
கம்யூனிஸ்ட் எனும் காலிகள் கூட்டத்தை
ஒருகை அணைக்க மறுகையால் குத்தும்
குறுகிய நெஞ்சக்—கொலை பாதகரை
துரத்தி யடிக்கும் தூய போரிது!

அன்னையின் மானம் காக்கும் போரில்
ஐம்பது வயதுக் கிழவர் துவக்கம்
ஐந்து வயதுப் பாலனும் வரட்டும்!
அன்னையர் குலமும் ஆர்ப்பரித் தெழட்டும்!
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
மானம் காக்க மடிவதே பெருமை!
தாயகத்துள்ள தமிழ்ப் பெரு மக்காள்!
தாயின் மணிக்கொடி காப்பதும் கடமை!

அநீதி என்றும் நிலைத்தது மில்லை;
நீதி என்றும் தோற்றது மில்லை.
வேட நெஞ்சச் சீனரை விரட்டி
வெற்றி வாகை சூடுவீர்; ஆமாம்!
தாயகத் தீரே! உமக்குறு துணையாய்
சேயக மக்கள் அருகினில் உள்ளோம்!
வெற்றியுமக்கே! வெற்றியுமக்கே!!
வீரம் விளைப்பீர்! வெற்றியுமக்கே!!

### விட்டில் பூச்சிகள்

பொதுவுடமை மலர்ந்தால், பாலும் தேனும் பாய்ந்தோடும் என்றும், அவ்வாட்சிக்காகப் பாடுபடும் பலருக்கும் பதவிகள்கிடைக்கும் என்றும் ஆசைகாட்டப்படுவதுண்டு. ஆனல் கொம்யூனிஸம் வளரப்பாடுபடும் எவரும் ஆட்சிமாறியதும் சிரச்சேதம் பண்ணப்பட்டுவார்கள். இதுபொதுவுடமை ஆட்சி மலர்ந்த நாடுகளில் கண்கண்ட உண்மைகள். புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றும் வரை தான் தோழமை. முன்னணியில் நின்று புரட்சியை நடத்துபவர்களில் ஒருவர் மட்டும் தான் தலைமைப் பதவியை அபகரித்துக்கொண்டு சர்வாதிகாரியாக வர முடியும். அவருடன் உழைத்தவர்கள் நிச்சயமாக அழிக்கப்பட வேண்டும். செல்வாக்கு அதிகம் பெறுபவன் இட்டதே கட்டளை. அதுவே சட்டம். 'உடன் சேர்ந்துஒத்துழைத்த தோழனயிற்றே! அவனுக்குக் கொஞ்சம் இரங்கலாம்' என்று விட்டுக்கொடுக்கும் தன்மை ஏற்பட இடமேயில்லை.

ஜனநாயக ஆட்சிமுறையில், இன்றுள்ள ஆட்சிபிடிக்கவில்லையென்ருல், வாக்குப் பலத்தால் ஆட்சியை மாற்றிவிடமுடியும். கொம்யூனிஸ ஆட்சியில், எதிர்த்துப் பேசுபவன் எவனே அவன் உடனடியாக மேலோகத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டுவிடுவான்.

இலங்கையைப் பொறுத்த மட்டிலும் இதுவேதான் கதி. மயக்குமொழி பேசி, மருட்டும் விழி காட்டி, மாயவலை வீசி வாலிப உள்ளங்களைக் கவருகிறது கொம்யூனிஸம். இனம் மறந்து, மொழி மறந்து, உறவு மறந்து உள்ள நிலைமறந்து ஆட்டம்போடும் உள்ளங்கள்; விட்டில் பூச்சிகளாக வேண்டியதுதான் மிச்சம்.

தோழமைக்கு முதலிடம் கொடுப்பது கொம்யூனிஸம் என்று கூறப்படுகிறது. சீனவுடன் இந்தியாவைவிட வேறு எந்த தேசமும் உச்சமான உறவு கொணடாடியதில்லை எனலாம் அத்தகைய ஒரு நாட்டுக்கே-அகிம்சையைப் போதித்து, அறவழி நாடி, அயலுடன் உறவு கொண்டு வாழ விரும்பிய இந்தியாவுக்கே துரோகம் விளைவிக்க முனைந்த சீனவுக்கு, இலங்கை கொம்யூனிஸ்டுகள் ஆதரவு கொடுப்பதுதான் விந்தையிலும் விந்தை.

நடுவுநிலை மாறுது, உண்மைக்கும், அன்புக்கும், ஆத்மீகத்துக்கும் அடிபணிந்து வாழும் இந்தியா உலக சமாதானத்தை விரும்பி எல்லோருடனும் உறவு கொண்டு வாழும் வேளையிலே கபட நோக்குடனும், கழுகுப்பார்வையுடனும், இந்திய மண்ணைக் கவரக் கங்கணம் கட்டிக் கொண்டிருந்திருக்கிறது கொம்யூனிஸ்டுசீன.

### மதிகெட்டு வரும் முன்னே.........

மேற்கு நாடுகளில் மலிந்துள்ள ஜனநாயக ஆட்சி முறையினை ஆதாரமாக வைத்து இந்தியா தனக்குத் தனியான ஒப்பற்ற ஜனநாயக முறையில் ஆட்சி செலுத்தும் போதே, பிற்போக்கு, பிற்போக்கு என்று பிதற்றியது கொம்யூனிஸம். மேற்கு நாடுகளின் பண்டையக் கொள்கையாக விருந்த நாடு பிடிக்கும் தனத்தை வாயார வைது வந்த கொம்யூனிஸம் இன்று தானகவே நாடு பிடிக்க முனைந்ததுதான் ஏனே?

இலங்கைக்கு அரிசியைக் கொடுக்கிறது சீன; அதனல் இலங்கையும் சீனவுக்கு மயங்கிவிட்டது போலும்! சீனவுக்கு மயங்கி அண்டை நாட்டை அவமதிக்க முனைந்தால், தானே வரும் கேட்டுக்கு வழி வகுப்பதாய் விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் பரவும் புதிய ஏகாதிபத்தியம்?

## சீன ஆக்கிரமிப்புக்கெதிராக இந்தியா-உதவி நிதி

### இந்திய சங்கங்கள் கூட்டத்தில் ஏகமனதான தீர்மானம்

இந்தியாவின் மீது சீன தொடுத்திருக்கும் ஆக்கிரமிப்புக்கெதிராகப் போரிடும் இந்திய மக்களுக்கு நிதி உதவியளிக்கும் நோக்கத்துடன், "இந்தியா—உதவி நிதி" என்னும் பெயரால் ஒரு நிதி திரட்டுவதென்று இந்திய வியாபார, கலாச்சார சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

31-10-62ல் இம் முடிவை அங்கீகரிக்கும் தீர்மானமொன்று பின்வரும் சங்கங்களடங்கிய ஒரு கூட்டத்தின்போது, ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் பங்கு பற்றிய சங்கங்களாவன: _

இந்திய வர்த்தக சங்கம், ஸ்ரீ ரஞ்சன சபா, கேரள வனிதா சங்கம், நாடார் மகாஜன சங்கம், கேரள சமாஜம், இந்திய ஜவுளி விற்பனையாளர் சங்கம், சிலோன் இந்திய கிளப், இந்தி பிரச்சார சபை, இலங்கை பாத்த விற்பனையாளர் சங்கம், இலங்கை பாரத தேசிய இளைஞர் சங்கம், பாரத சேவா மண்டலம், உணவு இறக்குமதியாளர் சங்கம், இலங்கை ரெட்டியார் ஐக்கிய சங்கம், ஸ்ரீ நாராயண சொஸைட்டி, இலங்கை தோல் பதனிடுவோர் சங்கம், புசெல்லாவ இந்து விற்பனையாளர் சங்கம், இலங்கை—இந்திய நட்புறவுச் சங்கம், சிரியன் கிறிஸ்துவ சங்கம், லங்கா ஒட்டல்கள் சங்கம், சிந்தி வர்த்தகர் சங்கம் ஆகியனவே.

நிதிக்குப் பணம் திரட்டவும், சேருகின்ற பணத்தை நிர்வகிக்கவும் ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது.

அக்குழுவின் விபரம் பின்வருமாறு: தலைவர்: திரு ஏ. ரி. கலூர், துணைத் தலைவர்: திரு. எஸ். சோமசுந்தரம், இணைச் செயலாளர்கள்: திருவாளர்கள் டி. ன். துரைராஜா, வி. வி. ராவ், இணைப் பொருளாளர்; திருவாளர்கள் வி. எஸ். அருளானந்தம், எச் ஏ.காதர், கணக்குப் பரிசோதகர்: திரு. கே. சுவாமிநாதன்.

அங்கத்தவர்: திருவாளர்கள் எஸ். இராமசாமி, ஏ. வி. போல், கே. முத்தையா முதலியார், எம். ஏ. நாயர், என். ஜெகநாதன், ரி. இராமச்சந்திரன், கே. வி. எஸ். ஆடியோடி, எம். முத்துக்கிருஷ்ணன், கே. கே. குமாரன், ரி. பி. அந்தியாப்பிள்ளை, எம். சங்கர நாராயண ரெட்டியார், எம்.கனக ராஜா, டி. பி. கேசவன், கே. கே. ஜக்தியானி, ஏ. எம்.சீனிவாசன், திருமதிகள் எல். சுப்பிரமணியம், வி. வி. ஐ. ஏபிரகாம்.

கே. கே. பிலிம்ஸ் ஸ்தாபனத்தாரின் சொந்தக்காரரான திரு. கே. கே. ஜக்தியானி நிதிக்கு உதவியாக ஒரு இந்தியப்பட விழாவை ஒழுங்கு செய்வதற்குச் சம்மதித்துள்ளார்.

கூட்டத்திலே உடனேயே சேர்க்கப்பட்ட ரூ. 15,552 தொகையுடன் நிதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்தியா-உதவி நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பவேண்டும்:

இந்தியா—உதவி நிதி
65 1/1 பாங்ஷால் வீதி,
கொழும்பு-11.

## வரக்காப்பொலை

### மாரியம்மன் கோயில் கும்பாபிஷேகம்

வரக்காப் பொலையிலுள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் மகா கும்பாபிஷேகம் 2-11-62 வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாண வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ ச. இராமசாமிக் குருக்களால் இக் கும்பாபிஷேகம் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது.

கண்டி மடுல்கல நக்கல்ஸ் குருப் அதிபர் திரு. எஸ். பி. ஆர். நடராசாபிள்ளை அவர்கள் பகல் 11 மணிக்கு கோயிலைத் திறந்து வைத்தார். மாலையில் அம்பாள் திருஉலாவும், ஊர்வலமும், நடைபெற்றது. உளுகங்கை பிள்ளையார் கோயில் பிரதம அர்ச்சகர் இ. சண்முகசர்மா, ஊர்வலத்தில் அர்ச்சனை செய்து, பிரசாதம் வழங்கினார். சின்னக் கந்தைக் கட்டி திரு. வி. ராமன் குழுவினரால் கரகம் காவடி ஆட்டமும், செல்வி திலகவதி நாகலிங்கம், குணமணி வேலாயுதம் அவர்களின் தோத்திரப் பாடல்களும் நடைபெற்றன.

வரக்காப்பொலை தமிழ் வளர்ச்சி சங்கம், ஞாயிறு சைவ சமய பாடசாலை சங்கீத ஆசிரியர் திரு. சேதுரத்தினம் அவர்களும், பள்ளி மாணவ மாணவிகளும் கலந்து கொண்டு இவ் விழாவைச் சிறப்பிக்கப் பெரிதும் பாடுபட்டனர்.

## சமூக சேவை லீக் கட்டுரை, பேச்சுப் போட்டிகள்

தர்கா நகரிலுள்ள சமூக சேவா லீகினர் அகில இலங்கை தமிழ் கட்டுரைப் போட்டி, தமிழ் பேச்சுப் போட்டி ஆகியவற்றை நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர். இப் போட்டிகள் முறையே ஸாகிருக் கல்லூரி அதிபர் ஜனாப் ஐ. எல். எம். மசூர் அவர்களதும், வேர்விலை பட்டினசபைத் தலைவர் ஜனாப் எஸ். எம். ஜாபிர் அவர்களின் தந்தை காலஞ் சென்ற ஜனாப் ஸாபி ஹாஜியார் அவர்களதும் ஞாபகார்த்த வெற்றிக் கேடயங்களுக்காக நடைபெறும். இவற்றிற்கான விண்ணப்பங்களை சமூக சேவா லீக் செயலாளர் 5-1-63 வரை ஏற்றுக் கொள்வார் எனத் தெரிகிறது.

## மூதூர். கி. ச இடைத் தேர்தல்

### தமிழரசு வெற்றி

மூதூர் கிராமச் சங்கத்தின எட்டாவது வட்டார இடைத் தேர்தல் சமீபத்தில் நடந்தது. தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஜனாப் எஸ். எம். மதார் 23 அதிகப்படி வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவருடன் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஜனாப் எம். முகம்மது முகையதீன் போட்டியிட்டுத் தோற்றார்.

## இந்தியா-சீன எல்லைப் போர் இலங்கையையும் பாதிக்கும்

ஜனத் தொகையால் கூடிய இந்தியா—சீன ஆகிய இரண்டு நாடுகளும் மோதிக் கொள்வதால் சர்வதேச நிலைமையிலும் மாற்றம் நிகழுவதுடன், இலங்கையையும் ஓரளவு பாதிக்கிறது. இந்தியா சீனவுக்கு நட்புரிமை கொண்ட நாடாகவே விளங்கிவந்திருக்கின்றது. கிழக்கில் பழைய ஏகாதிபத்திய ஆதிக்கம் மறைந்து கொம்யூனிஸம் என்னும் புதிய ஏகாதிபத்தியம் பரவுகிறது. இலங்கையில் தற்போதுள்ள நெருக்கடிகளை முறியடிக்கவல்ல ஏதுக்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இப் போராட்டம் இலங்கைக்கும் எண்ணற்ற பிரச்சினைகளைக் கொடுக்கும்.

ஆசியாவிலேயே அதிக சனத்தொகையை கொண்ட இருநாடுகளான சீனவுக்கும், இந்தியாவுக்குமிடையே ஏற்பட்டுள்ள தகராறு காரணமாக, கவலைக்கிடமான சர்வதேச நிலைமை ஒன்று உருவாகியிருக்கிறது.

இவ்விரு நாடுகளினதும் சனத்தொகை ஏறத்தாழ இவ்வுலகின் சரிபாதியாகும்-இரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு, பொதுவாகச் சர்வதேச நிலைமையைப் பாதிப்பதுடன், எமது நாட்டைப் பல விதங்களிலும் விசேஷமாகப் பாதிக்கும்— முக்கியமாக உணவு விஷயத்தில்.

சர்வதேசமாநாடுகளிலெல்லாம் சீனவின் நண்பனாக விளங்கியஇந்தியாவைச் சீன ஏன் ஆக்கிரமிக்க எண்ணியிருக்க வேண்டும் எனச் சிலர் வினவலாம். ஐ. நா. சபையில் சீனவுக்கு அனுமதி அளிக்கும்படி வலியுறுத்தி வந்தது இந்தியாதானே?

ஆனல், கொம்யூனிஸ்ட் கொள்கையை நாம் ஆராய்வோமேயானல், உண்மையான காரணம் என்னவென்று புலப்படும்.

மேல்நாட்டு ஏகாதிபத்தியம் முற்றாக அழிந்தொழிந்துவிட்டாலும், இப்போது, அண்மையில், அதனிடத்தில் மற்றோர் புதிய ஏகாதிபத்தியம் தலைதூக்குவதை நாம் காண்கிறோம். அது தான் கொம்யூனிஸ ஏகாதிபத்தியம்.

ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளைத் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்த இந்த ஏகாதிபத்தியத்தின தன்மையை, ஐரோப்பாவில் அண்மைக் காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் மூலம் நாம் அறிவோம்.

ஹங்கேரியை இரக்கமற்ற முறையில் அடக்கி ஒடுக்கியமை இத்தகைய சம்பவங்களில் ஒன்றே. இன்று, இந்த

டட்லி சேனநாயக்கா
எதிர்க்கட்சித் தலைவர்

ஏகாதிபத்தியத்தின் விஷக் கரங்கள் ஆசியா மீதும் நீண்டு வருவதைக் காண்கிறோம்.

ஆகவே, ஒரு வகையில், இந்தியாவின் போராட்டம், இந்தப் புதிய ஏகாதிபத்தியத்துக்கெதிராக நடாத்தப்படும் போராட்டமாகும். அப் போராட்டத்துக்கு இலங்கையின் இதயபூர்வமான ஆதரவு கொடுக்கப்படவேண்டும்.

மேலும், ஆசியாவில் இப்போது இரண்டு பரிசோதனைகள் நடைபெறுகின்றன. ஒன்று. ஒரு நாட்டை ஜனநாயகமுறையின்கீழ் விருத்தி செய்தல், இந்தியாவிற்போல். மற்றது: ஒரு நாட்டை சர்வாதிகார முறையின் கீழ் விருத்தி செய்தல், சீனவிற்போல். வேண்டிய நோக்கத்தை இந்திய முறை மூலம் நிறைவேற்ற முடியாதென்றும், கொம்யூனிஸ்ட் முறை ஒன்றினலேயே அது முடியுமென்றும் காண்பிப்பது, சீனவின் நலத்துக்காகும். ஆகவே, இதுவும் ஆக்கிரமிப்புக்கு ஓர் காரணமாகின்றது. ஜனநாயக முறை வாழ்க்கையை விரும்புவோர் எல்லோருமே, இப் போராட்டத்தில் இந்தியாவை ஆதரிக்க வேண்டியது அவசியமாகின்றது.

நான் ஏற்கனவே கூறியது போல, இப்போராட்டம், இலங்கைக்கு எத்தனையோ பிரச்சினைகளைக் கொடுக்கின்றது. முக்கியமானதொன்றே எமது உணவுப் பிரச்சினை. இந்த விஷயத்தில், பொருளாதார நெருக்கடி காரணமாக, ஏற்கனவே அரசாங்கம் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கிறது.

போராட்டத்தின் காரணமாக விளையக்கூடும் பாரதூரமான நிலைமையைச் சமாளிப்பது குறித்து அரசாங்கத்திடம் இதுவரை எந்த விதமான திட்டமும் இருப்பதாகத் தெரியவில்லை. மக்களிடம் இந்த அரசாங்கத்துக்கு எவ்வித பொறுப்புணர்ச்சியும் இருப்பதாகத் தெரியவில்லை.

## மாங்கல்ய தானம்

சீன-இந்திய எல்லைச்சண்டையில் சீனரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான, இந்தியப் போர் வீரர் ஒருவரின் மனைவி தனது தாலிக்கொடியை எல்லைப் பாதுகாப்பு நிதிக்கு வழங்கியுள்ளார்.

"யாருடைய துப்பாக்கிக்கு எனது கணவர் பலியானரோ, அவர்களுக்கு எதிராகப் போர் புரியும் துப்பாக்கியாக அவர் அணிவித்த மாங்கலியம் உதவட்டும்" என்ற சபதத்துடன் தனது தாலிக்கொடியைப் பாதுகாப்பு நிதிக்கு மனமுவந்தளித்தார்.

இப்பொழுது தட்டுப்பாடு இல்லை




அசல்
கொலிப்ரி
ஒடிக்கோலான்

இலங்கையடங்கிலுமுள்ள வியாபாரிகளிடத்தில் உடனே கிடைக்கும்.

மிகமுக்கியம்: அசல் உற்பத்திதானு என்பதை உறுதிப்படுத்த மூடியிலுள்ள சிவப்பு மற்றும் வெள்ளை சீல் உடையாமலிருக்கிறதா வென்பதைப் பார்த்து வாங்குங்கள்.

சிறந்த ஜெர்மன் ஒடிக்கோலனைப் பாவியுங்கள்.

கொலிப்ரியைக் கேட்டு வாங்குங்கள்.

ஏஜண்டுகள்:

ஆவ்ரா & கோ,

19, செட்டியார் தெரு, கொழும்பு.

போன்: 7211 & 7212

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லையில் நடக்கும் தொல்லைகளுக்கு எல்லாம் சீனாவே காரணம்

## இலங்கைப் பத்திரிகையாளர் மாநாட்டில் இந்தியப் பிரதமர் நேரு

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது. இந்தியப் பிரதமர் நேரு பத்திரிகை நிருபர் மாநாடொன்றில் பங்கு பற்றினார். அவ்வமயம், நிருபர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், இந்தியா சீன எல்லைப் பிரச்சினை பற்றிய அபிப்பிராயமும் தெரிவித்திருந்தார். அவர் கூறிய முக்கியமான பதிலின் பகுதியொன்றை இங்கு நாம் வெளியிடுகிறோம்.

கேள்வி: இந்தியா சர்வதேசப் பிரச்சினைகளில் சமாதான அடிப்படையில் சமரசம் காண்பதையே விரும்புகிறதென நீங்கள் எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கூறியிருந்தீர்கள். ஆனால், இந்தியாவின் எல்லைகளில் தோன்றியிருக்கும் நெருக்கடியைப் போறுத்த மட்டில், நீங்கள் மற்றும்படி மேற்கொள்ள விரும்பாத நடவடிக்கையை மேற்கொள்ளும்படி சில சந்தர்ப்பங்கள் தூண்டியுள்ளன. இந்தச் சந்தர்ப்பங்கள் என்ன எனக் கூறுவீர்களா? அத்துடன், இந்தப் பிரச்சினையைச் சமாதான வழியில் தீர்க்க ஏதுக்கள் உண்டா? அப்படியான ஒரு சமரசத் தீர்ப்புக்கு என்ன என்ன விதிகள், நிபந்தனைகள் இருக்கும் என்றும் கூற முடியுமா?

பதில்: "இங்கு நான் பல வருடங்களைக் கொண்ட பழைய சரித்திரத்தைக் கூற முடியாது. எங்களைப் பொறுத்தவரையில், நீண்ட காலமாக எங்களுக்கு எங்கள் எல்லைகளை நன்ருகத் தெரியும். எங்கள் தேசப் படங்கள் கிரமமாகவே வைக்கப்பட்டு வந்துள்ளன. இந்த எல்லைகள் இருக்கின்றனவே, அவை உயர்ந்த மலைத் தொடர்கள், மக்கள் இல்லாத வெறும் நிலப்பரப்புகள்—மிகக் குளிர்மையான கரடுமுரடான இடங்கள்—ஒருவரும் அங்கு வசிப்பதில்லை; அப்படியானல், யாரும் ஆட்டிடையர்கள் வருவார்கள், போவார்கள் அவ்வளவுதான்.

பத்து வருடங்களுக்கு முன்பாக, அதாவது சீனவின் புதிய அரசாங்கத்தின் ஆரம்பகாலத்தில், இந்தியாவிலுள்ள பல பகுதிகளை உள்ளடக்கிய புதிய தேசப் படங்கள் சீனவிலிருந்து வெளி வருவதைக் கண்டோம். புதிய எல்லைகளைக் கொடுக்கும் இந்தப் புதிய தேசப் படங்களை சீன அரசாங்கத்தின் கவனத்துக்கு நாம் கொண்டு வந்தோம். இதில் ஏதோ பிழையிருக்க வேண்டும், ஏனெனில் எங்களுடைய எல்லைகள் தெளிவாக உள்ளனவே என்றும் அவர்களுக்குக் கூறினேம்.

### சீனவின் விளக்கம்

அதற்கு, அந்தத் தேசப் படங்கள் பழையன, சியாங்காய்-செக் காலத்தவை, அவற்றை நாம் சரியாகத் திருத்தம் செய்ய நேரம் கிடைக்கவில்லை என்று அவர்கள்—சீன அரசாங்கம்—கூறினர்கள். ஒவ்வொரு வருடமும் நாம் இது பற்றி அவர்களுக்கு நினைவூட்டினேம். ஒவ்வொரு வருடமும் அதே பதிலைத்தான் அவர்கள் தந்தார்கள்.

பீக்கிங்குப் போயிருக்கும்போது, அந்தப் படங்கள் பற்றி நான் திரு. சூ-என்-லாயிடம் தெரிவித்திருந்தேன். அவர் அதே பதிலைத்தான் தந்தார். "எங்களுக்கு நேரம் கிடைக்கும் [illegible] வைப்போம்."

இதன் மூலம், அவர் எங்களுடைய தேசப் படங்களை அங்கீகரித்ததெனச் சொல்லிவிட முடியாதென்பது உண்மைதான். ஆனல், அவர்களுடைய படங்கள் பிழை, அவை திருத்தப்படும் என்ற அபிப்பிராயத்தையே அவர் எமது மனங்களில் பதிய வைத்தார்.

### திபெத்தும் நாமும்

பிறகு திபெத் விஷயத்துக்கு வந்தோம். பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து பெற்ற சில உரிமைகள் எங்களுக்குத் திபெத்தில் இருந்தன. ஆனல், அந்த உரிமைகளைக் கொண்டாட நாம் விரும்பவில்லை. அவற்றை வைத்திருப்பதில் நாம் அக்கறை காட்டவுமில்லை.

திபெத்துடன் எமக்குள்ள வியாபாரத் தொடர்பில் எமக்கு அக்கறை இருந்தது. அத்துடன், திபெத்துக்கு இந்தியாவிலிருந்து யாத்திரை செய்வோர் அநேகர். ஆகவே, திபெத் சம்பந்தமாகச் சீனவுடன் நாம் ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திட்டோம். அந்த ஒப்பந்தத்தில், "பின்வரும் முக்கியமான பிரச்சினைகள்........." என்று தொடங்கி, ஒவ்வொரு பிரச்சினையும் ஆராயப்பட்டு, இரு சாராரின் சம்மதத்துடனும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்தப் பிரச்சினைகளை ஆராயும் பொழுது, எல்லை பற்றி அவர்கள் குறிப்பிடாதது ஆச்சரியமே. இங்கும் அங்குமாக, ஒரு மைலோ இரண்டு மைலோ வித்தியாசம் பற்றிக் குறிப்பிட்டார்கள், அவ்வளவுதான்.

ஆகவே, ஒப்பந்தம் ஒன்று இருந்தது.

அதன் பிறகு திரு. சூ-என்-லாய் இந்தியாவுக்கு வந்தார். நாங்கள் பல விஷயங்கள் பற்றியும் பேசினேம். என்னுடைய ஞாபகத்துக்கு எட்டியவரைக்கும், எல்லைகள் பற்றியும், தேசப் படங்கள் பற்றியும் 'நாம் அவர்களிடம் குறிப்பிட்டோம். எங்களுக்கிடையே எல்லைப் பிரச்சினை எதுவும் இல்லை, ஆனல் உங்கள் தேசப் படங்கள்தான் தப்பபிப்பிராயத்தை உருவாக்கின்றன என்று நாங்கள் அவர்களிடம் கூறினேம். அதற்கு அவர் "நாங்கள் அதைக் கவனமாகப் பரிசீலனைசெய்து, சமாதானமாகத் தீர்க்க வேண்டும்" என்றர்.

### சீனவின் சந்தேகம்

அதற்குப் பிறகு வந்தது திபெத். திபெத்தில் புரட்சி வந்தது. அது, சீனவுக்குப்பக்கத்தமைந்த கிழக்குப் பிரதேசத்தில்—உண்மையில் சீனருக்குட்பட்ட திபெத் பகுதியில்-ஆரம்பித்து, மெதுவாகப் பரவியது. கடைசியில் அது ஒரு பெரிய புரட்சியாக மாறி லாசாவுக்குவந்துவிட்டது. அந்தச் சமயத்தில் தான் லாசாவிலிருந்து வந்து தலாய் லாமா இந்தியாவில் சரண் புகுந்தார் அத்துடன் 30,000 தொடக்கம் 35,000 வரை திபெத்தியர்கள் இந்தியாவுக்கு வந்தனர்.

என்னல் விளங்க முடியாத காரணம் ஒன்றைக்கொண்டு, ஏதோ விதத்தில் இந்தத் திபெத் புரட்சியை இந்தியாவிலிருந்து நாங்கள் ஊக்குவிப்பதாகச் சீன அரசாங்கம் எண்ணிக் கொண்டது. இது முற்றிலும் பொய்யாகும். நாம் ஏன் திபெத்தில் ஒரு புரட்சியை வளர்க்கவேண்டும்? எப்படி நாம் அதைச் செய்வோம்? ஆனல், அகதிகள் இந்தியாவுக்கு வந்திருந்தமையால், எங்கள் பக்கத்தில் சில திபெத்தியர்கள் வாழ்ந்து வந்தமையால், இந்தப் புரட்சியை நாம் ஆதரிக்கிறேம் என்ற எண்ணத்தைச் சீனருக்குக் கொடுத்தது. இதை நான் ஏன் கூறுகின்றேன் என்றல், ஓரளவுக்காவது, சீனரின் நிலையை விளங்கிக் கொள்ள இது உதவும் என்பதற்காகவே.

நாங்கள் சீனருடன் சிநேகிதமாகவே இருந்திருக்கிறேம். திபெத்தில் அவர்களுக்குரிய விசேஷ நிலையை நாம் அங்கீகரித்துள்ளோம். ஐ. நா. சபையில் அவர்களுக்கு இடமளிக்கவேண்டுமென வருடத்துக்கு வருடம் நாம் தொடர்ந்து கூறி வந்துள்ளோம். அதன் பிறகு..... இப்பொழுது இது (சீன ஆக்கிரமிப்பு) வந்து சேர்ந்திருக்கிறது.

### நமது எல்லைகளில்...

திபெத் புரட்சியை அடக்குவதற்காகச் சீன அரசாங்கம் பெரிய தொகையில் படைகளை அனுப்பியது. அப்படைகள் எங்கள் எல்லைகளுக்கே வந்து சேர்ந்துவிட்டன. அவர்கள் உடன் வந்து சேர்ந்த எல்லை வடகிழக்கு எல்லையே-அங்கேதான் எமது வடகிழக்கு எல்லைப் பிராந்தியக் காவற்படை உண்டு. அந்த எல்லையை அவர்கள் தாண்டவில்லை. நாங்கள் அங்கு பல காவல் நிலையங்களை-இராணுவ நிலையங்கள் அல்ல-காவல் நிலையங்களை வைத்திருந்தோம். அவர்கள் எல்லையைத் தாண்டவில்லை. ஆனல், மற்றப் பக்கத்தில், காஷ்மீருக்கு வடகிழக்கே லடாக்கில் அவர்களுடைய துருப்புக்கள் எல்லையைத் தாண்டிப் பிரவேசித்தன. நாங்கள் அவர்களைத் தடுக்க முயன்றேம்.

நான் முன்பே கூறியிருந்தது போல், இது மக்கள் வசிக்கும் இடமல்ல. இது உயர்ந்த, வெளியான, தனிப் பிரதேசம்—கடல் மட்டத்துக்கு மேல் 13,000 தொடக்கம் 18,000 அடி வரைக்கும் உயர்ந்ததாகும். மரங்களை இல்லை-அங்கே மரங்கள் வளர முடியாது. அங்கு நிர்வாகம் இல்லை, ஏனென்றல், நிர்வகிப்பதற்கு அங்கு மலை உச்சிகள், குன்றுகள் தவிர வேறென்றுமில்லை. ஆகவே, எங்களிடமிருந்து எவ்வித எதிர்ப்புமில்லாமல் அங்கு அவர்களால் பிரவேசிக்க முடிந்தது. இதை அறிந்ததும், நாங்கள் அவர்களுக்கு எமது ஆட்சேபத்தைத் தெரிவித்தோம்.

### சீனர் இப்பக்கம் இருந்ததே இல்லை!

இதைத் தொடர்ந்து, ஆட்சேபணைக் கடிதங்கள் இரு சாரார்க்குமிடையே பரிமாறப்பட்டு வந்துள்ளன. அவர்கள் கூறுகிறர்கள்: "இது எங்கள் பிரதேசம்.

(13-ம் பக்கம் பார்க்க)



# இரத்தம் கொடுக்கத் தயார்

## சென்னை மேல் சபையில் புரட்சி நடிகர்

"சுதந்திரத்தை இழந்த பின் பெரும் புகழ் பெற்றலும் மாட மாளிகையில் வாழ்ந்தாலும் பயனில்லை. கடுங்குளிரில், ஆதிக்கவெறியர்களை எதிர்த்துப் போராடும் வீரர்களுக்கு இரத்தம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்!"

என்று புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., சென்னை மேல்சபையில் பேசும் போது கூறினர். முதன் முதலாகப் போர் நிதிக்கு ரூபா 75,000 கொடுத்தவர் எம். ஜி. ஆர். என்பது தெரிந்ததே.

இப்போது புரட்சி நடிகர் ஒரு புதிய செய்தியையும் மேல் சபையில் பேசும்போது தெரிவித்திருக்கிறர். போர் முடியும்வரை தான் நடிக்கும் ஒவ்வொரு படத்திலும் வாங்கும் தொகையில் கால் பங்கை எல்லைப்போர் நிதிக்குத் தருவதாக வாக்களித்துள்ளார்.

அத்துடன், சென்னையில் ஒரு வாரத்துக்கு, "எம். ஜி. ஆர் வாரம்" கொண்டாடி தான் நடித்த வெற்றிப் படங்களைத் திரையிட்டு அதில் சேரும் நிதியையும் பாதுகாப்பு நிதிக்கு அளித்துள்ளார்.

இதுமட்டுமல்லாது மின்னல் வேகத்தில் 2000 அடி நீளத்தில், யுத்த பிரசாரப் படம் ஒன்றை எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் தயாரித்து வருகிறர்கள். மேற்படி படத்தில் புரட்சி நடிகர் கதாநாயகனக நடிக்கிறர். கலைஞர் கருணநிதி வசனம் எழுதி இருக்கிறர்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் 'நம் நாடு' என்ற யுத்த பிரசாரப் படத்தைத் தயாரித்து வெளியிட்டுள்ளார்.


# ஆனந்தா லேகியம்

## இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்வலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோன்றும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கைகளுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் திரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா இருந்தாலே திராவிடம் பெறலாம்

## எல்லைத் தகராறில் நேருவுக்கே எங்கள் முழு ஆதரவும்

## வரவேற்புக் கூட்டத்தில் அண்ணுவின் அறைகூவல்

திராவிட முன்னேற்றக் கழகம், இந்தியா—சீன யுத்தத்தில் நேரு சர்க்காருக்குத் துணையாக நிற்கும். இந்திய துணைக் கண்டம் இருந்தால் தான் திராவிட நாடு பெற முடியும். எனவே நேரு சர்க்காரை நாம் முழு மனதுடன் ஆதரிக்கிருேம்.

இவ்வாறு அக விலைக் குறைப்பு மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைத் தண்டனை அனுபவித்து விட்டு விடுதலையாகியவுடன் கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணுவுக்கும், பொருளாளர் கருணுநிதிக்கும் அளிக்கப்பட்ட மாபெரும் வரவேற்புக் கூட்டத்திற்கு, நன்றி தெரிவித்துப் பேசுகையில் அறிஞர் அண்ணு கூறிஞர்.

தியாகரரய நகரில்இருந்து ஊர்வலமாக அறிஞர் அண்ணுவையும், கருணுநிதியையும் அழைத்துச் சென்று, திருவல்லிக்கேணி கடற்கரையில் கூட்டம் நடைபெற்றது. ஊர்வலத்தில் தமிழ் வீரனைப் போன்ற ஒரு பொம்மை, உடை வாளுடன் போருக்குப் புறப்படுவது போல அலங்கரித்து, கையில் "சீனர்களை விரட்டியடிப் போம்" என்ற அட்டையுடன் எடுத்துச் செல்லப்பட்டது.

அறிஞர் அண்ணு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

சீனுவின் படையெடுப்பால் தொல்லை மட்டும் அல்ல, மிகப்பெரிய ஆபத்தே வந்திருக்கிறது. சீனர்கள் ஏகாதிபத்திய வெறிக் கூட்டம்—மண்ணுசை பிடித்தவர்கள்—ஒரு கோடிப் பேர்களைப் பலி கொடுத்தாவது பிறநாட்டைக் கைப்பற்ற நினைக்கும் வெறிக் கூட்டம் என்பதை மறந்து விடுவதற்கில்லை.


தி. மு. கழகம் நேரு சர்க்காருக்குத் துணையாக நிற்கும்என்றுநான் சொன்னவுடன், சிலர் என்னைக் கேட்டார்கள்; எங்கோ நடக்கும் சண்டை, ஆபத்து டெல்லிக்கு; அதில் நமக்கு என்ன அக்கறை என்று. நாம் இந்த சமயத்தில் நேரு சர்க்காரை ஆதரிப்பதில் நம்முடைய இலட்சியத்தில் மாற்றம் நிகழ்த்து விடப் போவதில்லை. திராவிட நாடு திராவிடர்க்கே என்ற இலட்சியத்தை விட்டுவிடப் போவதில்லை. உயிர் போகும்வரை நமக்கு அந்த இலட்சியம் தான். திராவிட நாட்டை நாம் பிரிக்க நினைப்பது இந்திய துணைக் கண்டத்தில் இருந்து தான். இந்திய துணைக் கண்டம் இருந்தால் தான் திராவிட நாட்டைப் பெறமுடியும். சீனு இந்திய துணைக் கண்டத்தைஅழித்து விட்டால் அழிந்துபோன இடத்தில் அருமைத் திராவிடம் பெறமுடியுமா?

வீடு இருந்தால் தான் ஓடு மாற்றலாம். வீடு இல்லையென்ருல் ஓடும் மாற்ற முடியாது. ஆகையால் வீட்டுக்கு ஆபத்து—இந்தியாவுக்கு ஆபத்து வந்திருக்கிறது.

கட்சி என்பது ஒன்று. சர்க்கார் என்பது இன்னென்று. நாடு என்பது இவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒன்று.

கட்சி என்பது மக்களின் ஆதரவு இருக்கின்ற வரைக்கும் இருக்கும் ஒன்று.

சர்க்கார் அதைவிட நிரந்தரமானதுதான். இப்போது காங்கிரஸ், சர்க்காரை நடத்தலாம், இன்னும் வெளிப்படையாகச் சொன்ஞல் சர்க்காரை இயக்கும் இடத்தில் காங்கிரஸ் அமர்த்தப் பட்டிருக்கலாம். இந்த நிலை மாறலாம். இப்போது போகிற போக்கைக் கவனித்தால் அடுத்த தடவை இந்த மாநிலத்தில் தி. மு. கழகம் மந்திரிசபை



சி. என். அண்ணுத்துரை

அமைக்கும் என்பதில் யாருக்கும் ஐயமெழத் தேவையில்லை.

சர்க்காரிலிருந்து மாறுபட்டது நாடு.

சர்க்கார் நடத்துவது ஒரு கட்சியாக இருக்கலாம். ஆனுல் நாட்டிற்கு ஆபத்து என்றபோது ஒரு கட்சி என்ற நோக்கில்லாது எல்லோரும் முன்வருவார்கள்.

எனவே கட்சி வேறு, சர்க்கார் வேறு, நாடு வேறு என்பதை மனதில் நன்ருக அலசி ஆராய்ந்து பார்க்க வேண்டும். காங்கிரஸ் சர்க்கார் மேலுள்ள கோபத்தை நாடு படையெடுப்புக்கு ஆளாகியுள்ள இந் நேரத்தில் முழுவதும் காட்ட வேண்டியதில்லை.

### மறப்போம் மன்னிப்போம்

கதவைச் சாத்தும்போது தவறுதலாக விரல் நசுங்குகிறது. நம் விரலை நசுக்கிய கதவு என்று கோபம் கொண்டு கதவைச் சாத்தாமல் திறந்து வைக்க எந்த புத்தியுள்ளவனும் நினைக்க மாட்டான். கதவைத் திறந்து வைத்தால் வழியே போகும் நாய் உள்ளே நுழைந்து விடும். விரலை நசுக்கிய கதவை மறப்போம்; மன்னிப்போம்.

பயங்கரம் நம்மை எதிர் நோக்கியிருக்கிறது. நாட்டில் உள்ள எல்லா அரசியற் கட்சிகளும் வழக்கமான அலுவல்களை சிறிது காலத்துக்கு ஒதுக்கி வைக்க வேண்டும்.

சீன—இந்தியா யுத்தப் பிரச்சினையில் நாம் காட்டுகிற அளவு அக்கறை முதல் அமைச்சர் காமராஜர் காட்டவில்லை.

இந்த நிலைமையிலும் அவர் கும்பகோணத்துக்கும், நாகப்பட்டினத்துக்கும் போய் எந்த முனிசிபாலிட்டியை கைப் பற்றலாம் என கணக்குப் போடுகிருர். யார் யாரால் எது முடியுமோ அதில்தான் ஈடுபடுவார்கள் என்பதில் இதில் இருந்து உண்மையாகிறது.

### நேர்தலை ஒத்தி வைக்கவும்

இந்த சமயத்தில் ஆட்சியாளருக்கு நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். நெருக்கடியான இந்த நிலைமையில் அரசியல் கட்சிகளுக்கு இடையே உள்ள கொள்கை பூசல்களை ஓரளவு கட்டுப்படுத்திஞல் மிக நன்ருக இருக்கும். முடியுமாஞல் இந்த நகரசபைத் தேர்தல்களை ஒத்தி வைக்க வேண்டும். இதை நான் சொல்லும்போது கழகத்தின் பலம் அறிந்து தான் சொல்கிறேன். சென்னையிலும், வேலூரிலும் மற்ற இடங்களிலும் நடைபெற்ற ஊர்வலங்களையும் பொதுக் கூட்டங்களையும் பார்த்துவிட்ட பிறகு நம்மை வெல்ல முடியாது என்பது நிச்சயம். வெற்றி நமக்கு நிச்சயம்.

அப்படித் தேர்தல்களை ஒத்திவைக்க முடியாது என்ருல் நகரசபைத் தேர்தலில் அரசியற் கட்சிகள் ஈடுபடாமல் ஒதுங்கிக் கொண்டு காரியம் செய்கிறவர்கள் சுயேச்சையாகப்போட்டியிட அரசியற் கட்சிகள் ஒரு நியதியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

சீனுக்காரனை எதிர்க்க எல்லாக் கட்சிக்காரர்களும் ஒன்றுபட்டு நிற்கிறேும் என்று சொல்லி விட்டு அதே சமயத்தில் நகரசபை தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காக வெவ்வெறு மேடைகளில் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வது பொருளற்றது. பயன் அற்றது.

### நேசக்கரம் நீட்டுகிறேும்

பொது எதிரி சீனர் வந்துள்ளபோது சில்லறைப் பூசல்களை நாம் விட்டு விட வேண்டும் என்று ஆட்சியாளரை, குறிப்பாக காமராஜரைக் கேட்டுக் கொள்கிறேன். எந்தக் கரத்தில் நீங்கள் தடியால் அடித்தீர்களோ, எந்தக் கரத்தில் சிறையில் சட்டியைக் கொடுத்தீர்களோ அந்தக் கரம் இந்த ஆபத்தான நேரத்தில் நேசக்கரம் நீட்டுகிறது. இந்தக் கரத்தில் கறை. ஆனுல் கருத்தில் கறை இல்லாதவர்கள் தி. மு. க. வினர்.

பாராளுமன்றத்தில் தி. மு. கழகத்தின் சார்பில் உங்கள் ஆணையை நேருவுக்குத் தெரிவிப்போம். "நாட்டைக் காட்டிக் கொடுக்கும் [illegible] யார் [illegible] இப்போது தெரிந்து கொள்ளுங்கள் தி.மு.க. என்ருல் என்ன என்பதை", என்று சொல்லப் போகிறேன். ஆபத்தை உணர்ந்து, கிளர்ச்சியை உதறி உங்களோடு ஒத்துழைக்கிறேும் என்று சொல்லப் போகிறேன்.

### ஈன எண்ணம் இல்லை

பல கட்சிகளும் கொண்ட தேசிய சர்க்கார் ஏற்பட வேண்டும் என்று சிலர் சொல்கிருர்கள். போரைச் சாக்காக வைத்து அரசியலில் பதவி பெறும் ஈன எண்ணம் தி. மு. கழகத்திற்கு இல்லை. தேசிய சர்க்கார் வேண்டும் என்பதில் பொருளும் இல்லை, பயனும் இல்லை. ஆனுல் ஒவ்வொரு கட்டத்திலும் எல்லா கட்சிகளையும் கொண்ட குழு அமைத்து அதன் ஒத்துழைப்பைப் பெறவேண்டும்.

கொள்ளை லாபம் அடிப்பவர்களையும், பதுக்கல் செய்பவர்களையும் சர்க்கார் கவனிக்க வேண்டும். இதற்கு எல்லா கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும்.

### தத்துவப் போராட்டம்

இப்போது நடக்கும் போர் சீனுவுக்கும்—இந்தியாவுக்கும் நடக்கும் போரல்ல; ஜனநாயகத்திற்கும், சர்வாதிகாரத்திற்கும் நடக்கும் போர்.

எத்தனை குற்றமிருந்தாலும் ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும். உலகத்துப் பேரறிஞர்கள் இதுவரை சொன்ன கருத்துக்களிலெல்லாம் சிறந்தது ஜனநாயகம் பற்றிய கருத்துத்தான்.

ஆனுல் பீகிங்கில் நடப்பது சர்வாதிகார ஆட்சி. அந்தச் சர்வாதிகாரம் இப்போது ஜனநாயகத்துடன் மோதுகிறது.

ஜனநாயகத்திற்குத் தாங்கும் சக்திமட்டுமல்ல, தாக்கும் சக்தியும் உண்டு என்பதை நிரூபிக்க வேண்டும்.

இது வெறும் எல்லைப் போராட்டமல்ல; தத்துவப் போராட்டம்.

ரஷ்யாவிலே குருஷேவ் வந்தார். இறந்து பட்ட ஸ்டாலின் பிணத்தைத் தோண்டியெடுத்து 'இது லெனின் அருகில் இருப்பதா?' என்று அப்புறப்படுத்திய மிகப் பெரிய அரசியல் நாகரிகம், மகா பெரிய பண்பாடு அந்த சர்வாதிகார ஆட்சியிலேதான் இருக்கிறது!

ஏழைகளுக்கு வாழ்வளிக்கும் தத்துவம் கம்யூனிஸம் தான் என்ருலும், சர்வாதிகார வெறியை நாம் ஒப்புக் கொள்ளமாட்டோம்.

ஜனநாயகத்திற்கு துவக்கத்தில் தோல்வி கிடைக்கலாம். ஆனுல் இறுதி வெற்றி அதற்கே! சர்வாதிகார ஆட்சிமுறை நடத்தும் சோவியத்தும், அதற்கு அண்ணன் தம்பி முறை கொண்டாடும் சீனுவும் ஆக்கிரமிப்பு நடத்திஞல் அதை எதிர்த்துப் போராடியே தீருவோம்.

### திராவிடனின் பிணம்

முதல் பிணமும் திராவிடனின் பிணம்தான் விழுந்தது. திராவிடனின் பண்புக்கேற்ற வகையில் தரணியில் எங்கு அக்கிரமம் தலைநீட்டினுலும், அநீதி முளைத்தாலும் அதை எதிர்த்துப் போராட வேண்டும். அந்தப் பண்பாட்டில் குறையாதவண்ணம் கடுங்குளிர் கொட்டுகிறபோது, பனிப் பாறைகள் சரிகின்ற போது, சீன வெறியர்களின் டாங்கிகளை எதிர்த்துப் போர் புரியும் வீரர்களை வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1962 நவம்பர் மாதம் 18-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## சீன ஆக்கிரமிப்பும் இலங்கையும்

உலகம் முழுவதற்கும் சமாதானம் உபதேசித்து, அற வழி நின்ற பாரதத்தைச் சீனு ஆக்கிரமிக்கிறது. மற்றெரு பிரமாண்டமான தாக்குதலுக்கும் சீனு தயாரா கிறதாம். திபெத் நாடுதான் இந்தியாவைத் தாக்கும் சீனத் தளம். இந்தியா மீது பாய 2 இலட்சம் துருப்புகள் அங்கே தயாராக இருக்கின்றன.

அன்று திபெத் தாக்கப்பட்டது. இந்தியா மௌனம் சாதித்தது. அதன் விளைவை இன்று அனுபவிக்கிறது. இந்தியா இன்று தாக்கப்படுகிறது. இலங்கை மௌனம் சாதிக்கிறது. அதன் விளைவை இலங்கையும் அனுபவிக்கும்.

எதிரியை விரட்ட நவபாரதம் திரண்டெழுந்துவிட்டது. ஆண் பெண் அனைவரும் போர்க்கோலம் பூண்டுள்ளனர். மாணவர்களும் போரணியிற் திரளுகின்றனர். புத்தகங்களை வீசியெறிந்து, களத்திற்குப் புறப்படுங்கள் என்று சங்க நாதம் செய்கிறுர் பாரதப் பிரதமர்.

இப்போரில் உலக ஆதரவு இந்தியாவின் பக்கமே. 40 நாடுகள் இந்தியாவை ஆதரிக்கின்றன. சீனுவை ஆதரிக்கும் நாடுகள் எத்தனை? அல்பேனியா என்னும் ஒரே ஒரு குட்டி நாடு மட்டுமே! உலக மக்களின் ஆதரவு சீனுவுக்கு இல்லை.

சோஷலிச நாடுகளே இன்று சீனுவை ஆதரிக்கவில்லை. சோஷலிச இயக்கத்தின் ஆணிவேரைத்தான் அறுத்துவிட்டதே சீனு!

சீன ஆக்கிரமிப்பில் இலங்கையின் நிலை என்ன? ஆக்கிரமிப்பை ஆதரிக்கிறதா? கண்டிக்கிறதா? இது பிரதமருக்கே தெரியாத சிதம்பர இரகசியம்.

இது பற்றி ஆட்சியாளர் திட்டவட்டமாக முடிவு செய்யவில்லை. முடிவு செய்யவும் துணிவில்லை. இதிலும் நடு நிலைமை வகிக்கிறுர்களா? இன்றேல் திரு. பண்டாரநாயக்காவின் நடுவழிக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறுர்களா?

யுத்தத்துக்கும் சமாதானத்துக்குமிடையே ஒரு “நடுவழி” ஏது? நடுவழி என்பதே பசப்பு வார்த்தை. மதில் மேல் பூனையாக இருந்து மக்களை ஏமாற்றும் மாய்மாலம்.

அரசாங்கம் இருட்டில் நடமாடுகிறது. தெளிவான பாதை தெரியவில்லை. தெரிந்தாலும் அதில் செல்லத் துணிவில்லை. இது பற்றி பாராளுமன்றத்திலே அறிக்கை விடுத்தார் வேலையற்ற மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா. அது ஒரு நடுவழி அறிக்கை. ஆக்கிரமிப்பைக் கண்டிக்காத அறிக்கை. இத்திரிசங்கு நிலை இன்னும் எத்தனை நாளைக்கோ?

சீனுவுடன் செய்துள்ள அரிசி—ரப்பர் ஒப்பந்தந்தான் இலங்கையின் இந்நிலைக்குக் காரணமா? நமது ரப்பர் சீன ஆக்கிரமிப்புக்கல்லவா உதவுகிறது? அரிசிக்காக சீனுவிடம் சரணடைதல் இராஜ தந்திரமா?

இலங்கை—இந்திய அரசியல், பொருளாதார, சமுதாய, கலாசார பிணைப்புகள் மிகப் பழமையானவை. இந்தியாவின் அரசியல், பொருளாதார சம்பவங்கள் இலங்கையையும் பாதிக்கும்.

அன்னியனுக்கு இந்தியா அடிமைப்பட்டது; இலங்கையும் அடிமைப்பட்டது. இந்தியா விடுதலை பெற்றது; இலங்கையும் விடுதலை பெற்றது. இந்தியா வாழ்ந்தால் இலங்கையும் வாழும். இந்தியா வீழ்ந்தால் இலங்கையும் வீழ்ச்சியுறும். இந்தியாவின் பாதுகாப்பு இலங்கையின் பாதுகாப்புமாகும். இந்தியாவே இலங்கையின் நேரடிப் பாதுகாவலன். இந்தியா தாய்—இலங்கை சேய். இரண்டும் ஈருடல்—ஆனால் ஓருயிர். இந்தியாவை ஆக்கிரமிப்பவர்கள் இலங்கையையும் ஆக்கிரமிப்பார்கள்.

இந்த உண்மையை உணர மறுக்கின்றனர் இலங்கை ஆட்சியாளர். இந்திய சுதந்திரத்துக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளது. இலங்கையால் உதவி செய்யத்தான் முடியவில்லை, அனுதாபமாவது தெரிவிக்க முடியாதா? அதற்கும் துணிச்சலில்லை. சீன ஆக்கிரமிப்பைக் கண்டிக்க ஏன் இந்தத் தொடை நடுக்கம்?

சமரசம் செய்ய முயற்சி செய்கிறுர் இலங்கைப் பிரதமர். அதில் தவறில்லை. ஆனால் கோழைத்தனத்தை மறைக்க சமரச முயற்சியில் இறங்குவது தவறு. சமாதானத்திற்காகத் தன்மானத்தை இழக்கச் சொல்லுவது தவறு. நியாயமற்ற முறையில் சமரசம் செய்யத் தூண்டுவது தவறு.

இம்மாதிரி சமரச முயற்சி ஒரு போதும் பலிக்காது. தன்மானத்தை இழக்கும் நாடல்ல பாரதம். அத்தகைய இழி செயலுக்கு இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள எழுச்சி இடமளிக்காது.

இலங்கையும் “பாண்டுங்” நாடுகளில் ஒன்று. ஆக்கிரமிப்பைக் கண்டிக்க அஞ்சினால் இலங்கையின் ‘பாண்டுங்’ உணர்ச்சி, நட்பு, நல்லுறவு, பஞ்சசீலம், சமாதான சக வாழ்வு அத்தனையும் பறந்துபோய்விடுமே! இதற்குப் பெயர் இராஜதந்திரமா?

சீனுவின் சவாலை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது. அது இராணுவச் சவால் மட்டுமன்று, சர்வாதிகார கொம்யூனிஸச் சவாலுமாகும். பாரதம் ஜனநாயக சோஷலிஸத்தைப் பின்பற்றும் நாடு. எனவே இது ஜனநாயக சோஷலிஸத்துக்கும், சர்வாதிகார கொம்யூனிஸத்துக்கும் நடைபெறும் யுத்தமாகும்.

ஜனநாயக சோஷலிஸம்தான் தன் கொள்கை என்று பறைசாற்றுகிறது, இலங்கை அரசாங்கம். ஆனால் அக் கொள்கைக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கும் வேளையில் ஆதரவு தெரிவிக்கக் கூட முடியாமல் தத்தளிக்கிறது. ஏன் இந்நிலை?

இந்தியாவை மட்டுமல்ல, நேப்பாளம், சிக்கியாம், பூட்டான் அரசுகளையும் சீனக் கொம்யூனிஸம் பயமுறுத்துகிறது. இலங்கைக்கும் அந்த ஆபத்து ஏற்படாதென எப்படிக் கூறமுடியும்?

இந்நிலையில் இலங்கை தனது கொள்கையைத் திட்டவட்டமாகத் திடமாகக் கூறவேண்டும். இலங்கை மக்கள் சீன ஆக்கிரமிப்பை வன்மையாகக் கண்டிக்கின்றனர். இலங்கை அரசாங்கம் என்ன செய்யப் போகிறது? ஊசலாடும் நடுவழியைக் கைவிட்டு இந்தியாவுக்கு ஆதரவு தெரிவிக்கப் போகிறதா, இல்லையா?

# தமிழ் பேசுப் இனத்தை அழிக்க பௌத்த சமயப் பிரசாரம்

*

## பௌத்தாலயங்களை நிறுவி சிங்களத்தைத் திணிக்க முயற்சி

ஒரு சில “தாழ்த்தப்பட்ட” மக்களென்போர் பௌத்த சமயத்தைத் தழுவியதையொட்டி பௌத்த சிங்களத் தலைவர்கள் வட இலங்கையில் பல்வேறு இடங்களில் பௌத்தாலயங்களையும், பௌத்த பாடசாலைகளையும் நிறுவ முயற்சி செய்கின்றனர். இதன்மூலம் தமிழர்களைப் பௌத்தர்களாக்கி, பின்னர் சிங்களவராக்குவது அவர்களின் நோக்கமாகும். இதனால் தமிழ் பேசும் இனத்தின் வாழ்வுக்கே இன்று ஆபத்து ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்களிடையே காணப்படும் சாதிப் பாகுபாட்டைப் பயன்படுத்தித் தமிழ்ப் பிரதேசத்திலே பௌத்த சமயத்தைப் புகுத்தி, அதனை அடுத்து சிங்களத்தைத் திணிக்க சிங்கள பௌத்தத் தலைவர்கள் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறுர்கள்.

சிறுபான்மைத் தமிழர்களின் தலைவர்கள் எனக் கூறப்படும் சில சுயநலமிகள் சொந்த நலனை முன்னிட்டு தங்களின் சகோதரர்களைச் சிங்கள பௌத்தர்களிடம் காட்டிக் கொடுக்கின்றனர். “இத் தலைவர்கள்” முற்போக்குக் கும்பலைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர்கள் தம் சுயநல அபிலாஷைகளைப்பூர்த்திசெய்து கொள்ளும் பொருட்டு சிறுபான்மைத் தமிழரான ஒரு சில அப்பாவிகளை ஏமாற்றி பௌத்தத்தினுள் தள்ளிவிட்டனர். இத் தமிழர்கள் சில நாட்களுக்கு முன்பு நாகவிஹாரையில் பௌத்தர்களாகப் பட்டனர்.

### பித்தலாட்டப் பிரச்சாரம்

‘பௌத்தர்களானல் சாதி வெறி ஒழிந்துவிடும், சாதிப் பாகுபாடு மறைந்துவிடும், அரசாங்கம் சலுகைகளை வாரி வழங்கும். அவர்கள் எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாகிவிடுவாம்’ என்றெல்லாம் ஆசைவார்த்தை கூறி இந்த அப்பாவி மக்கள் ஏமாற்றப்பட்டார்கள். இன்னும் பல்வேறு விதமான நேர்முக, மறைமுக நிர்ப்பந்தங்கள் பிரயோகிக்கப்பட்டு, அவர்கள் பௌத்தர்களாக்கப்பட்டனர்.

இதற்கான சதித் திட்டங்களெல்லாம் கொழும்பில் தான் தயாராகின. சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்னும் ஸ்தாபனத்தைச் சோந்த நபர்களைக் கருவியாகப் பயன்படுத்திக் கொண்டு சிங்கள பௌத்தத் தலைவர்கள் பௌத்தத்தை வடபகுதியில் வியாபிக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுத்து வருகின்றனர்.

ஒரு சில சிறுபான்மைத் தமிழர்களைப் பௌத்தர்களாக்கியதோடு அவர்கள் நிற்கவில்லை. பௌத்தாலயங்களையும், பௌத்தப் பாடசாலைகளையும் தமிழ்ப் பகுதியிலே நிறுவ முனைந்துள்ளனர். அவை பௌத்த சமயத்தைப் பிரசாரம் செய்வதற்குப் பயன்படுவதைக் காட்டிலும் சிங்களத்தைத் தமிழர்களின் தொண்டைக்குள் திணிப்பதற்குத்தான் பயன்படுப்.

### முதற்படி

அச்சுவேலியில் பத்தமேனிப் பகுதியில் கலட்டி என்ற இடத்தில் பௌத்தாலயம் நிறுவ உதவிக் கல்வி மந்திரி திரு. வி. டி. ஜி. கருணரத்ன கடந்த வாரம் அத்திவாரக் கல் நாட்டியிருப்பது வட இலங்கையில் பல்வேறு பகுதியில் பௌத்தாலயங்களை நிறுவுவதற்கான முதற்படியாகும்.

அங்கு பௌத்த பாடசாலையொன்றுக்கு அத்திவாரக் கல் நாட்ட சிறுபான்மைத் தமிழர் மகாசபையிலுள்ள அடிவருடிகள் ஏற்பாடுகள் செய்திருந்தனர். ஆயினும் கல்வி இலாகா மூலம் அந்த ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்ற காரணத்தை முன்விட்டு பாடசாலைக்கு அத்திவாரக் கல் நாட்ட உதவி மந்திரி மறுத்துவிட்டாராம்.

உதவி மந்திரி இப்பகுதிக்கு வந்தபோது அவருக்குப் பலத்த பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டதாம். ஏராளமான பொலிஸார் சதாரணஉடையில் மந்திரியைப் பாதுகாத்து நின்றனர் என்று அறியப்படுகிறது

திரு. கருணரத்ன உதவி மந்திரி என்ற முறையிலோ, உத்தியோகத் தோரணையிலோ வட பகுதிக்கு விஜயம் செய்யவில்லை. அவரே அப் பௌத்தாலயக் கால் கோள் விழாவின்போது அந்த உண்மையை ஒப்புக்கொண்டுள்ளார். ஆகையால்தான் அவர் பொது மக்களின் கோபத்திலிருந்தும் கறுப்புக் கொடி கண்டன ஆர்ப்பாட்டங்களிலிருந்தும் தன்னைக் காத்துக் கொள்ள முடிந்தது எனக் கூறின் மிகையாகாது

### உறவு வளர்ப்பா? இன ஒழிப்பா?

பௌத்த தர்மம் இரு சமூகத்தினருக்குமிடையே உறவை வளர்க்கும் என்று திரு. கருணரத்ன கூறியுள்ளார்.

தமிழர்களிடையே காணப்படும் சாதிப் பாகுபாட்டைப் பயன்படுத்தி ஆசை வார்த்தை காட்டி, நிர்ப்பந்தங்களைப் பிரயோகித்து ஒரு சில தமிழர்களைப் பௌத்தர்களாக்கிவிட்டால் இரு பெரும் இனங்களிடையே உறவு வளர்ந்துவிடுமா?

தமிழர்களை தந்திரோபாயங்கள் மூலம் பௌத்தர்களாக்கிவிட்டால் உறவா வளரும்? நாளடைவில் தமிழினம் அழிந்தல்லவா போய்விடும்? உறவு பற்றிப் பேசுவது மென்மேலும் பௌத்தத்தைத் தமிழர்களிடையே பரப்பி தமிழினத்தை அழிக்கவா?

இதுதானு பௌத்த சமயத்தை வளர்க்கும் முறை? சூழ்ச்சிகள், தந்திரங்கள் செய்து, மற்றெரு சமயத்தைச் சேர்ந்த மக்களை பௌத்தத்தினுள் இழுத்துப் போடுவது பௌத்த தர்மத்தின் அடிப்படைக் கொள்கைக்கே மாறான செயலல்லவா?

### ஆகா! தாராளம்!

பௌத்த தர்மத்தைக் கடைப் பிடிப்பவர்களுக்கு அரசாங்கம் சகல உதவிகளையும் செய்யுமென்று இந்த உதவி மந்திரி தாராளமாகக் கூறிவிட்டார்.

வேலையின்றி, போதிய உணவின்றி, உடையின்றி, இதர வாழ்க்கை வசதியின்றி தவிக்கும் இலட்சோப இலட்சம் சிங்கள பௌத்தர்களுக்கே அந்த அரசாங்கத்தால் எவ்வித உதவியும் செய்ய முடியவில்லையே! சில வாரங்களுக்கு முன்பு பௌத்தத்தைத் தழுவிய ஒரு சில தமிழ் பௌத்தர்களுக்கு மட்டும் இந்த அரசாங்கம் எப்படி உதவி செய்ய முடியும். எல்லாம் பாமர தமிழ் மக்களை ஏமாற்றும் பசப்பு வார்த்தைகள்! இம்மாதிரியான மாய்மால வார்த்தைகளில் தமிழ்மக்கள் ஏமாந்து போவார்களென்று எண்ணுவது முற்றிலும் தவருகும்.

### சமயத்தைத் தொடர்ந்து மொழி

பௌத்த சமயத்தைத் தொடர்ந்து சிங்கள மொழியும் தமிழ்ப் பிரதேசத்துக்குப் படையெடுக்குமென்பதில் இம்மியும் ஐயமில்லை.

சாதிப் பாகுபாட்டைப் பயன்படுத்தி பௌத்தத்தைத் திணித்ததும், பௌத்தத்தைத் தழுவிக்கொண்ட தமிழர்களின் ஆதரவில் பௌத்தாலயங்களையும் பௌத்தப் பாடசாலைகளையும் நிறுவுவார்கள். பின்னர் அவற்றில் இலகுவாக சிங்களம் கற்பிக்க ஏற்பாடு செய்வார்கள். இவ்வாறு பௌத்தமும் சிங்களமும் கை கோர்த்துக் கொண்டு தமிழ்ப்பிரதேசத்திலே பரப்பப்படும். இதனால் இன அழிவுக்கு வழி பிறக்கும்.

### இதுவும் அரசியல்தான்

பௌத்த சமயத்தைப் பரப்புதலில் சமயத்தன்மையை விட அரசியற் தன்மைதான் அதிகம் பொழிந்து கிடக்கிறது என்பதைத் தமிழ் பேசும் மக்கள் கவனிக்க வேண்டும்.

இவ்விஷயத்தில் சிறுபான்மைத் தமிழ் மக்கள் மிக எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். முன்னணியில் நின்று “தீவட்டி” பிடிக்கும் தமிழ்ப் பௌத்தர்களுக்கு ஒரு சில சலுகையை அரசாங்கம் கொடுக்கக்கூடும், அதைப் பார்த்து சிறுபான்மைத் தமிழ் மக்கள் தங்களுக்கும் சலுகைகள் கிடைக்குமென்று மனப்பால் குடித்துப் பௌத்தத்தை தழுவினால், பின்னர் நிச்சயமாக ஏமாற்றமடைவார்கள்.

சிங்கள பௌத்தர்களிடையே எத்தனையோ சாதிப்

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் படையுள் புகுந்த மர்மப்படை?

# சீனன் வழி காட்ட சீறிப்பாய்ந்த காலிகள்

## கல்லும் பொல்லும் கொண்டு காயப்படுத்திய கொடுமை

சீனாவின் ஆக்கிரமிப்பை எதிர்த்து முதன் முதலில் ஆர்ப்பாட்டம் நடத்திய இலங்கைப் பல்கலைக் கழக மாணவர்கள் காலிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். இவர்களைத் தாக்கிய காலிப் படையினரை வழி நடத்திய 'சேனாதிபதி' ஒரு சீனர் என்பதை அறிந்து நாடே அதிர்ச்சி அடைந்துள்ளது. இந்த மர்மச் சீனர் யார்? என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுந்துள்ளது.

கொம்யூனிஸ்ட் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து முதன் முதலில் இங்கு நடைபெற்ற ஆர்ப்பாட்டம் இதுவாகும். இதை முறியடிக்க கொம்யூனிஸ்ட் தலைமைப் பீடமும், பல்கலைக் கழக கொம்யூனிஸ்ட் மாணவர்களும், சீனர்களும் கைக்கொண்ட கீழ்த்தரமான முயற்சி தோல்வியில் முடிந்தது மட்டுமின்றி அவர்கள் சாயமும் வெளுத்தது.

இந்தியாமீது சீனா நடாத்தும் ஆக்கிரமிப்பை எதிர்த்துச் சீனத் தூதுவராலயம் முன் ஒரு அமைதியான ஊர்வலம் நடத்துவதென இலங்கைப் பல்கலைக் கழக பொறியயல், அறிவியல் சங்கங்கள் சேர்ந்து சென்ற மாதம் 30ம் திகதி நடத்திய கூட்டத்தில் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்துக்குச் சாதகமாக 139 வாக்குகளும், பாதகமாக 41 வாக்குகளும் கிடைத்தன.

பொலீசாரிடம் உத்தரவு பெற்றபின் தீர்மானத்திற்கேற்ப சுமார் 200 மாணவர்கள் பல்கலைக் கழகத்திலிருந்து புறப்பட்டு ஊர்வலமாக சீனத் தூதராலயம் சென்றனர். தூதராலயத்தை அணுகிய மாணவர்கள் தூதராலய முன் 40 நபர்கள் கூட்டமாக நிற்பதையும் அவர்கள் மத்தியில் ஒரு சீன நபர் நிற்பதையும் கவனித்தனர். மாணவர்களின் ஊர்வலத்தைக் கண்ட அக்கூட்டத்தினர் சீனா ஒழிக! என்று கோஷமிட்டனர். மாணவர்களும் அவர்களை தங்களைப் போன்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் என்று எண்ணி முன்னேறினர்.

ஆனால் மாணவர்கள் ஊர்வலம் அருகில் வந்ததுதான் தாமதம், அக்கூட்டத்தினரின் 'சீனா ஒழிக!' என்ற கோஷம் 'சீனாவாழ்க!' என்று மாறியது. 'தமிழன் ஒழிக!' 'கத்தோலிக்கன் ஒழிக!' என்ற கோஷங்களுடன் மாணவர்களுக்கு தடார், மடார் என்று பெரும் பொல்லுகளாலும், தடிகளாலும் அடிக்கத் தொடங்கினர். கூட்டத்தினர் சிலர், சீன நபரின் கட்டளைப்படி பின் சென்று விக்டோரியாப் பூந்தோட்டத்திற்குள் மறைத்து வைத்திருந்த மண் நிரப்பப்பட்ட போத்தல்களாலும், கற்களாலும் சாரமாரியாகப் பொழிந்தனர்.

காத்திராப் பிரகாரமாக நடந்த இந்தத் தாக்குதலால் திணறிய மாணவர்களிற் சிலர் பொல்லுகளாலும், போத்தல்களாலும் தாக்கியவர்களை வெறும் கைகளுடன் எதிர்க்கவேண்டியிருந்தது. மற்றவர்கள் பின்னால் ஊர்வலத்துக்குப் பாதுகாப்புக்காக வந்த பொலீசாரிடம் முறையிட்டனர் பொலீசாரோ முதலில் தலையிடத் தயங்கினர். பின்னர், பல மாணவர்கள் காயப்பட்டதைக் கண்டது, வண்டியை விட்டிறங்கி வந்தார்கள். பொலீசைக் கண்டதும் சீன நபரும், காடையர் சிலரும் கார்களிலேறி நழுவ மற்றைய கம்யூனிஸ்ட், சமசமாஜக் காடையர்கள் சற்று தொலைவிலுள்ள 'ஹைட் பார்க்கில், அதே தினத்தில் நடைபெற்ற 'கியூபாவில் கைவைக்காதே' கூட்டத்திற்குச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

இத்தாக்குதலில் 2 மாணவர்கள் படுகாயமடைந்தார்கள். பல சிறு காயங்களுக்காக சிகிச்சை பெற்றனர். மாணவர்கள் தங்கள் ஆர்ப்பாட்டத்தை முடித்தபின் இந்தியத் தூதராலயம் சென்று தூதரிடம் தங்கள் தீர்மானத்தைச்சமர்ப்பித்து விட்டுச் சென்றனர்.

மாணவர்களைத் தாக்கிய காடையர்கள் வேறு யாருமல்ல கியூபா ஆர்ப்பாட்டத்தில் பொலிசாரிடம் அடிபட்டு, பொலிசார் அடித்ததைக் கண்டித்துத்திரிந்தவர்கள் என்று கூறப்படுகிறது. இவர்களுடன் கொழும்பு மாநகரசபையின் கம்யூனிஸ்ட் ஊழியர்களும் லிப்டன்ஸ் கம்பெனி சமசமாஜ ஊழியர்களும் சேர்ந்து கொண்டார்கள். இக்கூட்டதின் மத்தியில் சமசமாஜக்கட்சி மாநகரசபை அங்கத்தவரின் கம்யூனிஸ்ட் சகோதரர் ஒருவரும், பல்லைச் கழகத்தில் உள்ள ஒரு தமிழ்க்கம்யூனிஸ்ட் மாணவரின் அண்ணனும் முக்கிய பங்கு கொண்டனராம்.

பிற்பகல் 4 மணிவரையில் சீனத் தூதராலயத்துக்கு அண்மையில் காத்திருந்த பத்திரிகைப் படப்பிடிப்பாளர் ஒருவர் 'இத்தாக்குதலுக்கான ஏற்பாடுகளை ஒரு சீன நபர் 4 கம்யூனிஸ்டுகளுக்கு படம் போட்டு விளக்கிக் காட்டியதாகவும், இந்த 4 பேர் சென்று 30 நிமிடங்களில் பல வாடகைக்கார்களில் படைதிரட்டி வந்து இறங்கி, சீனத் தலைவரிடம் கடைசி நேர உத்தரவுகளைப் பெற்று களம் நோக்கிச் சென்றதாகவும் தெரிவித்தார்' என்று ஒரு ஆங்கிலத் தினசரியில் வெளியான செய்தி இங்கு குறிப்பிடத்தக்கது.

மறுநாள் பல்கலைக்கழக மாணவர்கள் கூடி, முதல் நாள் நடந்த சீன ஆக்கிரமிப்பு எதிர்ப்பு ஊர்வலத்தில் சென்ற மாணவர்களைக் காடையர்கள் தாக்கியதற்குக் காரண கர்த்தாக்களாக இருந்த 'பல்கலைக்கழக மாணவர்கள்' யார் என அறிய வேண்டியது பற்றி ஒரு விசாரணை நடாத்தப்படவேண்டும் என்ற தீர்மானித்தார்கள். தாக்குதலை உந்திவிட்ட கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சிகளின் ஆதரவாளர்களான மாணவாகள் அன்று என்றுமில்லாதவாறு பேச்சு மூச்சின்றிக் - காணப்பட்டதுடன் தீர்மானத்தையும் ஆதரித்து வாக்களித்தனர் என்றும் வர்ணிக்கப்படுகிறது. தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## தமிழ் பேசும் . . .

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

பாகுபாடு உண்டு. 'தீண்டத்தகாதவர்கள்' என்போரும் அவர்கள் மத்தியில் இருக்கின்றனர். சிங்கள பௌத்தர்களுக்குத் தங்களிடையே வேரூன்றியுள்ள சாதிப் பாகுபாட்டையே ஒழிக்க முடியவில்லையே! தமிழர்களிடையேயுள்ள சாதிப் பாகுபாட்டை அவர்கள் எப்படி ஒழிக்கப்போகிறார்கள்? சிறுபான்மைத் தமிழர்களின் கண்ணில் மண்ணைத் தூவும் பித்தலாட்டப் பிரசாரத்துக்கு அவர்கள் ஏமாந்துவிடக் கூடாது.

இந்து சமயமோ வேறு எந்த சமயமோ தீண்டாமையை ஆதரிக்கவில்லை. எந்த மதமும் மனிதர்களிடையே உயர்வு தாழ்வோ, பாகுபாடோ கற்பிக்கவில்லை.

### ஒழித்தேயாக வேண்டும்

தீண்டாமை என்பது தமிழர் சமுதாயத்தின் ஒரு பெரும் சாபத்தீடு என்பதில் இருவித அபிப்பிராயங்கள் கிடையா அதனை ஒழித்தேயாக வேண்டும். சாதியின் பெயரால் தமிழ் மக்களைக் கூறு போட்ட காலம் மறைந்து வருகிறது.

பாரதத்திலே தீண்டாமையின் கொடுமை பெருமளவு ஒழிக்கப்பட்டுவிட்டது. காந்தி அடிகளின் தீண்டாமை ஒழிப்பு இயக்கம் மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய ஓர் இயக்கம் இந்நாட்டிலும் உருவாகி வருகிறது. இவ்வியக்கத்தை இன்னும் தீவிரமாகவும், வேகமாகவும் நடத்தினால் தீண்டாமைக்குச் சாவுமணி அடிக்க நீண்டகாலமாகாது. அதை விடுத்து மதத்தை மாற்றிக் கொள்வது தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதாகும்.

## ஆக்கிரமிப்பு எதிர்ப்புக் கூட்டமும் நிதி திரட்டலும்

எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இந்தியாவுக்கு ஆதரவளிக்குமுகமாகவும், சீனாவின் ஆக்கிரமிப்பை எதிர்க்குமுகமாகவும் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் 17-11-62 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஓர் கூட்டத்தை நடாத்த தமிழரசுக் கட்சி ஏற்பாடு செய்துள்ளது. இக் கூட்டத்திற்கு யாழ் நகர முதல்வர் டாக்டர் ச. அ. தர்மலிங்கம் தலைமை தாங்குவார்கள்.

முன்னாள் மேயர்களான திரு. க. பொன்னம்பலம், திரு. ரி. எஸ். துரைராசா ஆகியோர்களும், டாக்டர் எஸ். சுப்பிரமணியம், வழக்றிஞர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம், ஜனாப் வி. முத்துராசா, உடுப்பிட்டி பிரதிநிதி திரு. எம். சிவசிதம்பரம், நியாயதுரந்தரர் திரு. இ. கதிரவேலுப் பிள்ளை ஆகியோர்களுடன் தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களும், செனட்டர்களும் பங்குபற்றிச் சொற்பெருக்காற்றுவார்களெனத் தெரிகிறது.

### நிதி திரட்டல்

கூட்டத்தின் போது, இந்திய பாதுகாப்பு நிதிக்கு பொருள் திரட்டுவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாம் வெட்கப்பட வேண்டியதில்லை

பிகார் முதல் மந்திரி பண்டிதர் பினோதானந்த் ஜா, சோன்பூரில் மாபெரும் பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில்,இந்தியா மீது சீனாஅநியாயமான பலாத்காரத்தை உபயோகித்ததன் மூலம் உலகஅபிப்பிராயத்தின் கண்டத்துக்குள்ளாகி, போரில் முதல் கட்டத்தைத் தோற்று விட்டதென்று கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், போருக்கு ஆயத்தமாகவிருக்கவில்லையே என்று இந்தியா வெட்கப்படவேண்டிய அவசியமில்லையென்றார்.

உலகத்துக்குச்சமாதானத்தைப் போதிக்கும் அதே நேரத்தில் யுத்தத்திற்கு இரகசிய ஆயுதங்கள் செய்வதில் இந்தியா ஈடுபடவில்லை.

இதன் மூலம் இன்று உலகம் இந்தியாவின் ஆத்மீக உயர்வை விளங்கியுள்ளது. அதுதான், மற்ற நாடுகளெல்லாம் இந்தியாவுக்கு உதவி அளிக்க முன் வருகின்றன.

"நாங்கள் இரட்டை நாக்குடன் பேசுபவர்கள் அல்ல என்று நாம் உலகுக்கு எடுத்துக்காட்டியுள்ளோம். ஆரம்பத்தோல்விகள் சில எமக்கு ஏற்பட்டிருந்த போதிலும், இந்தியாவின் ஆத்மா காப்பாற்றப்பட்டுவிட்டது. எங்கள் நாட்டின் நேர்மைக்கு அத்தாட்சி அளித்துவிட்டோம். சொன்ன சொல்லைச் செயலில் காட்டும் நேர்மை மிக்க நாடு என்ற பெயரை நாம் நிலைநாட்டிவிட்டோம். இதுஒரு சிறிய வெற்றியல்ல".

"ஆனால், மறுபக்கத்தில், சீனர்களின் துரோகச் செயல் கொம்யூனிஸ்டு நாடுகளையே அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. உலகம்முழுவதும், சீனாவை நம்பிக்கைத் துரோகம் இழைக்கும் கொடூரமான, ஆக்கிரமிப்பு நாடென்று ஏகோபித்துக் கண்டனம் தெரிவித்துள்ளது".

## பாதுகாப்பு நிதி பற்றி அ.எ.வி. சங்க தீர்மானம்

ஜனநாயகம், சுதந்திரம், சமாதானம், இவற்றின் சின்னமாக ஒளிவிடும் பாரதத்திற்கு எங்களது ஆதரவையும், ஐக்கியத்தை எடுத்துக்காட்டும் வண்ணம் இந்தியத் தேசியப் பாதுகாப்பு நிதிக்கு தாராளமாகப் பொருளுதவி நல்குமாறு அரசாங்க எழுது வினைஞர்சங்கம் தனது உறுப்பினர்களை விரும்பிக்கேட்டுக் கொள்கிறது.

மேற்படி தீர்மானம் அண்மையில் கூடிய அரசாங்க எழுது வினைஞர் சங்கக் கூட்டத்தில் பிரேரிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எங்களிடம் எல்லாவித
பொறியியல்
உபகரணங்களும்
இரும்புச் சாமான்களும்
கிடைக்கும்.

இலங்கையின்
கைத்தொழில்
சமத் தொழில்
அபிவிருத்திக்காகச்
சேவை செய்கின்றோம்.

கே. என். அப்துல்காதர் ராவுத்தர்
அன் கம்பனி லிமிட்டெட்,
312, ஸ்கினர்ஸ் வீதி தெற்கு,
கொழும்பு.
தொலைபேசி: 2956 & 2028

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1962 ஒக்டோபர் 19-ந் திகதி.

'யுத்த விளிம்பில் உலகை உருட்டிவிடுமோ?' என்று அரசியல் அவதானிகளை அஞ்ச வைத்த சீனர்களின், இந்திய எல்லைப்படையெடுப்பின் முந்திய தினம்.

நேரம் பின் ஜாம வேளை.

முப்பதுபாகை 'டிகிரி'க்குக் கீழ் உஷ்ணம் இறங்கி, மனித உடலை விறைக்க வைக்கும் கோரமான பனித்தூற்றல்.

இமயப் பிராந்தியத்தில், சீன-இந்திய மண்ணை இருவகிடாகப் 'புறிக்கும்' 'மக்மோஹன்' எல்லைக் கோட்டை அடுத்துக் கிடந்த 'லடாக்'கை வருடி ஓடும் 'சிப்சாப்' நதி, துடிப்பின்றி-துவளலும் துள்ளலுமின்றி உறைந்துகிடக்கும் 'மப்பு' நிலை!

ஓடுவதற்கென்றே பிறவியெடுத்த நதி கூட, அப்பொழுது பெய்த பேய்ப் பனிக்கு அஞ்சி விறைத்துச் செயலிழந்துகிடக்க, ஒரே ஒரு மனிதன் மட்டும், இயற்கையின் இராட்சத ஆட்சிக்குச் சவால் விடுபவன்போல் எங்கோ நடந்து கொண்டிருந்தான்!

இந்தியப் பிரதேசத்திலிருந்து சீனஎல்லையை'இலக்கு' வைத்து அவன் கால்கள் முன்னேறின. கரடுமுரடான மலைப்பாறைகளும், கடுங் குளிரும் அவன் கால்களைத் 'தகைக்க'க் காணேம். குண்டும் குழியும், மேடும் பள்ளமுமாக இருந்த அந்தப் பிரதேசத்தில், வெகு இலாகவமாக அந்த மனிதன் தன்னந் தனியே நடந்துகொண்டிருந்தான்.

அதோ ஒரு பாறை.

கெவர்வடிவில் பிளந்து நிற்கும் அந்தப் பாறையைக் கண்டதும் அவன் மார்பு விரிகின்றது; கண்களில் ஒளி பரவுகின்றது.

சுற்றுமுற்றும் பார்த்துத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டு, அந்தப்பாறையை அணுகினன் அந்த மனிதன்.

அப்படி அணுகியவன்—

குசுகுசுத்த குரலில்—

"சுங்"! என்முன்!

"'சூ மந்திரகாளி' என்று மந்திரம் ஜெபிக்கிறனே?" என்று நாம் சந்தேகிப்பதற்குள்; பாறையின் மறுபுறத்திலிருந்து ஒரு மனிதத்தலை எட்டிப்பார்த்தது—

"யார் பலதேவ்சிங்கா?" என்று கேட்டு நிறுத்தியது.

"ஆம் நண்பா! பலதேவ் சிங்கேதான்!"

"குறித்த நேரத்தில் தவருது நீ வந்ததையிட்டு மிக்க மகிழ்ச்சி" என்முன் பாறையின் மறுபுறத்தில் நின்ற செஞ்சீன வீரன் சுங் டான் சுங்!

"ஏதோ திட்டம் தீட்டியிருப்பதாகச் சொன்னயே! சீக்கிரம் சொல். எங்கள் இந்தியக் காவல் நிலையத்தில் என்னைத் தேடுவார்கள். நாங்கள் முப்பதே முப்பது பேர்களல்லவா? அதனுல் ஒருவர் ஒருவர் இல்லாவிட்லும் இடைவெளி பெரிதாகத் தெரிந்துவிடும்." என்முன் இந்திய வீரன் பலதேவ் சிங்.

"எங்கள் காவல் நிலையத்தில் மட்டும் என்ன வாழ்ந்தது? உங்கள் படைவீரரை விட ஐந்து மடங்கு அதிகம்; அவ்வளவுதான்!"

"சரி சரி சீக்கிரம் விஷயத்தைச் சொல்".

சீனத்துச் சிப்பாய் தன் சின்னக் கண்களை நாலாபக்கமும் ஓட்டிச் சூழலை அவதானித்து விட்டுப் பலதேவ்சிங்கின் காதில் இரகசியமாக எதையோ ஓதிவிட்டு வேகமாக நடையைக்கட்டினன் அவன்.

சீராக வளர்ந்திருந்த தன் தாடியை மெல்ல வருடிக் கொண்டான் வீரன் பலதேவ்சிங்.

அப்புறம் தன் ஜாகையை நோக்கி நடந்தான்.

1962 ஒக்டோபர் 20-ந் திகதி காலை.

பாரத புண்ணிய பூமியின் ஓர் அங்கமாக லடாக் அதிர்ந்தது! அந்த அதிர்ச்சியால், ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட உலகநாடுகள் அனைத்தும் அதிர்ந்தன! பிட்டுக்கு மண் சுமந்த பரமனுக்கு, மதுரைமாறன் பிரம்பினுல் அடித்த அடி, உலகத்து ஜீவராசிகளனைத்தையும் துனுக்குற வைத்ததுபோல், சீன இந்திய எல்லையில் அடித்த அடி உலகத்தைத் துடிக்க வைத்தது.

வெளுத்ததெல்லாம் பால் என்ற கணக்கில் இருந்துவிட்ட இந்தியர்களின், லடாக் பிரதேசத்தைச் சேர்ந்த பதினறு காவல் நிலையங்களில், பதினெரு நிலையங்களை ஏககாலத்தில் எதிர்பாராதவகையில் சீனர்கள் தாக்கிய திடீர்த்தாக்குதல் அவர்களை ஒரு கணம் நிலைதடுமாற்றத்துள் ஆழ்த்திவிட்டதெனினும், மின் வெட்டு நேரத்தில் உஷார் பெற்றுவிட்டனர்.

தாய்த்திரு மண்ணைக் காப்பதற்காக உக்கிரமாக வெகுண்டெழுந்து சீனருடன் பொருதினர்.

வீரன் பல்தேவ்சிங் கடமைபுரிந்த காவல் நிலையத்தில் முப்பதே முப்பது வீரர்கள் இருந்தாலும், அவர்களை எதிர்த்துத் தாக்கிய நூற்றைம்பது சீனச்சிப்பாய்களையும் ஓட ஓட விரட்டியடித்த வீரச் செயலைக் கண்டு இந்தியத்தாய் இதயம் பூரித்தாள்.

ஆனல்?

அந்தப்பூரிப்பு நீண்ட நேரம் நீடிக்கவில்லை. பின் வாங்கி ஓடிய சீனர்கள் மீண்டும் புதுப்பலம் பெற்றுப் புதியவேகத்தோடு தாக்குதலை எல்லையின் பலமுனைகளுக்கும் விஸ்தரித்தனர்.

அலை அலையாக வந்து தாக்கிய வேகத்தின் முன் இந்தியப் படை வீரர்களின் பலம் தூசாகியது.

முக்கியமாக முந்தியதினப் பின் ஜாம வேளையில், இந்திய வீரன் பலதேவ்சிங்குடன் இரகசியம்பேசிய சீனத்துச் சிப்பாய் சுங் புரிந்த தீரச்செயல் இந்திய வீரர்களை 'வெலவெல'க்கச்செய்தன.

எல்லையின் வடகிழக்குப் பிராந்தியத்திலிருந்த டோலா, லோஹிட், நம்காசூ ராதி, கின்ஸ்மேன், சஸ்தார், சிப்பு, ஜிக்சாங், சாங்டோ, கட்டுஸ்கடவை முதலிய இந்தியப் பகுதிகளிலிருந்து வந்து கொண்டிருந்த செய்திகள் துயரமூட்டுவனவாய் இருந்தன.

நிலைமைபோகும்போக்கை அவதானித்த பலதேவ்சிங், பதஷ்டமடைவதற்குப்பதில் தெளிந்த நிதானம் காட்டி, சீனர்களின் முன்னேற்றத்தை அங்கீகரிக்கும் பங்கில் செயல்புரிந்தது புரியாத புதிராக இருந்தது!

இந்தியக் காவல் நிலையத்தின் ஓர் அங்கம்.

புற்றீசல் போல் திரண்டு வந்த சீனவீரர்களின் பைசாசத் தாக்குதலுக்குச் சற்றும் தளர்ந்து விடாது இந்திய வீரர்கள் ஊர்க்கமாகப்போர் புரிந்து கொண்டிருந்தனர்.

புதுரக ஆயுதங்கள் சகிதம் சீனர்கள் தாக்கிய ஆவேசத் தாக்குதல் அணியில் முதல் ஆளாக நின்று சமர் செய்து கொண்டிருந்தான் சீனத்துச் சிப்பாய் சுங் டான் சுங்.

புதிய புதிய உத்திகளை இமைக்கும் நேரத்தில் கையாண்டு, இந்திய இலக்குகளைத் துவம்ஸப்படுத்தி நிர்மூலம் செய்த அவனுடைய திறம் வியக்கத்தக்கதாக இருந்தது.

காட்டாற்று வெள்ளம் போல் தடம்புரண்டு முன்னேறிய செஞ்சீனப் படையில், சுங் தன்னந் தனியனுகச் செய்த ஆங்காரச் செயலைக்கண்ட, பலதேவ்சிங்கின் உள்ளம் மலர்ந்தது!

தாம் கபளீகரம் செய்த இந்தியப் பூமியில் இமைக்கும் நேரத்தில் செஞ்சீனர்கள் குழிவெட்டி, அதனுள்ளிருந்து கொண்டு மீண்டும் மீண்டும் உக்கிரத்தாக்குதலை மேற்கொண்டனர்.

அதோ—

சீன வீரன் சுங்கும் ஒரு குழிக்குள் தன் உடலை மறைத்துக் கொண்டு இந்திய வீரர்களைச் சுட்டுத் தள்ளுகிருன்.

"வீரசுதந்திரம் வேண்டி நின்றூர் பின்னர்வேறென்று கொள்வாரோ"? என்ற பாரதியின் திருவாக்கை, எதிர்ப்புறத்திலிருந்த பாரத வீரர்கள் மெய்ப்பித்துக் கொண்டிருக்கின்றனர். பாரதப் படையினர் காட்டிய சளைக்காத எதிர்ப்பு அந்த யுத்தமுனையில் திடீரென்று ஒரு திருப்பத்தை ஏற்படுத்துகின்றது.

காற்று இந்தியாவின் பக்கம்திரும்பியது! தாம்இழந்த ஒரு சில இலக்குகளை அங்குலம் அங்குலமாகப் பாரத வீரர்கள் தமதாக்கிக் கொண்டு வருகின்முர்கள்.

சீனர்களின் கை ஓய்கிறது.

சீனவீரன் சுங், கை ஓய்ந்த சீன வீரர்களுக்குத் தன்னுல் இயன்றவரை உற்சாகமூட்டிக் கொண்டிருக்கிருன். அந்தப் 'பராக்கில்' தன்னை மறந்திருந்த அவனை நோக்கிவந்த அதிபயங்கர அபாயத்தை அவன் உணர முடியாது போய்விடுகின்றது.

அதோ இந்திய வீரன் ஒருவனின் துப்பாக்கிக் குழல், சுங்கின் தலையைக் குறி வைத்து நகர்கின்றது......

ஒன்று......... இரண்டு......

விசையை அழுத்த அவன் விரல்கள் ஆயத்தமாகிய 'பிரசவநேரவேலை'யில்--

பாய்ந்து சென்ற பலதேவ் சிங் துப்பாக்கியை அப்பால் தட்டிவிடுகிருன்!

'டுமீல்'!

இந்திய வீரனின் துப்பாக்கிக்குண்டு குறிதவறி எங்கோ காட்டுப்பிரதேசத்தை ஊடறுத்து மடிகின்றது!

அந்தப் பேரொலியால் உஷார் பெற்ற சீனத்துச்சிப்பாய் சுங், தன் இக்கட்டான நிலைகண்டு, 'வெற்றிகரமாக' பின்வாங்கி ஓடி மறைகிருன்!

பலிவேளை தவறிய பத்திரகாளிபோல், வெறிகொண்டு பலதேவ்சிங்கைக் கசக்கிப் பிழிய முனைந்த அந்த வீரனைத் தன் வஜ்ரக் கரத்தால் தடுத்து நிறுத்திஞன் பலதேவ்சிங்.

"துரோகி! என்ன காரியம் செய்தாய்? நச்சுப் பாம்பை நசுக்கி எறிய நான் எடுத்த முயற்சியைக் கெடுத்துவிட்டாயே! நீயும் ஓர் இந்தியனு?"

உணர்ச்சிமயமாய்க் காட்சியளித்த அந்தப் பாரத வீரனைத் தன் இருகரங்களாலும் இறுகத்தழுவி மார்புடன் அணைத்தான் பலதேவ் சிங்.

அந்த வீரத் தழுவலில் வீரனின் கொதிப்பு பொசுங்கியது. கண்களால் அவனை ஜாடை காட்டி, "சுமாஎன்!

(14-ம் பக்கம் பார்க்க)

# சீனனே வெளியேறு!

## சட்ட மாணவர் ஆர்ப்பாட்டம்

**இந்தியா மீது நடக்கும் சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து சீனத் தூதுவராலயம் முன் 5-11-62 திங்கட் கிழமை மாலை இலங்கை சட்டக்கல்லூரி மாணவர்கள் ஒரு மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்கள்.**

திங்கள் பிற்பகல் 8 மணியளவில் கொழும்பு ஹல்ஸ்டோவிலுள்ள சட்டக்கல்லூரி மண்டபத்திலிருந்து புறப்பட்டு மருதானை வழியாக நூற்று ஐம்பதிற்கு மேற்பட்ட இளைஞர்கள் சீன ஆக்கிரமிப்பை எதிர்த்துக்கோஷமிட்டவாறேசீனத் தூதுவராலயம் சென்றனர்.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்றுமொழிகளிலும் சீனனே வேளியேறு! இந்தியா இந்தியருக்கே! நேற்று திபத்,இன்று இந்தியா, நாளை இலங்கை போன்ற பல சுலோக அட்டைகளைப் பிடித்தவாறு சட்டக்கல்லூரியை விட்டு வெளியேறிய மாணவர்களைச் சில வகுப்புவாத வெறியர்களதும், கண்ணியமற்ற கம்யூனிஸ்ட்களதும் கூச்சல்கள் தடுக்கவில்லை.

சீனத் தூதுவராலயத்தை அடைந்த மாணவர்கள் சட்டக் கல்லூரி மாணவர்கள் நீதி கோருகிருேம்! கம்யூனிச ஆக்கிரமிப்பே ஒழிக! நேருவுக்கு ஜே! சூ. என். லாயை தூக்கிலிடு, சனநாயகம் வாழ்க! இந்தியா வாழ்க! என்ற கோஷங்களுடன் தூதராலயம் முன் நான்கு முறை வலம் வந்தனர்.

பலத்த பொலீஸ் பாதுகாப்பின் கீழிருந்த தூதுவராலயத்தின் யடலைகள் மட்டுமன்றி அதிகமான யன்னல், கதவுகள் எல்லாமே மூடப்பட்டிருந்தன. ஆனல் சற்றுத் திறந்திருந்த யன்னல்களினூடாக சில மஞ்சள் கண்கள் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கூர்ந்து பார்த்தன. கம்யூனிஸ்ட் காடையரால் பல்கலைக் கழக மாணவர்கள் தாக்கப்பட்ட செய்தியறிந்தும், அஞ்சாது ஆர்ப்பாட்டம் செய்கிருர்களே என்ற ஆச்சரியத்தால் அக் கண்கள் விரிந்திருந்தனபோலும்!

தங்கள் எதிர்ப்பினைக் காட்டிய மாணவர்கள் புதிய நகர மண்டபத்தண்டை கூடி ஒரு கூட்டம் நடத்தினர்கள். கூட்டத்தில் பேசினேர் சீன ஆக்கிரமிப்பை வன்மையாகக் கண்டித்ததோடு பல்கலைக் கழக மாணவர்களைத் தாக்கிய கம்யூனிஸ்ட், சம சமாஜக் காடையர்களையும் கண்டித்தனர்.

கூட்டம் முடிவடைந்து மாணவர்கள்கலைந்து சென்ற பின் அதே இடத்தில் சில கம்யூனிஸ்ட் வாதிகளுக்கும் கூட்டத்திற்கு வந்திருந்தோருக்குமிடையே ஒரு கைகலப்பு ஏற்பட்டு, ஒருவர் கத்தியால் குத்தப்பட்டார்.


# வேல் தைலம்
## மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்ருகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

**விலை ரூபா 1-25**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

**S. P. S. ஜெயம் கம்பெனி,**

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,**

**34, செட்டியார் தெரு,**

கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன ஆக்கிரமிப்பு-பேராசையின் விளைவு!

## பொறுமையுள்ள இந்தியாவுடன் பொருத எண்ணியது மடமை

"சீனு எல்லைக்கோடு சம்பந்தமாக பாரபட்சம் காட்டுகிறது. சீனு கடைப்பிடிக்கும் ஆக்கிரமிப்புக் கொள்கையினுல் இந்தியாவின் நடுவு நிலைமை மாற்றப்பட்டுவிடும். திபெத் புரட்சியின் போது கூட இந்தியா தனது பொறுமையைக் கைவிடவில்லை. போதுமான சகிப்புந் தன்மையைக் கைக்கொண்டது. ஆசிய நாடுகளுக்குத் தலைமை வகிக்க வேண்டுமென்ற பேராசைதான் சீனுவை இந் நிலைக்குத் தூண்டியிருக்கிறது. சோஷலிச நாடுகளின் எதிர்ப்பும் சீனுவுக்கு இதனால ஏற்பட்டுள்ளது" என்று சுதந்திரன் "ஆக்கிரமிப்பு எதிர்ப்பு" மலருக்கென மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. பிலிப் குணவர்தன எழுதியுள்ள ஒரு விசேட கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய — சீன எல்லைத் தகராறு பற்றி இலங்கை அரசாங்கத்திடம் வரையறுக்கப்பட்ட திட்டவட்டமான கொள்கை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அதிகாரத்திலிருப்பவர்களின் அனுபவமின்மையும், அவர்களைச் சூழ்ந்திருப்பவர்கள் அவர்களுக்கு அளிக்கும் தப்பான புத்திமதியுமே இதற்குக் காரணமாகும். ஆகவே, பொது மக்களுக்கு உண்மையை கூறி வைக்க வேண்டியதை, நாம் எமது கடமையாக எண்ணுகிறோம்.

நீண்டகாலமாக இந்தியாவுக்கும் சீனுவுக்குமிடையே உள்ள எல்லை மாக்மோகன் எல்லைக் கோடென்றே கருதப்பட்டு வந்தது. இந்த எல்லைக் கோட்டின் உண்மையைச் சீனு, திபெத்துடனும், பர்மாவுடனும் ஒத்துக் கொண்டுள்ளது. அதே நேரத்தில் இத்தகைய ஒப்புதலை இந்தியாவுடன் ஏன் செய்ய முடியவில்லை என்பது எங்களுக்கு விளங்க முடியாததொன்றுகும். இந்தியாவுக்கும் சீனுவுக்குமிடையே இந்த எல்லைப் பிரச்சினை ஆரம்பமான காலத்திலே இப் பிரச்சினையைப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்து வைக்க வேண்டுமென்றே சீனு கூறி வந்தது. ஆனல், இப்போது தங்கள் பிரதேசங்களை மீட்பதாகச் சொல்லிக் கொண்டு, இந்திய மண்ணை ஆக்கிரமிக்கு நோக்கத்துடன் போர் தொடங்கியுள்ளது சீனு.

### எல்லை எது என்பதில் ஐயமில்லை

எங்கே தனது எல்லை இருக்கின்றது என்பதையிட்டுத் தனது மனதில் திட்டவட்டமாகத் தெரிந்து கொண்டுள்ளது இந்தியா என்பதில் ஐயம் இல்லை. மாக்மோகன் எல்லைக்கோடு என்றழைக்கப் படுவது தான் உண்மையிலேயே இந்திய—சீன எல்லைகளைப் பிரிக்கும் கோடாகும்.

அந்த எல்லைக்கோடு ஒரு தேசத்தின் நியாயமான, இயற்கையான எல்லை நிர்ணயமாகும் என்று இங்கு வந்திருந்த போது நேரு குறிப்பிட்டிருந்தார்.

இந்தச் சூழ்நிலையில், ஒருவரும் இத்தகைய நெருக்கடியை எதிர்பார்க்கவில்லை, முக்கியமாக, சீனு ஒரு சோஷலிச நாடென்ற காரணத்தாலும், இத்தகைய ஆக்கிரமிப்பு நடவடிக்கை சோஷலிசக் கொள்கைக்கே இழுக்காகிவிடுமென்றபடியினுலுமே. சொந்த நாட்டின் நிலத்தை

**பிலிப் குணவர்தன**
**தலைவர்: மக்கள் ஐக்கிய முன்னணி**

அபகரித்த ஆக்கிரமிப்பாளருடன் கூட, உடனே போருக்குச் செல்வது என்பது சோஷலிசக் கொள்கைக்கு ஒத்து வராததொன்றுகும். அது, எங்கள் கருத்தில், ஏகாதிபத்தியவாதமாகும். ஆகவே சீனரின் இன்றைய நடவடிக்கையை சோஷலிச உலகம் முழுதும் ஒரு முகமாகக் கண்டிக்க வேண்டுமென நாம் விரும்புகிறோம்.

### பெரும் பிழை

பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினைக்கு ஒரு முடிவு காண இந்தியா முயற்சித்து வந்த வேளையில், இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையைச் சீனு மேற்கொண்டது ஒரு பெரும் பிழையாகும். சீனரின் போக்கு, சோஷலிச உலகத்தின் மீது நடு நிலைமை நாடுகளுக்குள்ள நம்பிக்கையைக் குறைக்கவே உதவும்.

எந்த ஒரு பக்கமும் சாராது, நடுவுநிலைமைக் கொள்கைக்குத்தன்னை அர்ப்பணித்துள்ள நாடே இந்தியா. இத்தகைய நாட்டுடன் சம்பந்தங்கள்வைத்துக் கொள்வது சுலபம். சீனு, தனது இன்றைய கொள்கையை மேற்கொள்வதன் மூலம், நடுவுநிலை நாடான இந்தியாவைப் பிற்போக்காளர்களின் முகாமினுள் தள்ளி வருகிறது. தன்னைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற நாடுகளிடம் இந்தியா உதவி கோரியிருப்பதன் மூலமே இது நடைபெற்றுள்ளது. பிற்போக்கு சக்தியான அமெரிக்க வல்லரசுடன் சேர்ந்து ஒரே போர் முனையில் எந்தவொரு சோஷலிச நாடும் போரிட முடியாது. இத்தகைய சந்தர்ப்பங்களில், அமெரிக்க முகாமில் இந்தியா விழுவதை ஒருவராலும் தடுக்க முடியாது. இதற்கு, சோஷலிச நவசீனுவைத் தவிர வேறு யார் காரணமாவார்?

நவசீனுவில் இழைக்கப்பட்ட இந்தஅநீதியினுல்,இந்தியாவின் பொருளாதார அபிவிருத்தி வேலை தடை செய்யப்பட்டுள்ளது. ஏகாதிபத்திய வாதிகளின் [illegible] லிருந்து அண்மையில் சுதந்திரம் பெற்ற ஒரு நாடு, தனது தேசிய அபிவிருத்திக்காகப் பாடுபடும் தருணத்தில், அதன் பாதையில் முட்டுக்கட்டை போடுவது ஒரு சோஷலிச நாடடுக்கு உகந்த தர்மமாகாது. அப்படி ஒரு சோஷலிச நாடு நடக்கும் என யாரும் எதிர்பார்ப்பதுமில்லை.

திபெத் புரட்சி, இந்தியாவின் பொறுமையின் மகத்துவத்தை எமக்குக்காட்டியது. திபெத்தில் நவசீனு வேண்டிய மாதிரிச் செய்வதற்கு முட்டுக்கட்டையாக இந்தியா நிற்கவில்லை. ஆனல், ஒரு நாட்டின் சொந்த மண்ணிலேயே கை வைக்கும் பொழுது,இத்தகைய பொறுமையை நாம் அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது நியாயமாகாது. இத்தகைய பொறுமையான மனப்பான்மையை இந்தியா வளர்த்து வந்தது, ஒரு வேளை தேசிய அபிவிருத்திப் பணியில் அது அதிக அக்கறையுடன் ஈடுபட விரும்பியதனுலாகலாம். அத்தகைய அதனுடைய பணிக்கு இடையூறுக நிற்பவர்கள் இந்தியாவின் எதிரிகளேயாவர்.

### சீனுவின் குறுகிய மனப்பான்மை

ஆசியத் தலைமையில் கெலிப்பிடித்த தனது கண்களை மேவவிடும் சீனுவுக்கு, சுதந்திரத்தின் பின்னர் மெதுவாக இந்தியா ஒரு பெரிய சக்தியாக வளர்வது பிடிக்காமலிருந்திருக்கலாம். இந்தக் குறுகிய, சுயநலக் கொள்கையின் காரணமாக இன்று சீனு குவியாவின் நன்மதிப்பைக்கூட இழந்து வருவதாக விஷயம் தெரிந்தவர்கள் தெரிவிக்கிருர்கள்.

இந்தச் சூழ்நிலையில், சீனுவின் அநீதியை ஆதரிக்கும் வகையில் ஒரு சொல்லைத் தானும் நாம் கூறுவது, மனித இனத்துக்கே இழுக்கு விளைவிப்பதாகும். நவ சீனுவின் ஆக்கிரமிப்புக் கொள்கை, அகில உலகத்தினுலும் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

### நீண்ட காலத் தொடர்பு

இவையெல்லாவற்றையும் விட, நீண்ட காலமாக இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே தொடர்பு இருந்து வந்திருக்கிறது. இரு நாடுகளுக்குமிடையேயுள்ள கலாச்சார, பொருளாதார, அரசியல் தொடர்புகள் மிகப் பலம் வாய்ந்தனவாகும். ஆகவே, இந்தியாவை இலக்காக வைத்து அடிக்கப்படும் அடி இலங்கையை நோக்கியும் விழலாமென்று நாம் தக்க காரணங்களுடன் கூறலாம்.

சுருங்கச் சொல்லின், நவ சீனுவின் நடவடிக்கையின் மூலம் பின்வரும் விளைவுகள் ஏற்படலாம்.

(1) சோஷலிச தத்துவத்தில் உலகுக்கு உள்ள நம்பிக்கையைக் குறைத்தல்;

(2) நடு நிலைமைக் கொள்கையைப் பின்பற்றும் [illegible] காளர் முகாமுக்குள் தள்ளிவிடுதல்;

(3) ஆசியாவில் இராணுவத் தளங்கள் அமைக்க, அமெரிக்கர்களுக்கும் மற்றும் பிற்போக்காளர்களுக்கும் சந்தர்ப்பமளித்தல்;

(4) இந்தியாவின் மெதுவான பொருளாதார அபிவிருத்தி வேலையைக் குலைத்தல்.

இவ்விளைவுகளின் தீமைகளை மனதிற் கொண்டு, சோஷலிச ஆக்கிரமிப்பாளரின் நடவடிக்கையை எல்லா முற்போக்குச் சக்திகளும் ஒன்று சேர்ந்து கண்டிக்க வேண்டுமென நாம் கேட்டுக் கொள்கிறோம்.

## எல்லையில்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

உரிமையின் அடிப்படையில் தான் நாம் இங்கு வந்துள்ளோம். நீங்கள் இந்த இடத்தை அபகரித்துள்ளீர்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் அபகரித்துள்ளபடியால்" என்று. இந்த மாதிரி அவர்கள் தொடர்ந்து கூறி வந்தது எங்களுக்குக் கவலையைத் தந்தது. திரு. சூ-என்-லாய் இரண்டரை வருடங்களுக்கு முன் டில்லிக்கு வந்தார். ஆனுல், நாம் எவ்வித சமரசத்துக்கும் வரமுடியவில்லை.

இதற்கு முன்னர் சீனர் அப்பகுதிகளில் இருந்ததே இல்லை. சரித்திர உரிமைகள் கொண்டாடுவது ஒரு புறமிருக்கட்டும். அவர்கள் அங்கே இருந்ததில்லை. எல்லையில் உள்ள தொல்லையெல்லாம் நாங்கள் எடுத்த நடவடிக்கை எதனின்றும் பிறக்கவில்லை. சீனு பக்கத்திலுள்ள நடவடிக்கைகள் மூலமே அவை ஆரம்பமாகின".

## பாரதத்தின் இராணுவ பலம்

ஜனநாயகத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையுடைய பாரதத்தின் மீது கொம்யூனிஸ் சர்வாதிகார ஆட்சி நடாத்தும் சீனு, ஆக்கிரமிப்பை நடத்துகிறது. சீன நாட்டின் இராணுவ பலம், பாரதத்தின் படைப்பலத்தைவிட ஐந்து மடங்கு அதிகமாகவுள்ளது. பாரதத்தின் படைப் பலமோ 500,000. சீனுவின் இராணுவ பலம் 2,500,000.

எல்லைப் போரில் சீனத் துருப்புக்கள் வசம் உள்ள ஆயுதங்களில் பெரும்பாலமை சோவியத் ருஷ்யாவில் செய்யப்பட்டவை; குறிப்பாக எ. கே. 47 றைபிள், இது அமெரிக்க நாட்டினரின் எம். 17. எஸ். றைபிள்களுக்கு நிகரானவை. மேலும் 10,000 யார் இலக்கை அடையக் கூடிய இயந்திரத் துப்பாக்கிகளும் சீனத் துருப்புக்கள் வசம் உண்டு.

விமானப் படையைப் பொறுத்த வரையிலும் சீனத் தலைவர்கள் வசம் மிகப் பெரிய ஆயுதம் தாங்கி விமானங்கள் உள. குறிப்பாக எம். ஐ. ஜீ.-17, எம். ஐ. ஜீ.-19, போர் விமானங்கள் உண்டு. இவ் விமானங்கள் கொரிய யுத்தத்தின் போது பாவிக்கப்பட்ட விமானங்களுக்கு நிகரானவை. மேலும் எம். ஐ. ஜீ.-21 எஸ். சோவியத் போர் விமானங்களும் இவர்கள்வசம் உண்டு. இவை மலைப் பிராந்தியங்களில் போரிடுவதற்கு தகுதியானவையல்ல. எனவே டி. யூ.-2 போர் விமானங்களை எல்லைப்புற பாவனைக்கு விடுவது பற்றி முயற்சி எடுக்கிருர்கள் இவர்களிடம் மேலும் ஐ எல். 28 இலக்கு நோக்கிப் போர் விமானங்கள் இருப்பதாகவும் அறியப்படுகிறது.

பாரத விமானப் படையினரிடம் குறைந்த அளவே விமானங்கள் உள. ஆனுல் பாரத விமானப் படையைப் பொறுத்த வரையில் சிறியதாக இருந்த போதிலும் சீரிய முறையில் உள்ளது. பாரதத்தின் வசம் உள்ள போர் விமானங்கள் பிருன்ஸ், இங்கிலாந்து ஆகிய நாட்டில் செய்யப்பட்டவையே

பாரதம் படை பலத்தில் சிறியதாகவிருந்த போதும் ஆன்மீக பலத்தில் சிறந்து விளங்குகிறது. பாரதம் என்றும் தன்னை அறவழியில், அன்பு வழியில் வளர்ந்து வந்துள்ளது. எனவே பாரதம் எதைக் கண்டும் அஞ்சத் தேவையில்லை.

பாரதத்தின் பக்கம் நீதி உண்டு, நேர்மை உண்டு. அது மட்டுமல்ல, நானிலத்தில் வாழும் நல்லவர்கள் பாரதத்தின் பக்கம் உளர். எனவே பாரதம் பயப்படத் தேவையில்லை.

பாரதம் என்றுமே யாரையும் பகைத்துக் கொண்டது கிடையாது. பண்புடன் வாழ்ந்து பழகிய நாடு பாரத நாடு. எனவே பாரதம் கலங்கத் தேவையில்லை.

நீதி நிலைக்கும், நேர்மை குன்றாது. பாரதத்தின் பக்கம் நேர்மை இருப்பதால், நீதி தேவன் பாரத நாட்டின் பக்கம் உளன். எனவே வெற்றி பாரத நாட்டுக்கு நிச்சயம் உண்டு.

கையிருப்பிலிருந்து பெறலாம்

கை மார்க் சிமிந்தி
அசானே ,,
டால்மியா ,,
சங்கர் ,,

சகாயமான விலைகளில் கிடைக்கும்

★

செட்டிநாட் கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிட்டெட்
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய-சீன எல்லைப் பிரச்னை பற்றி இந்திய கொம்யூனிஸ்டுகள் அறிக்கை

## சீனாவை ஆக்கிரமிப்பு நாடெனக் கண்டனம்

நவம்பர் முதலாந் திகதியன்று இந்திய கொம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு, சீனாவை 'ஆக்கிரமிப்பு நாடு' என்று குற்றஞ்சாட்டியது. சீனா சர்வதேச எல்லையான மாக்மோஹன் எல்லையை மீறிப் பிரவேசித்தது, கடந்த மூன்று வருடகாலமாக அது அளித்து வந்த வாக்குறுதிகளுக்கு எதிரானதாகும் என்றும் அக்குழு தெரிவித்துள்ளது.

சீன-இந்திய எல்லைத் தகராறைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இந்திய அரசாங்கம் பிரஸ்தாபித்துள்ள விதிகளுக்குத் தமது 'முழு ஆதரவு' உண்டு என்று திட்டவட்டமான அறிக்கையொன்றின் மூலம் அவசரமாகக் கூட்டப்பட்ட கூட்டமொன்றில் கொம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு தீர்மானித்துள்ளது.

பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானம் கூறுவதாவது:—

"......... இவ்வித பேச்சுவார்த்தைகள், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்குமுன்னர் இருந்த இடங்களுக்குச்சீனத் துருப்புகள் வாபஸ் பெறுவதன் அடிப்படையிலே நடைபெற முடியும். அதாவது, இந்திய அரசாங்கம் கூறியிருப்பதுபோல, செப்டம்டர் 8, 1962க்கு முன் இருந்த இடங்களுக்கு சீனத் துருப்புகள் வாபஸ் பெறவேண்டும்".

"நாட்டின் கௌரவத்தையும், மரியாதையும், பாதுகாக்கும்" முறையில், இந்திய அரசாங்கம் இப்பிரச்சினைக்கு ஒரு சுமுகமான முடிவுகாண எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு, கட்சியின் தொண்டர்கள் அனைவரும் ஆதரவு கொடுக்க வேண்டுமென்றும் தேசியக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

மாக்மோஹன் எல்லை "சட்டவிரோதமானது" என்று சீனா கூறுவதை "ஒருபோதும் ஏற்க முடியாது" என்றும், இத்தகைய அடிப்படையில் சீனாவின் 'ஆக்கிரமிப்பை' நியாயமானதென வாதாட முடியாதென்றும் தேசியக்குழு மேலும் தெரிவித்தது.

சீனாவை, சந்தேகத்துக்கிடமின்றி, ஆக்கிரமிப்பு நாடென வன்மையாகக்கண்டிக்கும் தேசியக்குழு மேலும் கூறுவதாவது:- "சமாதானத்துக்காக உழைத்து, நடுநிலைமை அடிப்படையில் வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து, இராணுவ சர்வாதிகாரமற்ற பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையைப் பின்பற்றி, சீனாவுடன் நட்புறவும் கொண்டாடி, தனது புதிய சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் புனித பணியில் ஈடுபட்டிருக்கும் ஒரு நாடான இந்தியாவுக்கெதிராகச் சீனாவைப் போன்ற ஒருசோஷலிச நாடு, எல்லைப் பிரச்சினையைத்தீர்க்க ஆயுத பலத்தை நாடுமெனவும், ஏற்றுக் கொள்ள முடியாத நிபந்தனைகளை வெளியிடுமெனவும் நாம் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை".

சீனாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கை ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமையைக் குலைக்கும் விதத்தில் அமைந்துள்ளதென்றும், கொம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு கூறியுள்ளது.

"எமது நாட்டை ஆக்கிரமிப்பாளரிடமிருந்து மீட்கும் பட்சத்திலும், ஆசியாவின் இரு பெரும் வல்லரசுகளுக்கிடையே நேரடி யுத்தம் மூளுவதினால் ஏற்படக்கூடிய பேராபத்தைத் தவிர்ப்பதற்கு ஒவ்வொருவரும் தன்னால் இயன்றளவு முயற்சி பண்ண வேண்டுமென்பதையும் இந்நாட்டு மக்கள் உணர்ந்திருக்கின்றனர்".

மேலும் தொடர்ந்து தனது தீர்மானத்தில், கொம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு கூறுவது என்னவெனில், இந்தியா பிறநாடுகளிலிருந்தும் ஆயுதங்களை வர்த்தக அடிப்படையில் வாங்குவதில் தமக்கு ஆட்சேபனை இல்லையென்றாலும், இந்நாட்டு பாதுகாப்புக்கு வெளிநாட்டுத்துருப்புக்களை அழைப்பதைத் தாம் எதிர்ப்பதாகக் கூறுகிறது.

"கோடிக் கணக்கில் இந்திய மக்களும், இந்திய இராணுவமும் ஒன்றுபட்டு ஒழுங்காக முன்னேறினால், அவர்களே எமது நாட்டைப்பாதுகாக்கப் போதிய திறமை உடையவர்களாகிறார்கள்".

"அரசாங்கமும் மக்களும் இந்தப் பாதையில் உச்ச முயற்சிகள் எடுக்க வேண்டும்".

### அந்த மகனையும் அனுப்புகிறேன்

"ஆதிக்க வெறி பிடித்த சீனர்களுடன் போராட என்னுடைய இன்னொரு மகனையும் போர் முனைக்கு அனுப்பத் தயார்". இவ்வாறு எல்லைப் போரில் சீனரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான, தமிழ் நாட்டுப்போர் வீரர் செல்வராஜின் தந்தை 79 வயது நிரம்பிய மணியார நாடார், மரணச்செய்தி கேட்ட பொழுது வீர ஆவேசத்துடன் கூறினர்.

### சிறந்த நூல்களுக்குப் பரிசில்கள்

கட்டுரை, கவிதை, கதைகள் (சிறு கதை, தொடர் கதை) நாடகம், வரலாறு, ஆராய்ச்சி, மொழி—பெயர்ப்பு எனும் துறைகளில் ஆண்டு தோறும் புதிதாக வெளியிடப்படும் தமிழ் நூல்களில் சிறந்தனவற்றை எழுதியவர்களுக்குப் பரிசில்களும் பாராட்டும் அளிப்பதெனக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் முடிவு செய்துள்ளது.

1961-ம் ஆண்டில் இத்துறைகளில் வெளியான நூல்களில் ஒவ்வொரு பிரதியை 1962 நவம்பர் 30-ம் திகதிக்கு முன் வெள்ளவத்தை 57-ம் ஒழுங்கையிலுள்ள கொழும்புத் தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளருக்கு அனுப்புமாறு நூலாசிரியர்களையும், பதிப்பாளர்களையும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.


**தமிழ்**
**G. C. E.**
**101 வினு விடை,**

**பரீட்சை துணை நூல்கள்**
**கடந்தகால**
**வினு விடைகள்**

பரீட்சையில் சித்தி தலைவிதியைப் பொறுத்ததல்ல. வினுக்களுக்கு ஏற்ற விடை எழுதுவதில் தங்கியுள்ளது. பரீட்சைக்கு விடை எழுதும் முறைகளுடன் கூடிய புத்தகங்கள் உங்கட்கும் சித்தியைத் தரவல்லன.

| | ரூ.ச. |
|---|---|
| தமிழ்ப் பாஷை | 3-00 |
| எண் கணிதம் | 3-00 |
| குடிஇயல் | 3-00 |
| சரித்திரம் | 3-00 |
| பூமிசாத்திரம் | 3-00 |
| சுகாதாரம் | 3-00 |
| ஆங்கிலம் | 3-00 |
| பயிற்சிச் சிங்களம் | 3-00 |
| ரோமன் கத்தோலிக்கம் | 3-00 |
| இந்து சமயம் | 3-00 |
| இஸ்லாம் சமயம் | 3-00 |

வி. பி. பி. கிடையாது
தபாற் செலவு 35 சதம்

விபரங்கட்கு:
**அற்லஸ் ஹோல்**
723, மருதானை ரோட்,
கொழும்பு.


# போர் முனை

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

தளர்ந்துவிடாதே! மண்ணை மீட்கும் பணியைத் தொடர்ந்து செய்" என்று 'உபதேசம்' செய்தான் பலதேவ்சிங்!

அந்த இந்திய வீரன் ஒன்றும் புரியாமல் மலங்க மலங்க விழித்தான்.

"சிங்"

"எஸ்"

"உன் போக்கால் மனம் குழம்பியிருக்கின்றேனடா?" சீனப் பலிக்கடாவைத் தவறவிட்ட அந்த இந்திய வீரன் சலித்துக்கொண்டான்.

"எனக்குத் தெரிகிறது உன் தவிப்பு. நேற்றையப் போர்முனை நிகழ்ச்சிக்கு விளக்கம் கேட்கின்றாய்?"

"சிங்! உண்மையைச் சொல்! நேற்று நீ அந்தச்சீனனுக்குக் காட்டிய பரிவு தேசத் துரோகமல்லவா?"

"இல்லை; தேசாபிமானம்!"

"என்ன?"

"நேற்று என்னால் விடுவிக்கப்பட்டுத் தப்பி ஓடிய அந்தச் சீனன் உடலால் சீனன் என்றாலும், உள்ளத்தால் இந்தியன்!"

"ஏன் அவனும் ஆசியாக்காரன் என்பதாலா?"

"இல்லை, மனிதன் என்பதால்!"

"அப்போ இந்தியர் மட்டும்தான் மனிதர்களா!"

"தர்மத்தின் வழி நடப்பவர் எவருமே மனிதர்கள் தாம்! இந்த எல்லைத்தகராறில் நம் இந்தியாவின் வழி தர்மத்தின் வழி! அந்த வழியை உளமார அங்கீகரிக்கிறான் அந்தச் சீனப் புதல்வன்!"

"அப்படி அங்கீகரித்ததினாலா நேற்று அப்படி நம்மைத்தாக்கினான்?"

"நீ நேற்றுக் கண்டது பொய்த் தோற்றம்.

"நீ என்னதான் சொல்கிறாய்?"

"அப்படிக் கேள் சொல்கிறேன்."

பலதேவ்சிங் சொல்லலுற்றான்:

"1914ம் ஆண்டு உலகத்தின் முதலாவது மகாயுத்தம் ஆரம்பித்தவேளை. கட்டு மீறிப் பரந்து கிடந்த சீன—இந்தியப் பிரதேசங்களை வரையறுத்து எல்லைக் கோட்டை நிர்மாணித்தார், பிரிட்டிஷாரால் நியமிக்கப்பட்ட மக்மோஹன்பிரபு."

"இரு அரசாங்கமும் இந்த எல்லைக் கோட்டை ஏகமனதாக அங்கீகரித்ததெனினும், 1954 ஜூலையில், பாரதப் பிரதேசத்துக்குச் சொந்தமான 'பாரஹெத்தி'யைச் சீனம் பலாத்காரமாகப் பறித்துக் கொண்டது".

"இந்தியா பொறுத்துக் கொண்டது".

"1956ல் மண்வெறி கொண்ட சீனம், பாரத புண்ணிய, பூமியை 'லடாக்' பகுதியைச் சேர்ந்த ஐந்து இலட்சம் சதுர மைல் கொண்ட அகண்ட பிரதேசத்தை 'அபக்'கென்று கபளீகரம் செய்தது"!

"இந்தியா பொறுத்துக் கொண்டது."

அதைத்தொடர்ந்து 1959 திபெத்தில் புகுந்து 'பொத்தலா' மாளிகையில் வைத்து தலாய்லாமாவைக் கைது செய்ய முனைந்தது சீன ஆட்சிபீடம். அவர்கள் பிடியிலிருந்து தப்பி அபயங்கோரி இந்தியாவுக்கு ஓடோடி வந்த திபெத்திய அகதிகளையும் இந்தியா பாதுகாத்ததைச்சாக்காகவைத்து இந்திய மண்ணில் மேலும் பன்னிரண்டாயிரம் சதுர மைலைக் கபளீகரம் செய்தது சீனம்!

"இந்தியா பொறுத்துக் கொண்டது!"

"அதைத் தொடர்ந்து, தனக்கு உடமையாகிய இந்திய மண்ணில் பிரமாண்டமான விமானத்தளம், ரோட்டுப் பாதை என்பவற்றை மளமளவென்று அமைத்து யுத்த சன்னதம் பூண்டது செஞ்சீனம்."

"இந்தியா பொறுத்துக் கொண்டது!"

"சீனத்தின் பசி அப்பவும் அடங்கவில்லை. லடாக் பகுதியிலுள்ள 'பங்கொங்' ஏரியைக் காவல் புரிந்த இந்தியப் பொலிசாரை வலுச்சண்டைக்கு இழுத்து, இந்தியக் காப்டன் சுவர்ணசிங்கையும் பலிகொண்டது செஞ்சீனு."

"இந்தியா பொறுத்துக் கொண்டது!"

"இந்தியாவின் இந்தப் பொறுமை, நேற்று என்னால் காப்பாற்றப்பட்டுத் தப்பியோடிய செஞ்சீன வீரனின் நெஞ்சைப் பிளந்தது."

"இதற்கொரு 'அதிர்ச்சி வைத்தியமும்' செய்தாலன்றி இந்தியாவின் பொறுமையைத் தகர்க்க முடியாதெனக் கண்ட அவன், முன்னேற்பாடாக அன்று என்னை எல்லைக்கு அழைத்துத் தன் இட்டத்தை எடுத்துரைத்தான். அதன்படி அன்று இருள் பிரிவதற்கு முன்னமே சீனப் பாசறையின் ஒரு பெரும் பகுதியை அழித்து அந்தப் பழியைப் பாரதத்தின் மீது போட்டுவிட்டான்."

"அதன் பிரதிபலிப்பு நேற்றுப் போராக வெடித்தது! நமக்குக் கோபத்தை ஊட்டுவதற்காக அவனே சீன வியூகத்தின் முன்னின்று, கண்மண் தெரியாமல் நமக்குப்பல சேதத்தை ஏற்படுத்தினான். நாம் இழந்து நிற்கும் இந்திய மண்ணின் இலட்சக் கணக்கான சதுரமைல் பிரதேசத்தை நாம் பெறுவதற்கு அவனுக்குத் தெரிந்த ஒரே ஒரு வழி நம்மையும் போர் முனையில் நிறுத்துவதே!"

"அதை அவன் செய்தான்".

""இழந்த பகுதிகளை மீட்போம்; இறுதி வெற்றி நமதே! கோழைகளாய் வாழ்வதைவிட, மண்ணைக்காக்கும் வீரமுயற்சியில் உயிரையே ஈவோம்! பாரதத்தின் புதல்வர்களே! கிளர்ந்தெழுங்கள் போருக்கு" என்று அறைகூவுகிறார் நம் தவப்புதல்வர் நேரு இன்று!"

பலதேவ்சிங் கூறிய இந்த நீண்ட வரலாற்றைக் கேட்டுக்கொண்டு வந்த அந்த இந்தியப் புதல்வனின் நெஞ்சு, அந்தச் சீனப் புதல்வனை மௌனமாக வாழ்த்திற்று!

# இலங்கைக் கொம்யூனிஸ்டுகளின் இரண்டுங் கெட்டான் நிலைமை

'சீனா ஒரு முற்போக்கு நாடு. முற்போக்குச் சக்திகள் சில ஒன்றாகச் சேர்ந்து கொண்டு சீனாவுக்கு இழுக்குத் தேட முனைந்துள்ளன. அதன் பொருட்டு இந்தியாவைத் தங்கள் பக்கம் நிரந்தரமாக இழுத்து விட எண்ணங் கொண்டு சீன—இந்திய எல்லைச் சண்டையை பிரமாதப் படுத்துகின்றன. வெறும் சிறு எல்லைப் போராட்டத்தை ஒரு பெரிய யுத்தம் என்று வர்ணிக்க அவர்கள் முனைந்து விட்டார்கள். இதையிட்டு இங்குள்ள முற்போக்கு சக்திகள் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும்' என்று ஒரு அறிக்கையை இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்டுள்ளது.

இந்தியக் கொம்யூனிஸ்ட் கட்சியினர் தாங்கள் இந்திய—சீன எல்லைப் போராட்டத்தில் இந்தியாவுடன் இணைந்து நிற்கப் போவதாக வாக்களித்துள்ளனர். இந்த முடிவு திரிகரணசுத்தியுடன் செய்யப்பட்ட முடிவு என்று எவரும் கூற முடியாது. இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை உண்மையிலேயே ஒரு கொம்யூனிஸ்ட் எதை விரும்புவானே, அதையே வெளியிட்டுள்ளது.

அண்டை நாடான இந்தியாவுக்குள் நுழையும் அந்நியனுக்கு ஆதரவு காட்ட முனைகிறது இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி. இலங்கையையும் விழுங்கி ஏப்பமிட சீனா முயலுமானால், அதற்கும் ஆதரவு காட்ட இக்கொம்யூனிஸ்டுகள் பின் நிற்கப் போவதில்லை என்பது உண்மை.

### திடீர் மாற்றங்கள்

இந்திய—சீனா எல்லைப் போராட்டத்தில் சீனா மும்முரமாக ஈடுபட ஆரம்பித்ததும், உலக நாடுகள் அனைத்தும் கண்டனக் கணைகளை [illegible] ஆரம்பித்தன. இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை வெளியாகியதும், இலங்கை கொம்யூனிஸ்ட் ஒருத்தர் — சீனாவின் ஆக்கிரமிப்பு நியாயமானதே என்று வாதிட்டவர்— தனது ஆரம்ப அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டு, சீனனை இந்திய மண்ணிலிருந்து அடித்து விரட்ட வேண்டுமென்று ஆவேசம் ததும்ப ஆர்ப்பரித்தார்.

அதற்கடுத்த நாளே இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை வெளியாகியது. அதைக் கண்ணுற்றதும் மேற்குறிப்பிட்ட தோழர் இந்தியக் கொம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையைக் கண்டிக்கவும், நேருவுக்கு வசைமாரி பொழியவும், சூ-என்-லாய்க்கு வாழ்த்துக் கூறவும் ஆரம்பித்து விட்டார். நேரத்துக்கு நேரம் காலத்துக்குக்காலம் தங்கள் கருத்தையே மாற்றிக் கொள்ள முயலும் இக்கொம்யூனிஸ்டுகளின் வண்டவாளங்கள் இன்னும் எத்தனை நாட்களுக்கோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை: அரைப் பொய்: முழுப் பொய்!

கொம்யூனிஸ்ட்டுகள் தங்கள் நோக்கத்தைச் செயல் படுத்துவதற்கு, எத்தகைய வழி முறையையும் கையாளத் தயங்கமாட்டார்கள். நோக்கத்தை ஈடேற்ற பாம்புக்குத் தலையாகவும், மீனுக்கு வாலாகவும் தங்களைக் காட்டிக் கொள்வார்கள். இதுவும் அவர்கள் சித்தாந்தத்தில் ஒன்று போலும்.

இந்தியக் கொம்யூனிஸ்டுகள் சீன-இந்தியப் பிரச்சினையில் ஒன்றைக் கூற, இலங்கை கொம்யூனிஸ்டுகளும், சம சமாஜக் கட்சியினரும் மறுத்துக் கூறுகிறார்கள். கொம்யூனிஸ்டுகளின் கண் கண்ட தெய்வம் குருசேவ் மாஸ்கோவில் மவுனம் சாதிக்கிறார்.

இந்தியக் கொம்யூனிஸ்டுகள் முழுக்க முழுக்க சீனாவை எதிர்ப்பது போல் காட்டிக் கொண்ட போதிலும், அவர்கள் எண்ணம், சிந்தனை யனைத்தும் பீகிங் தலைமைப் பீடம் கிட்டாதா என்பதே. ஏன்? ரணதிவே, தாதா தேஷ்முக், பி. என். முக்கர்ஜி, சந்திர குப்தா, போன்ற கொம்யூனிஸ்டு பெருந்தலைவர்கள் எல்லாம் இன்று தடுப்புக் காவலில் இருக்கிறார்களே, எதற்காக? கொம்யூனிஸ்டு கட்சியின் தீர்மானத்திற்கு இணங்க நடந்திருந்தால், எதற்காக தடுப்புக் காவலில் இருக்க வேண்டும்? எனவே மக்கள் ஒன்றை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். கொம்யூனிஸ்டுகள் எதைச் செய்த போதிலும்; எந்தத் தீர்மானத்தைநிறை வேற்றிய பொழுதும் அவர்களுடைய எண்ணமும், சிந்தனையும் மாஸ்கோவையும், பீகிங்கையும் சுற்றிக் கொண்டு தான் நிற்கும்.

சீன—இந்தியப் பிரச்சினையில் உண்மையில் நடந்தவற்றையும், இந்தியக் கொம்யூனிஸ்டுகள் கூறியவற்றையும், நமது நாட்டு கொம்யூனிஸ்டு, சம சமாஜக் கட்சியினர் கூறியவற்றையும் ஒப்பு நோக்கியிருக்கிறோம். கொம்யூனிஸ்டு கட்சியின் ஆக்கிரமிப்பு மனப்பான்மையையும், சந்தர்ப்பத்துக்கு ஏற்ற தகிடுதத்தப் பேச்சையும் புரிந்து கொள்ளுங்கள்.

## உண்மையில் நடந்தவை

1. பர்மாவுடன் உள்ள எல்லைப் பிரச்சினையைத்தீர்ப்பதில் சீனா மக்மோஹன் எல்லையை ஏற்றுக் கொண்டது.

2. மக்மோஹன் எல்லையிலிருந்து தெற்கே நான்கு மைல் தூரத்திலுள்ள நம்கு நதியைச் சீனர் தாண்டிவிடுகின்றனர், வடக்கிலுள்ள இரு இந்தியக் காவல் நிலையங்கள் சீனர் கைவசம். வடகிழக்கு எல்லைப் பிராந்தியத்தில் காயப்பட்டோரை அகற்றும் பணியில் ஈடுபட்டிடிருந்த இந்திய விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.
(21—10—52)

3. செப்டம்பர் எட்டாம் திகதிக்கு முன் இருந்த இடத்திற்குச் சீனப் படையினர் வாபஸ் பெற்ருல்தான் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க முடியும். —நேரு
(2-11-62)

4. "மக்மோஹன் எல்லையின் வரம்புக்குள் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளத் தேவையில்லை" என்று பீகிங் தனது துருப்புக்களுக்கு கட்டளையிடல். வடகிழக்கு எல்லையில், பும்லாப் பாதையைச் சீனர் தாக்கினர். லோங்ஞ்யூவில் மேலும் புதிதாகச் சீனத் துருப்புக்கள் குவிதல். லிப்சாப் பிரதேசத்தில் கடும் யுத்தம்.
(23-10-62)

5. மலேயாப் பிரதமர் திரு. துங்கு அப்துல் றகுமான் "சீனா,இந்தியாமீது நடத்தும் ஆக்கிரமிப்பு கொம்யூனிஸ்டு அல்லாத ஆசிய நாடுகளுக்கு அபாய அறிவிப்பு" என்று எச்சரிக்கை.
(29-10-62)

6. சீன-இந்தியப் பிரச்சினையில் சோவியத் ருஷியா மௌனம்.
(2-11-62)

## இந்தியக் கம்யூனிஸ்டுகள் சொல்லுவது:-

1. மக்மோகன் எல்லைக் கோடு இந்தியாவின் எல்லைக் கோடு என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் கூறிவருகிறதென்றும், இந்த எல்லைக் கோட்டைப் பாதுகாக்க அவசியமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியபீடம் வற்புறுத்துகிறது.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைமைப்பீடம்—18-10-62)

2. இந்திய எல்லையைக் கடந்து சீனத் துருப்புகள் ஆக்கிரமிப்புச் செய்துள்ளது. இது சர்வதேச எல்லையை மீறிய செய்கையாகும்.

(இ. க. தேசிய கவுன்சில் தீர்மானம்—1-11-62)

3. இந்திய மண்ணிலிருந்து சீன ஆக்கிரமிப்பாளர் வெளியேறும்வரை பேச்சுவார்த்தை நடத்தமுடியாது.

(திரு. ஏ. கே. கோபாலன் இந்திய பாராளுமன்ற உறுப்பினர்—25-10-62)

4. இந்தியா மீது சீனா ஆக்கிரமிப்புச் செய்துள்ளதைக் கண்டிக்கிறோம்.

(தமிழ்நாடு க. கட்சி தீர்மானம்—8-11-62)

5. சீனாவின் ஆக்கிரமிப்பிலிருந்து இந்தியாவைப் பாதுகாக்க எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்.

(கம்யூனிஸ்ட் தலைவர் திருடாங்கே—7-11-62)

6. இந்தியாவைப் பலாத்காரம் மூலம் சீனா கைப்பற்ற முற்பட்டிருப்பது முழு முட்டாள்தனம்.

(திரு. கலியாணசுந்தரம், சென்னை சட்டசபை கம்யூனிஸ்ட் அங்கத்தவர். 4-11-62)

## இலங்கை கம்யூனிஸ்டுகளும் சமசமாஜிகளும் கூறுவது:-

1. மக்மோகன் கோட்டை எல்லைக் கோடாகச் சீனா என்றும் அங்கீகரித்ததில்லை. இந்தக் கோடு ஏகாதிபத்தியவாதிகளால் வகுக்கப்பட்டது.

(திரு. பீட்டர் கெனமன் பா. உ. 27-10-62)

2. இந்திய அரசாங்கம் எல்லைப் பட்டாளத்தினருக்குச் சீனத் துருப்புகளை வெளியேற்றுமாறு ஆணையிட்ட பொழுது, சீனத் துருப்புகள் மக்மோகன் கோட்டிற்கு வெளியில் தான் நின்றார்கள்.

(திரு. கெனமன் பா. உ. 27-10-62)

3. இந்திய-சீனா எல்லைத் தகராறு சிறு விஷயம். நிபந்தனையின்றி சீனாவுடன் பேச்சு வார்த்தை ஆரம்பித்தல் வேண்டும்.

(திரு. கெனமன் பா. உ.)

4. தமிழரசுக் கட்சி, ஐ. தே. கட்சி, முதாலாளி வர்க்கம் ஆகியோர் கம்யூனிசத்திற்கும், சோஷலிசத்திற்குமெதிராகவும், சீன நாட்டுத் தொழிலாளர் ஆட்சிக்கெதிராகவும் வெறுப்பை வளர்க்கிறார்கள்.

(இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தொழிற் சங்க சம்மேளனம் 9-11-62)

5. இந்தியாவை ஆக்கிரமிக்கும் நோக்கம் சீனாவுக்கில்லை.

(திரு. எட்மன்ட் சமரக்கொடி பா. உ. சம சமாஜக் கட்சி—9-11-62)

6. சீனாவை நாம் குற்றம் சொல்லவில்லை.

(திரு. லெஸ்லி குணவர்தன பா. உ.- சமசமாஜக் சட்சி 26-10-62)

# பம்பாய் சீன ஹோட்டல்களில் சாப்பிடக்கூட ஆள் இல்லை!

இந்திய—சீன யுத்தத்தின் காரணமாக பம்பாயிலுள்ள சீனர்களின் ஹோட்டல்களில் வியாபாரமே இல்லை. சாப்பிடுவதற்கு யாருமில்லாதபடியால், ஹோட்டல்களை மூடிவருகிறார்கள் சீனர்கள்.

பம்பாயில் சீனர்களின் ஹோட்டல்கள் நிறைய இருக்கின்றன. இந்த ஹோட்டல்களுக்குத் தினமும் ஆயிரக்கணக்கானவர்கள் வந்து சாப்பிடுவார்கள்.

ஆனால், இந்திய—சீன யுத்தம் ஆரம்பித்த பிறகு, சீனர் ஹோட்டல்களில் வியாபாரம் குறைந்துவிட்டது. இந்தியர்கள் யாருமே அங்கு சாப்பிட வருவதில்லை. இதனால் சீனர்கள் ஹோட்டல்களை மூடிவிடும் நிலையில் உள்ளனர்.

### பல் டாக்டர்கள்

சீனப் பல் டாக்டர்களும் பம்பாயில் நிறையப்பேர் உண்டு. அவர்களுக்கும், ஹோட்டல்காரரின் பரிதாப நிலை தான். அவர்களிடம் யாருமே வைத்தியத்துக்கு வருவதில்லை.

### செருப்புக் கடைகள்

சீனர்களின் செருப்புக் கடைகள் முன்பு மிகவும் புகழ் பெற்று விளங்கின. சீனாவின் மலிவு விலைச் செருப்பு வாங்க எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள். இப்போது அந்தச் செருப்புக் கடைகளிலும் கூட்டமே இல்லை.

### ஒரு ருசிகரமான சம்பவம்

அண்மையில் சீனப் பெயர்ப்பலகையைத் தாங்கியிருந்த ஒரு ஹோட்டலுக்குள் இந்திய மாணவர்கள் சிலர் புகுந்தனர். அங்கிருந்த மேசை, கதிரை, கண்ணாடித் தளவாடங்கள் எல்லாம் அடித்து நொறுக்கினர்.

அப்பொழுது ஹோட்டல் சொந்தக்காரர்கள் ஓடோடி வந்தனர். பெயர்ப்பலகை தான் சீனப் பெயரில் இருக்கிறதே தவிர, சீனச் சொந்தக்காரர் எப்போதோ போய் விட்டார்களென்றும், கடந்தசில காலமாக ஹோட்டலுக்கு இந்தியர்களாகிய தாங்கள்தான் உரிமையாளர் என்றும் விளக்கம் தந்தனர்.

மாணவர்கள் உடனேயே மன்னிப்புக் கேட்டதுடன், உடைத்த பொருளுக்கான பணத்தையும் சேர்த்துக் கொடுத்தார்கள்.

முதலாளிமாரும் சும்மா விட்டார்களா? மாணவர்களின் தேசப்பற்றைப் புகழ்ந்து, அவர்களுக்கு இலவசத் தேநீர் விருந்தை அள்ளித் தந்தார்கள்!

# மே. மா. தமிழாசிரியர் சங்கத்தில் ஊழல்கள்

## நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன

### சுற்று நிருபத்தில் குற்றச் சாட்டு

அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தில் ஊழல்கள் பெருகி வருவதாய்த் தினமுஞ் செய்திகள் அடிபடுகின்றன. இவற்றிற்கு மேல் மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கமும் உடந்தையாயிருக்கிறது. இச் சங்க நிர்வாகிகள் தாம் நிறைவேற்றியுள்ள விதிகளையே அலட்சியம் செய்கின்றனர். ஐந்தாம் வகுப்புப் பரீட்சையில் ஏமாற்று, கலைவிழாவில் காக்காய் பிடிப்பு, திருட்டுங்கூட.

இவ்வாறு வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம் தமிழ் ஆசிரிய சங்கத்தின் சீர்கேட்டை எடுத்துக்கூறும் முகமாக மேல் மாகாணத் தமிழ் ஆசிரியர் அனைவருக்கும் அனுப்பியிருக்கும் நிருபத்தில் கூறியுள்ளார். மேலும் அவர் அதிற் கூறுவதாவது:-

மேல் மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் என்னும் பெயரில், அகில இலங்கைத் தமிழாசிரிய சங்க உறுப்பாக ஒரு தொழிற் சங்கம் இயங்கி வருவதை நீங்கள் அறிவீர்கள். உங்களிற் சிலர் இதில் உறுப்பினர்களாயும், பலர் உரிமை பெருமலும் இருக்கலாம்.

சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் உதவி நன்கொடை பெற்றுவந்த பாடசாலைகளில் கற்பித்து வந்த ஆசிரியர்களின் நலன்களைப் பேணும் பொருட்டு இச்சங்கம் நிறுவப்பட்டது. அப்பொழுது விவேகானந்த வித்தியாலயத்தின் தலைமை ஆசிரியராய் விளங்கிய திரு. ஆறுமுகம் ஆசிரியர் அவர்கள் அறிவு, ஆற்றல், தகமை முதலாம் நற்பண்புகள் உடையவராய் விளங்கியமை காரணமாக இச் சங்கத்தின் தலைவராய்த் தெரிவு செய்யப்பட்டார். ஆனால், அவர் கொழும்பை விட்டகன்றதும், கொழும்புக்குப் புதிய வரும், பச்சோந்தி போல மாறுபவரும், சுயநன்மையின் பொருட்டு மதம் மாறுபவருமான ஒருவர் விவேகானந்த வித்தியாலயத் தலைமை ஆசிரியர் ஆனார். வந்த உடனேயே இவர் பேற்கூறிய ஆசிரியர் சங்கத் தலைவருமானார். அவரும் சில ஆண்டுகளின் பின் வடக்கு நோக்கினார். அவரிடமாய்ப் 'புறாவ் றீடர்' ஒருவர், ஆசிரியத் தொழிலை உபதொழிலாகக் கருதுபவர், பெரியவர்களைக் காக்காய் பிடித்துத் தலைமை ஆசிரியரானார்; சாணக்கியரையும், கரபிகத மனகன்களையும் மூக்குத்தூள் போடக்கூடிய அவர் தலைவரானார். இவ்வாறு, மேல் மாகாணத் தமிழாசிரியர் சங்கம் பதவி விவேகானந்த வித்தியாலய ஆசிரியர்களின் முதுசொம் போல் இருக்கிறது. ஆசிரியர்களே உங்களுக்குள் பொதுப்பணி செய்யக்கூடிய ஆற்றல், அறிவு, அனுபவம் உள்ள ஆசிரியர்கள் எவருமில்லையா? "இப்படியான மூடக்கழுதைகளிடப் கொழும்பிலுள்ள தமிழ்ப் பிள்ளைகள் கல்வி பயின்ருல் எப்படி உருப்படுவார்கள்?" எனச் சில பெற்ரோர் கூறுகிறார்களன்றோ?

### ஊழல்கள்

அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தில் ஊழல்கள் பெருகி வருவதாய்த் தினமுஞ் செய்திகள் அடிபடுகின்றன. இவற்றிற்கு மே. த. ஆ. சங்கமும் உடந்தையாயிருக்கிறது. இச்சங்க நிர்வாகிகள் தாம் நிறைவேற்றியுள்ள விதிகளையே அலட்சியம் செய்கின்றன. ஒரு சங்கத்தின் பிரமாண விதிகளை வேதவாக்கென மதிக்க வேண்டுமென்பார்; ஒரு சங்கத்தின் பிரமாண விதிகளையே மதிக்காத ஆசிரியர்களுக்கு மாணவர் எப்படி மதிப்புத் தருவார்கள்! சங்கம் தனது ஆண்டுக் கூட்டத்தை ஆண்டுதோறும்பின் போடுகின்றது. நிர்வாகக் கூட்டங்களே ஒழுங்காய் நடைபெறுவதில்லை. ஐந்தாம் வகுப்புப் பரீட்சையில் ஏமாற்று, கலைவிழாவில் காக்காய் பிடிப்பு, திருட்டுங்கூட. பத்திரிகைகளில் வளவளா அறிக்கைக்குக் குறைவேயில்லை. ஆசிரியரின் பத்திரிகையின் அவலட்சணம் வேறு.

### சீர்திருத்தம்

ஆசிரியர்களே, இவ்வளவு நடந்தும் உங்களில் அநேகர் உறக்கம் கொள்கிறீர்கள். சிலர் ஏனோ தானோவென்று அலட்சியமாயிருக்கிறீர்கள். விழிமின்! எழுமின்! உழைமின்! உடனே ஒரு பொதுச் சங்கத்தைக் கூட்டிப் பின்வரும் சீர்திருத்தங்களைச் செய்யுங்கள்.

(அ) மேல் மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்க அமைப்பு முறையில் மாற்றம், முறையே கொழும்பு, நீர்கொழும்பு, களுத்துறை ஆகிய பிரிவுகளில் தனிச் சங்கங்கள் அமைக்க வேண்டும். தாய்ச்சங்கம் கிளைச்சங்கங்களை நிறுவக்கூடாது. இதனை இந்நிருபத்தினைத் தயாரிப்பவர்கள் நீண்ட காலம் வற்புறுத்தி வருகிறார்கள். விவேகானந்த வித்தியாலயத் தலைமை ஆசிரியர்கள் இதைத்தட்டிக் கழித்து வருகிறார்கள். தலைமைப் பதவி மோகம்.

(ஆ) இப்பொழுதியங்கும் சங்கம் நித்திரை கொள்வதால் சீர்திருத்தங்கள் நிறைவேற்றக்கூடிய ஒரு குழுவை நியமித்து வேண்டியவைகளைச் செய்ய அதிகாரம் அளிக்க ஒரு கூட்டத்தைக் கூட்டுவிக்கவோ, கூடவோ உங்களுக்கு இணக்கமுண்டானால், உங்கள் சம்மதத்தை உங்கள் ஒப்பத்தை வைத்துத் தெரிவிக்குமாறு வேண்டுகிறோம். மேல் மாகாணத்தில் வாழும் பழைய உதவி நன்கொடை பெற்ற, அல்லது தனிப்பட்ட ஆசிரியர் சகலரும், இப்பொழுதுள்ள சங்கத்தில் உறுப்பினராயிருந்தாலும், இல்லாவிட்டாலும் தங்கள் சம்மதத்தைத் தெரிவிக்கலாம்.

### சீனாவின் செயலுக்குக் கண்டனம்

"பாரத நாட்டின் மீது கொம்யூனிஸ்ட் சீனா நடத்தும் ஆக்கிரமிப்பு அக்கிரமமானது அதை உலகிலுள்ள ஜனநாயகப் பற்றுள்ள ஒவ்வொருவரும் வன்மையாகக் கண்டிக்க வேண்டும்". இவ்வாறு மஞ்சந்தொடுவாய் குடியேற்றப் பகுதிக் கைத்தொழிற் சங்க விசேட கூட்டத்தில் பேசுகையில் திரு. மாஸ்டர் சிவலிங்கம் குறிப்பிட்டார். கூட்டத்திற்குச் சங்கத் தலைவர் திரு. க இரெத்தினம் தலைமை தாங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவி புரிவோம்!

(எஸ். டி. ராஜன், உடுப்பிட்டி)

இந்தியாவுக்கும் சீனுவுக்கும் எல்லைத் தகராறு காரணமாக யுத்தம் நடந்து வருவது யாவருக்கும் தெரிந்ததே.

பொருளுற்பத்தி பெருகி வரும சுதந்திர நாடான இந்தியாவை சீனர் தாக்குவது முறையான செய்கையல்ல!

சீனர் மனவுறுமை கொண்டு இந்தியருடன் போர் புரிகின்றனர்; ஆனல் முடிவில் இந்தியா தான் வெற்றியடையும் என்பதற்கறிகுறியாக சீனர் கைப்பற்றிய இடங்களை இந்தியர் திரும்பப் பெற்று வருகின்றனர்.

சீனுவுக்கு இந்தியா எவ்வளவோ நன்மைகளைச் செய்தும் சீனு உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்கின்றது. சீனுவின் முறையற்ற செய்கையைக் கண்டு மற்ற நாடுகள் அனுதாபம் தெரிவித்து ஆயுதங்கள் வழங்கும் போது, அயல் நாட்டில் வசிக்கும் நாமும் உதவி செய்ய வேண்டும். நம்மால் செய்யக் கூடிய உதவி என்ன?

### நமது பணி

இந்திய எல்லையிலே தாய் நாட்டிற்காகச் சகல சுகங்களையும் அர்ப்பணித்துப் போர்புரியும் இராணுவ வீரர்களுக்கு பணவுதவி புரிய வேண்டும். தினசரிகள் பல பணம் சேர்த்துக் கொடுக்க முன் வந்திருக்கின்றன. மேற்படி தினசரிகள் சேர்க்கும் நிதியில் நாமும் எம்மால் இயன்றளவு பணவுதவி புரிவதுதான் நாம் இந்நேரத்தில் இந்தியருக்குச் செய்யும் சிறந்த தொண்டாகும்.

ஆங்கிலேயருக்கு அடிபணிய மறுத்த இந்தியர் சீனருக்கு அடிபணியாமல் தாய் நாட்டைக் காப்பாற்ற உற்சாக மூட்டுவோம். நாமும் இராணுவ வீரர்களுக்கு ப்பணவுதவி புரிந்து, அந்நியவர்களிடமிருந்து இந்தியாவைக் காப்பாற்ற உதவி புரிவோம்.

சீனருக்கடிமையாக வாழ்வதைவிட போராடி மடிவதே மேல்! பாரத சுதந்திரம் சும்மா கிடைக்கவில்லை; எத்தனையோ உயிர்களைப் பலிவாங்கிய பின்தான் கிடைத்தது. ஆகவே சீனு கைப்பற்றிய இடங்களையும் நாம் திரும்பப் பெறுவோம், எனக் கூறும் இந்தியருக்கு ஆதரவு அளிப்போம்.

இந்திய நாட்டினை சீனர் கைப்பற்றினல் இலங்கையையும் அவர்கள் கைப்பற்ற அதிக நாள் செல்லாது. நாம் சுதந்திர இந்தியாவையும் இலங்கையையும் காப்பாற்றிக் கொள்வதற்காக இந்திய ராணுவ வீரர்களுக்கு உதவி புரிவோம்.




## சீனுவின் விபரீத போக்கு

(ஜி. இராமு, எட்டியாந்தோட்டை)

நட்புறவு கொண்டிருந்த சீனுவின் எதிர்பாராத தாக்குதலால், பாரதம் பல உயிர்களை இழந்தது. இதனல் நாம் மட்டுமல்ல, உலகமே அதிருப்தி அடைந்துள்ளது. நன்றி கெட்ட நயவஞ்சகர்களாகிய சீனர்கள் ஏகாதிபத்திய எண்ணங் கொண்டவர்கள்; செய் நன்றி மறப்பவர்கள். ஐ. நா. வில் சீனுவைச் சேர்க்க இந்தியா பட்டபாடு கொஞ்சமா? உலக அரங்கில் சேர்க்க வாதாடிய வாதங்கள் அளவிடற்கரியதாகும். இதற்குக் கைம்மாறு இந்தியாவை ஆக்கிரமிப்பது தானு? இச்செய்கை கொம்யூனிசத்திற்கே களங்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றதல்லவா?

நண்பனுக்குத் துரோகம் செய்யும் நாடு என்பதைக் கொம்யூனிஸ்ட் சீனு தனது செய்கை மூலம் நிரூபித்து விட்டது. அஹிம்சையைக் கடைப்பிடிக்கும் பாரதத்தைச் சீனு ஆக்கிரமிப்பதேன்? பாரதத்தின் புகழ் மங்க வேண்டும் என்ற எண்ணமா? இந்தியாவின் பொருளாதாரத்தை அழிக்கவேண்டும் என்ற பொருமையா? அல்லது தான் சர்வாதிகாரியாக வேண்டும் என்ற நோக்கமா?

ஆரம்பத்தில் பலரை அழித்துவிட்டோம் என்ற பெருமையில் சீனு சவால விடுகின்றது. ஆனல் சீறி எழும் சிங்கங்கள், பாரத மக்கள் போரிட முனைந்தால், சீனு மண்ணோடு மண்ணாய் விடும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. இறுதி வெற்றி பாரதத்திற்கே. இதில் இம்மியும் ஐயமில்லை.

சாத்வீகத்திலே மூழ்கி இருந்த பாரத மக்கள், பொங்கி எழுந்து விட்டனர். அடிமைகளாக வாழ்வதை விட மாண்டு மடிவதே மேல் எனத் திடசங்கற்பம் பூண்டு விட்டனர். பல இடங்களிலிருந்தும் மக்களின் ஆதரவு பல்கிப் பெருகியுள்ளது. பாரத மக்களின் [illegible] யின் முன், சீனப் படைகளின் [illegible] திண்ணம்.



'என்ன! இந்தியாவைச் சீனம் ஆக்கிரமிக்கிறதா? இதோ வந்துவிட்டேன் நான்!' என்று இந்திய - சீன யுத்தத்தில் தானும் பங்கு பற்றப் புறப்பட்டு வந்து விட்டான் இந்த இங்கிலாந்து இளம் வீரன்!

### சிரிப்பு

பிரபல ஓவியர் கில்பர்டு தம்மைத் தாமே வரைந்த ஓவியத்துக்கு, இள மங்கை ஒருத்தி முத்தம் ஒன்று கொடுத்தாள். ஓவியரிடம் மங்கை இதைச் சொன்னுள். 'ஓவியம் திருப்பி முத்தம் தந்ததா?' என்ருர் ஓவியர். இல்லையென்ற மங்கையிடம் "அப்படியானல் அது என் ஓவியமல்ல" என்ருர் ஓவியர்.

## இது நியாயமா?

(எஸ். அப்துல் கபூர், கொழும்பு.)

எத்தனையோ முறை சமாதானத் தலைவர் என்று போற்றப்பட்ட நேருவின் ஆட்சியில் சீனு வாலாட்ட ஆரம்பித்ததைக் கண்டு மற்ற நாடுகள் சீனுவைக் கண்டித்தும், அது தொடர்ந்து தன்னைத்தானே அழித்துக் கொளும் முறையில் நடந்து கொள்கிறது. சீனுவை ஐக்கிய நாடுகள் சபையில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றுவாதாடி,வற்புறுத்தி வந்த இந்தியாவையே மதிக்காமல் இன்று சீனு, நிலத்தின் மீது ஆசை கொண்டு யுத்தம் தொடர்ந்து இருப்பது நியாயமா?

நேப்பாளத்தில் நேருவின் படத்தைக் கொளுத்துகிருர்களாம் சீனர்கள். வலையில் விழுந்து கொண்டிருக்கும் நேப்பாளத்தினர் தங்கள் அறிவை அடகு வைத்து வருகிருர்கள் என்பதற்கு இது ஒரு சான்று. நேப்பாளம் சீனர்களின் பிடியில் சிக்கி விடக்கூடாதே என்று நேரு நேப்பாளத்தினர்களுக்குத் தொடர்ந்து உதவிகள் செய்து வருகிருர். நேப்பாளப் பொலிஸ் படையினருக்குத் தேவையான ஆயுதங்களையும் துப்பாக்கிக் குண்டுகளையும் இந்தியா தயார் செய்து தர ஒடபுக் கொண்டிருக்கிறது. இதெல்லாம் மறந்து, உண்மையின் மறு உருவமான நேருவின் படத்தை நேப்பாளத்தினர்கள் கொளுத்தலாமா?

### காரணம் என்ன?

சீனுவிடம் நிறைய நிலங்கள் இருந்தும் பிரயோசனமில்லை. மூன்று ஆண்டுகளாக சீனுவின் பயிர்கள் பாழாகி விட்டன,சூழற்காற்றினலும், மழையில்லாத காரணத்தினலும்! உணவுப் பஞ்சத்தைச் சமாளிக்கச் சூ-என்-லாய் சீன இராணுவத்தையே வயல்களில் இறங்கி வேலை செய்யச்சொல்லியிருக்கிருர். இயற்கையே சீனுவுக்கு எதிரியாகி விட்டதால், தலை தூக்க முடியாமல் தவிக்கிறது சீனு! இந்தப் பஞ்சத்தின் காரணமாகத்தான் சீனு இந்தியா மீது படையெடுத்து இப்பொழுது பொறியில் அகப்பட்ட எலி போல் விழிக்கிறது.



போருக்குப் புறப்பட்ட பையனைப் பார்த்து 'வெற்றியோடு திரும்பி வருக' என்று அகமும் முகமும் மலர வாழ்த்தி அனுப்புகிருரோ குழந்தைப் பிரியர் பாரதப்பிரதமர்! அத்துடன் அவரும் போர் முனைக்குப் புறப்பட்டு விட்டார் போலத் தெரிகிறதே!

சென்ற புதன் கிழமை (14- 11- 62) நேருவின் பிறந்த தினமாகும்.

'டங்பெங்' என்னும் பெயரில் சீனு கார்களைத் தயாரிக்கிறது. 'டங்பெங்' என்ருல் கிழக்குக் காற்று என்று கருத்து. சீனப் பணக்காரர்கள் இந்த கிழக்குக்காற்றை விடப் பழைய 'பியூக்' கார்களையேவைத்திருக்க ஆசைப்படுகிருர்கள். அவர்கள் கார்களில் செல்லும் போது வழியில் பசியாலும், பட்டினியாலும் நிற்கும் ஏழைகளைக் காணுமல் இருக்கத் திரைகளைப் போட்டுக் கொண்டு விடுகிருர்களாம் கார்களின் சன்னல்களுக்கு!

### திபெத்தின் நிலை

திபெத்தை சீனர்கள் பிடித்தபிறகு திபெத் எப்படி இருக்கிறது தெரியுமா? ஒரு சோப்பின் விலை 10 ரூபா! ஒரு மணங்கு அரிசியின் விலை 400 ரூபா! ஒரு மணங்கு வெல்லம் விலை 800 ரூபா! ஒரு மணங்கு சர்க்கரையின் விலை 600 ரூபா! ஒரு குவளை மண்ணெண்ணெய் விலை 50 ரூபா! சிகரெட் பாக்கெட் ஒன்றின் விலை 50 ரூபா! இவ்வளவு விலை கொடுத்தாலும் ரேஷன் கார்டு இல்லாமல் எதையும் அங்கே வாங்க முடியவில்லை. இப்படிப்பட்ட சீனுவை நாம் ஆதரிக்கமுடியுமா?

## காலம் காட்டும்!

—முதல்வனுர்—

'கண்ணை விற்றுக் காட்சி பார்க்க
எண்ணங் கொள்வரோ?'—பிறந்த
மண்ணை மாற்றுர் நண்ணும் போது
அடங்கி வாழ்வரோ?

எல்லை மீறி ஆள எண்ணல்
என்ன நீதியோ?—பெருந்
தொல்லை தரும் பொல்லாச் சீனர்
முரட்டு ஜாதியோ?

சீனம் செய்யும் ஈனச் செய்கை
சிறப்பு நல்குமோ?—அதை
மான முள்ள, ஆன மக்கள்
பொறுத்துக் கொள்வரோ?

கோலம் போட்டுக் கொள்கை மாற்றும்
போலிச் சீனர்க்கு—எதிர்
காலம் காட்டும் நல்ல பாடம்!
கற்றுத் தேர்வரோ?

### அன்புள்ள மருமக்களே!

வணக்கம். சீன ஆக்கிரமிப்புக் கெதிராக நீங்கள் எழுதிக்குவித்த கவிதை, கட்டுரைகள் அநேகம், அநேகம். அவற்றை எல்லாம் பிரசுரிக்க முடியவில்லையே என்பது தான் எனது வருத்தம்.

மாஸ்டர் சிவலிங்கத்தின் 'பயங்கரக்கரடி' மர்மத் தொடர்கதை இவ்வாரம் இடம் பெற வசதியில்லை. ஆகவே, அடுத்த வாரம், அது இடம் பெறுகின்றது.

வணக்கம்.

உங்கள் அன்பின்,

வளர்மதி மாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புவழி நடந்து வந்த பாரதத்துக்கெதிராக சீனம் படையெடுக்கக் காரணம்?

## தலைமைப்பித்து என்கிருர் மா.பொ. சிவஞானம்

நாம் தளபதிகளல்ல; போர் நிறுத்தம் பற்றியோ, சமாதானம் பற்றியோ சிந்திக்க. அதனை நம் தளபதி நேருவிடம் விட்டுவிடுவோம். இவ்வாறு 27-10-62 சனிக்கிழமை சென்னை இலட்சுமி புரத்தில் நடைபெற்ற சீன ஆக்கிரமிப்புக் கண்டனக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் தமிழரசுக் கழகத் தலைவர் திரு. மா. பொ. சிவஞானம் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: சீனப் பெருநாடு, மக்கள் தொகையால் பலமுடையது. முன்னர் ஜப்பான் படை எடுத்த போது, ஐந்தாண்டுகாலம் போர் புரிந்து அனுபவம் பெற்றது. பின்னர் உள்நாட்டில் நிகழ்ந்த வர்க்கப் புரட்சியாலே யுத்த வெறியை வளர்த்துக்கொண்டிருக்கிறது.

பாரத மக்களாகிய நாமோ, எந்த நாளில் பாரதம் ஓரரசாக மலர்ந்ததோ, அந்த நாள் தொட்டு சுமார் இருநூறு ஆண்டுகள் அடிமைப்பட்டுக் கிடந்தோம். அந்தக் காலத்தில், பிற நாடு படை எடுத்து நாம் பார்த்ததில்லை உள்நாட்டில், இங்கு மங்குமாகச் சமயச் சண்டைகள் ஏற்பட்டதுண்டு. அதுகூட தென் நாட்டில் நிகழ்ந்ததில்லை!

### அன்பு வழி

ஆம்; நாம் அமைதியாக வாழ்ந்து, அன்பு வழியில் வாழ்க்கை நடத்தி அனுபவம் பெற்றவர்கள். எதிலும் எதற்காகவும் போர் வெறியை விரும்பாதவர்கள். நம்மைத் தாக்கியிருக்கிறது தலைமுறை தலைமுறையாக போர் முறையை வளர்த்துக் கொண்டுள்ள சீனப் பெருநாடு.

நாம் சுதந்திரம் பெற்ற பதினைந்து ஆண்டு காலத்தில் யாரையும் பகைத்ததில்லை, பகைக்கும்படி நடந்து கொண்டதில்லை. இந்த நிலையில் நம்மைத் தாக்கியிருக்கிறது சீனம்.

சீனம் சர்வாதிகார நாடு! நட்பு நாட்டுக்குத் துரோகம் செய்திருக்கிறது. இதை யாரும் அங்கு எடுத்துக் கூற முடியாது.

சீனர் எண்ணிக்கையில் அறுபது கோடி. எண்ணத்தில் ஒருவர். நாம் எண்ணிக்கையில் நாற்பத்து மூன்று கோடி. எண்ணத்திலும் அத்தொகையினரே. காரணம், பாரதம் ஜனநாயக நாடு. இப்பொழுதும் இங்கு எதிரும்புதிருமானபேச்சுக்களைக் கேட்கிருேம். 'நடு நிலைமை இனியும் கைவிடப்படமாட்டாது' என்கிருர் பிரதமர்! 'நடு நிலைமையைக் கைவிட்டேயாக வேண்டும்' என்கின்றனர் பெரியவர்கள். ஆனால் சீனப் படையெடுப்பு நியாயமானது என்று கூறுவோர் மட்டும் யாருமில்லை.

### கம்யூனிஸ்டு மண்டலம்

நம்மோடு போராடுவது சீன நாடுதான். ஆனல் பின்னே நின்று ஆயுதமேந்த அவர்களுக்கு கம்யூனிஸ்ட் நாடுகள் இருக்கின்றன. கம்யூனிஸ்டு ஆட்சி மண்டலம் சுமார் 110 கோடி மக்களைக் கொண்டது. இதனை மறந்துவிடக் கூடாது. அவர்கள் இரத்தத்தால் வேறுபட்டாலும், சித்தாந்தத்தால் ஒன்றுபட்டவர்கள். ஏதாவதொரு கம்யூனிஸ்டு நாடு சீனத்துக்கு எதிராக ஆயுதம் தூக்கும் என்று யாராகுதல் எண்ணியிருந்தால் அவரெல்லாம் அரசியல் அப்பாவிகள்.

ருஷ்யா மவுனம் சாதிக்கிறது, காரணம் கால்த்தை எதிர்நோக்கும் ராசதந்திரம். நேற்றுவரை மவுனம் சாதித்த ருஷ்யா, இன்று சீனத்துக்கு ஆதரவாக வெளிப்பட்டு விட்டது!

### நட்புக்குத் துரோகம்

மக்மகான் கோடு, ஆங்கிலேயன் சீனத்துக்கு செய்த அநீதி என்கிருர் சூஎன்லாய். இது விடயத்தில் சீனத்தின் எல்லைக் கோடு சரியானதே என்று சொல்லி விட்டது ருஷ்யா.

நட்புக்குத் துரோகம் செய்வது கம்யூனிஸ்டு மண்டலத்தின் பொது தர்மம்—என்று சொல்லாமல் சொல்லிவிட்டது ருஷ்யா!

எனவே, நம்முடைய எதிரணியில் 110 கோடி மக்கள் இருக்கிருர்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

பாரதத்தின் நட்பு நாடுகளே இன்று சீனப் படையெடுப்பு அநீதியானது என்று கூற முன்வரவில்லை. 'சீனமும் பாரதமும் சமாதானமாகப் போகவேண்டும்' என்கிருர் நேருவின் சிஷ்யர் நாசர். பர்மா பிரதமரும், இலங்கைப் பிரதமரும் அதையே சொல்கிருர்கள். இதன் பெயர் நடுவு நிலைமையாம்!

### இதுதான் நடு நிலைமையா?

பாரதம் நடு நிலைமை நாடு. ஆனல் எகிப்தைப் பிரிட்டன் தாக்கியபோது 'அது தவறு—உன் படையை வாபஸ் வாங்கு' என்று நம் பிரதமர் பிரிட்டனைக் கேட்டார். கியூபாவின் உரிமைக்காகப் பேசினர். ஆனல் 'பாரதத்தின் பக்கம் நியாயமிருக்கிறது' என்று கூற உலகில் நடு நிலைமை நாடுகள் கூட முன்வரவில்லை.

### காரணம் என்ன?

பாரதத்தின் பகைவன் பலசாலி. 110 கோடி மக்களைக் கொண்ட கம்யூனிஸ்டு மண்டலம் அவன் பின்னே இருக்கிறது. எனவே அஞ்சுகின்றன இலங்கை, பர்மா போன்ற சிறிய நாடுகள்.

நம் பக்கத்தில் தருமமும், நியாயமும் இருக்கின்றது, எனவே நாம் இந்நிலை கண்டு சோர்வடையத் தேவையில்லை. இறுதி வெற்றி நமக்குத்தான்.

சீனம் பாரதத்தைத் தாக்கியதற்கான உண்மைக் காரணம் என்ன? கேவலம், சில ஆயிரம் சதுர மைல் கொண்ட நிலப் பகுதியை அதுவும் மக்கள் வாழாத மலை உச்சிப் பகுதியைக் கைப் பற்றுவதுதானு சீனத்தின் குறிக்கோள்?

### தலைமைப் பித்தம்

ஆசியாவின் தலைமையைப் பெறுவதிலே சீனத்துக்கு ஆசை, எனவே அந்த ஆசைக்கு பாரதம் தடையாக இருப்பதால் சீனம் படையெடுத்திருக்கிறது. ஜனப் பெருக்கத்தையுடைய சீனத்திற்கு தலைமைப் பதவியில் ஆசைபிறந்திருக்கலாம். கம்யூனிஸ்டு மண்டலத்தின் தலைமையை ருஷ்யாவிடமிருந்து கைப்பற்ற வேண்டுமென்ற ஆசையும் சீனத்திற்கு உண்டு. அதன் காரணமாக ருஷ்ய—சீனப் பூசல் இருக்கத்தான் செய்கிறது. ஆனல் கம்யூனிஸ்டு நாடுகளிடையே உள்ள கருத்து வேற்றுமை, அவற்றிடையே போரை உருவாக்கிவிடாது.

நடுவு நிலைமையைக் கைவிட்டு விட வேண்டும் என்று ஒரு குரல் கேட்கிறது. நடு நிலைமையில் சில பல கஷ்டங்கள் நமக்கு ஏற்பட்டிருக்கின்றன. ஆனல் நடுவு நிலைமையைக் கைவிடுவதால் விளையக் கூடிய தீமைகள் அநேகம். நமது சுதந்திரத்திற்கே ஊறு ஏற்பட்டுவிடும். இது பற்றி நாம் எதற்கு விவாதிக்க வேண்டும், நாட்டைக் காக்கும் நல்லவர்கள் பேசித் தீர்த்துக்கொள்ளட்டும்.

நாம் தளபதிகளல்ல; போர் நிறுத்தம் பற்றியோ, சமாதானம் பற்றியோ சிந்திக்க! அதனை நம் தளபதி நேருவிடம் விட்டு விடுவோம்.

நாம் 'சோல்ஜர்'கள்! அதனல் போர் நடத்துவதொன்றைப் பற்றியே நாம் சிந்திப்போம்! போரில் வெற்றி பெற என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ, அவற்றையெல்லாம் செய்வோம்.

# புனிதமற்ற எழுத்தின் மூலம் நம்மை நாமே தாழ்த்துகிருேம்

## தமிழ் எழுத்தாளர் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்து

நுட்பத் திறன் எதுவும் இன்றிப் பச்சையாக எழுதிக் கொண்டு அதை யதார்த்தம் என்று சொல்லும் கீழ்மை மறைய வேண்டும். புனிதமும், பண்பாடும் இன்றி எதை யெல்லாமோ எழுதுவது நரகப் பாதையைக் காட்டி நம்மைத் தாழ்த்தி விடும் என்பதை நன்ருக உணர வேண்டும்.

யதார்த்த நிலை என்ருல் நிர்வாணம். எனவே நாம் நிர்வாணமாக நடமாடலாமா? யதார்த்த வாதிகள் என்று கூறிக்கொள்பவர்கள், இதைச் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

இவ்வாறு சிறந்த சிறுகதை எழுத்தாளரும், இலக்கிய உலகில் மதிப்பு வாய்ந்தவருமான திரு. க. தி. சம்பந்தன், இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்க அங்குரார்ப்பண கூட்டத்திற்கு தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில் கூறினர்.

மேலும் அவர் கூறியதாவது: விமர்சனம் என்ருல் எழுதியவர் மனதைப் புண்படுத்துவது அல்ல. குற்றத்தை நாகரிகமாகச் சுட்டிக் காட்டுவது எதுவோ அதுவே விமர்சனம்.

இந்திய எழுத்தாளர்கள் முயற்சிக்கு ஏற்ற நிலையை அடைந்து வருகிருர்கள். அவர்களைப் போல் நாமும் முயற்சி செய்து முன்னேற்ற வழியைக் காண வேண்டும்.

யாழ் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு. தேவன் பேசுகையில் கூறியதாவது:

"நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள தமிழ் எழுத்தாளர் அனைவரையும் எவ்வித வேறுபாடும் இன்றி ஒன்று கூட்டுவதே நமது நோக்கம். இச் சங்கம் அரசியல் கருத்துக்களுக்கு எல்லாம் அப்பால் நின்று செயற்படும்."

இந்தியா மீது சீன நடத்திவரும் ஆக்கிரமிப்பைக் கண்டித்தும், கியூபாவிலிருந்து ரஷ்ய ஏவாயுதங்கள் அகற்றப் பட்டதைப் பாராட்டியும், தமிழ் எழுத்தாளர்களுக்குச் சாகித்திய மண்டலத்தில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நாட்டின் பல பாகங்களிலும் உள்ள எழுத்தாளர் அடங்கிய நிர்வாகிகள் சபை தெரிவு செய்யப்பட்டது.

# சீனுவின் நிலை சர்வதேசச்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி))

குரியதாகின்றது என்று கட்டுரை கூறுகின்றது.

ஆனல், ஏற்கனவே குறிப்பிடப்பட்ட நிலப்பரப்பு வேருெரு நாட்டு அரசாங்க நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்திருந்ததென்ருல், நடவடிக்கை எடுக்கும் நாட்டின் செயல் நியாயமற்றது; சட்டவிரோதமானது; அதிகாரமற்றது.

### இந்தியாவுக்கே சொந்தம்

கடைசியில், மாக்மாஹோன் எல்லை இந்தியாவுக்குச்சொந்தமானதுஎன்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு என்று கூறுகிருர் டாக்டர் கிருஷ்ண ராவ். அவையாவன:


(1) இந்நூற்ருண்டுக்கு முன்னரே, பிரச்சினைக்குரிய நிலப்பரப்புகளுடன் இந்தியாவுக்கு இருந்துவந்திருக்கும் நீண்டகாலச் சரித்திரத் தொடர்புகள்.

(2) இயற்கைஎல்லைகளைப் பற்றிச் சர்வதேச சட்டம், வழக்கு இவைதரும் கொள்கைகளின் அடிப்படையில் இந்தியாவின் வடக்கு எல்லைகள் அமைந்திருப்பது.

(3) ஒப்பந்தமும், வழக்கும்—இவை இரண்டும் இந்த எல்லைகளைச் சீனுவும், இந்தியாவும் ஏற்றுள்ளன என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. எல்லைப் பிரதேசங்களில் சீன தனது ஊடுருவல்களை ஆரம்பிக்க முன்னரே அப்பிரதேசங்களில் இந்தியா தனது அதிகாரத்தைச் செலுத்தி வந்திருக்கிறது.

(4) இந்தியா, சீன, திபேத் மூன்றையும் கட்டுப்படுத்தும் சிம்லா ஒப்பந்தம்.

(5) சீன—இந்திய எல்லைகள் பற்றி இந்திய[illegible] நிலையைச் சீன அ[illegible] தமை.

பணக்காரன் முதல் பாட்டாளி வரை

எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

தந்தி [illegible]

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11.

தொலைபேசி 3597—6522

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று 'நாடற்றவன்' என்று பழிக்கப்படுபவனே




## அன்று காடாயிருந்ததை நாடாக்கியவன்

—ஞா. பெ. அல்பிறெட், டிக்கோயா—

கல்லும் முள்ளும், கரடும் முரடும், பாம்பும் பேயும் புற்றும் புதரும், மற்றும் பலவும் நிறைந்திருந்த காட்டுப்பகுதியைப்பண்படுத்திப் பொன் கொழிக்கும் நாடாக்கிய நல்லதமிழன் இன்று நட்டாற்றில் நின்று தவியாய்த் தவிக்கின்றான். 'நாடற்றவன்' என்று நாமம் சூட்டப்பட்டு, நாதியற்றவனாக, நடைப்பிணமாக, நடுங்கித் தவிக்கின்றான். 'வெள்ளைக்காரனால் கொண்டு வரப்பட்ட கள்ளத் தோணி' என்று, எள்ளி நகையாடப்படுகின்றான். மறக்குலக் குடிப் பிறந்த வீரத்தமிழன், 'பறைக்குலத்தமிழன்' என்று பரிகாசஞ் செய்யப்படுகின்றான். தோட்டத்தை விட்டு,-நாட்டுக்கு, நகரப் பகுதிக்குச் சென்றானேயென்றால், பாட்டன் காலத்திய 'பாஸ் போட்' காட்டவேண்டிய நிலையில் கஷ்டப்பட்டு வருகின்றான் மலைநாட்டுத் தமிழன். நாட்டு வழக்கம் தெரியாதவனாக, நாகரிகம் புரியாதவனாக அவன் வாழ்கின்றானே என்றால் கிணற்றுத் தவளை போன்று, கிடந்து உழலவேண்டிய நிலையில் இருக்கின்றான் அவன் என்பதுதான் உண்மை.

### சுதந்திரம் இல்லையே!

'இம்' என்றால் சிறைவாசம், 'ஏன்' என்றால் வனவாசம் என்றிருந்த ஏகாதிபத்திய, எதேச்சாதிகார, அந்நிய ஆதிக்கத்தில் அடிமைகளாகவிருந்த இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் விடுதலை பெற்றுப் பல வருடங்களாகின்றன. ஆனால் இந்தியாவிலிருந்து, இலங்கையில் குடியேறி, இந்நாட்டின் நல்வாழ்விற்காகவே, உதிரத்தை நீராக்கி, உடலை உரமாக்கி, ஆவி, பொருள் அனைத்தையும் அர்ப்பணித்து, தேயிலை, இறப்பர்த் தோட்டங்களில் வாழும் இலங்கை (இந்தியத்) தமிழருக்குமட்டும் சுதந்திரம் கிடைக்கவில்லை, விடுதலை கிடைக்கவில்லை. என்ன கொடுமை! உள்ள உரிமைகளையும் மெல்லப் பறித்து விட்டார்களே!

### நம்மை நாமறியோம்

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்றால், அவைகள் வலிய வந்து வாயில் விழுந்துவிடும் என்று நாம் வாளாவிருக்கலாமா? இருந்தால்; வருங்கால வாழ்க்கை இதைவிட மோசமானதாகவே இருக்கும்.

'நமது வாழ்வு' பற்றியே நன்கறியாத பலரும், நம்மிடையே இன்று வரைக்கும் இருக்கத்தானே செய்கிறார்கள். இதைவிடக் கேவலம் வேறென்ன?

இது இவ்வாறிருக்க, நாம் நமது உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் இவ்வேளையிலும், எமக்கிடையே எத்தனை வேற்றுமைகள்? எத்தனை ஏற்றத் தாழ்வுகள்? சாதிப் பாகுபாடுகள் எத்தனை? 'உத்தியோகத்தன்' 'கூலிக்காரன்' என்ற உயர்வு தாழ்வுகள் எத்தனை?

கட்சிக் காரியங்களில் கூட எத்தனை வேற்றுமை? அப்பனும் ஆயாவும் ஒரு கட்சி, அண்ணனும், தம்பியும் இன்னொரு கட்சி, மாமனும், மாமியும் வேறொரு கட்சி, அப்பப்பா! ஒரு குடும்பத்திலேயே எத்தனை கட்சிகள்? வேற்றுமை வளரவும் ஒற்றுமை குலையவும் வேறென்னதான் வேண்டிக் கிடக்கின்றது? பலாபலன், வெட்டும் குத்தும், கொலையும் கோரமுமேயாகும். கட்சிக் கொள்கைகள் கோட்பாடுகள்தான் புரியாவிடினும், காசு பணத்தையெல்லாம் விரயமாக்கிக் கொள்ளமட்டும் நம்மிற் பலர் தயங்குவதில்லை.

### சோறும் வேண்டும் சுதந்திரமும் வேண்டும்

நம்முடைய நலனுக்காக வென்றே தோன்றிய தொழிற்சங்கங்கள், கடந்த காலங்களிலே நடந்து கொண்ட விதங்களை நாமறிவோம். ஏன், நாடு கூட அறியும். இங்கு கட்சிகள் தோன்றி இருபது வருடங்களுக்கு மேலாகிவிட்டன இருந்த போதிலும், பிறப்புரிமை, வாக்குரிமை, கல்வி உரிமை என்ற மக்கள் உரிமைகளை இழந்து, மாக்களாக வாழும் வகை ஏற்பட்டுங்கூட, வாய்மூடி மௌனிகளாக, வாளாவிருக்கின்றனரே இந்த வாயாடித் தொழிற்சங்கத் தலைவர்கள்.

நமக்கு இனியாவது விழிப் புணர்ச்சி வேண்டாமா? [illegible] மோ? மலை நாட்டார் என்றால், என்ன மனித வளர்ச்சியே அற்றவர்களோ? இல்லை இல்லை, இனியும் நாம் அப்படி வாழப் போவது இல்லை. நமக்குச் சோறும் வேண்டும், சுதந்திரமும் வேண்டும்.

### ஒரு கொடிக்குக் கீழ் ஒன்றுபடுவோம்

நடந்தன கடந்தன. நடப்பதை நாடவேண்டும். நல்லதைச் செய்ய வேண்டும். மெல்ல மெல்ல, விடுதலை பெற்று வாழ வழி சமைக்க வேண்டும். வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையாகத் திகழ்ந்து, ஒரு கொடிக் கீழ் நின்று போராடி, உரிமைகளைப் பெறவேண்டும். தமிழர், தமிழினம் என்ற ஓரினமாக ஒன்றுபட வேண்டும். யாழ்ப்பாணம், மன்னார், மலைநாடு, மட்டக்களப்பு, என்ற பேதம் ஒழிய வேண்டும்.

### காற்றுள்ள போதே தூற்றிக்கொள்க

தன்னலமற்ற, தன்மானமுற்ற, தியாகம், சேவை, அன்பு, அசிம்சை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட, அகில இலங்கைத் தமிழரசுக்கட்சி, நம்மையும் ஒன்று சேர்க்கும் பணியில், நம்மிடையே ஸ்தாபனரீதியாக இயங்கத் தொடங்கிவிட்டது நாம் எல்லோரும் ஒன்றுபட்டுப் போராடி உரிமைகளைப் பெறுவதற்கு ஏற்ற, இந்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் புத்திசாலித்தனமாகாது. எத்தர்களின் ஏமாற்று வித்தைகளிலே எடுபட்டகாலம் கடந்துவிட்டது. மலைவாழ் மக்களை விலை கூறிய காலமும் நிலை மாறிவிட்டது. நம்பிக்கை கொண்டு நம் தமிழ்த் தலைவர்களுடன், நம் தந்தை செல்வாவுடன் ஒன்றுபட்டுப் போராடி உரிமைகளைப் பெறுங்காலம் நெருங்கி விட்டது. விழித் தெழுவோம்! வீறுகொள்வோம்!

## தோட்டத்தில் ஆலய திறப்பு விழா

இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த நிரியெல்லைத் தோட்டத்தின் ஆலைப்பிரிவில் (ஸ்டோர் டிவிசன்) பொதுமக்களின் நன்முயற்சியால் புதிதாக நிறுவப்பட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் விக்கிரகப் பிரதிஷ்டை வைபவம் 2-11-62 வெள்ளிக் கிழமை மாலை கோலாகலமாக நடைபெற்றது. தோட்டத்துரை திரு. பி. எச். பிறுக் அவர்கள், உதவி அதிகாரிகளாகிய திருவாளர்கள் ஈ. ஜே ஐ. எலபாத்த, டாறெம்பே, ஆகியவர்கள் சகிதம் ஆலயத்தைத் திறந்துவைத்தார். திரு. பிறுக் அவர்களுக்கு தொழிலாளர்கள் சார்பில் ஆலய உற்சவக் குழுவினரால் ஒரு சிறந்த சுவர்க் கடிகாரம் அன்பளிப்புச் செய்யப்பட்டது. அன்றிரவு கரகம்பாலித்த பின் அடுத்த நாள் 3ம் திகதி சனிக்கிழமை அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நன்கு அலங்கரிக்கப்பட்ட மோட்டார் இரதத்தில் அம்மன் எழுந்தருளி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. இன்னும் சிறிது காலத்திற்கு கும்பாபிஷேக உற்சவம் தொடர்ந்து நடைபெறும். இவ் வாலயத்தில் முக்கிய பகுதி தோட்ட நிர்வாகத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

## அப்பாக்குட்டி, அம்மான் எங்கே?

பரபரப்புடன்ஓடி வந்த ஆபீஸ் பையன் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். "எல்லைப் போருக்குப் போகிறேன் — என்னைத் தேடவேண்டாம் — அம்மான்" என்று கடிதத்தில் கண்டிருந்தது. பையன் எவ்வளவோ தடுத்தும் வரிந்து கட்டிக் கொண்டு யுத்தத்துக்குக் கிளம்பிய அம்மானின் வேகத்தைத் தடுக்க முடியவில்லையாம். அடுத்த வாரம் 'யாழ்ப்பாண நகர சபையில் நடைபெறும் திருவிளையாடல்கள்', 'பிரமுகர் வீட்டுத் திருமணம்' ஆகிய செய்திகளைச் சேகரித்துக் கொண்டு வருவதாகவும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அடுத்த வாரம் வரை பொறுத்துப் பார்ப்போம்.

-ஆ—ர்-

### பிரமுகர் வீட்டுத் திருமணம்

இலங்கையின் மிகப் பிரபல்யம் வாய்ந்த ஒருவருடைய மகனுக்கு அண்மையில் திருமணம் நடைபெற்றது. அத்திருமணத்துக்கு பிரபலம் வாய்ந்த தந்தையார் செல்லவில்லை. பிரபலம் வாய்ந்த உறவினரும் செல்லவில்லை. 'மிகப் பெரிய' குடும்பத்தில் இந்த பிளவு ஏற்படக் காரணம் என்ன? அடுத்த வாரம் அம்மான் விபரம் தருகிறார்.

### அடுத்த வாரம்

'கலைப்பூஞ்சோலை', 'தடுப்புக் காவலில் நாம்' ஆகியவை அடுத்த வாரம் தொடக்கம் வழமை போல் இடம் பெறும்.

-ஆ—ர்-

## அடிமையை அழிப்போம் வாரீர்!

( தமிழோவியன் — பதுளை )

தொண்டர்க ளாகி ஏய்த்துத்
தொழிலாளர் பணத்தைப் பறித்து
உண்டவர் செய்கை யாலே,
உரிமைக ளிழந்தோ மன்றிக்,
கண்டதோர் பயனு மில்லைக்,
கழிபொரு ளானோ மதனால்;
முண்டியே எழுவோம்! அந்த
மூடர்க ளோடச் செய்வோம்!

'பாட்டாளி மக்கள் உயரப்
பாடுகள் படுவோ' ரென்று(க்)
கூட்டாளி யாகந டித்துக்
கூடியே கெடுக்குந் துரோக
கூட்டத்தை நம்பிக் கெட்டோம்!
குலத்தினை யழிக்கு மன்னோர்,
நாட்டத்தைக் குலைத்துத் தீய்த்து
நல்லவ ரணியிற் சேர்வோம்!

மலையகத் தமிழர் மதியின்
மாண்பினை அறியாச் சிலரும்
எலையிலாச் சுயநலம் பேண
எண்ணியே போடும் ஆட்டம்
நிலையிலை என்று அவர்க்கு
நிச்சயம் உணர்த்த வேண்டும்!
அலையெனத் திரள்வீர் ஒன்றாய்!
அடிமையை ஒழிப்போம் வாரீர்!

Dial 2739




ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்
ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி

கொழும்பு-14.

டெலிபோன்: 2739

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு விரும்பியவருக்கு நாசம் புரியும் சீனு

## இந்திய வர்த்தகர் சங்கம் கண்டனத் தீர்மானம்

நட்புறவு கொண்டு வாழ விரும்பிய இந்தியாவுக்கெதிராக நயவஞ்சகம் புரிகிறது சீனு. ஆக்கிரமிப்பை எதிர்த்து எத்தனை கஷ்டங்களையும் தாங்கும் சக்திபடைத்து வெஞ்சமர் புரியும் வீரர்களைப் பாராட்டுகிறோம்.

இந்திய பாதுகாப்பு நிதிக்கு தாராளமாக தந்துதவுங்கள். நகைகளையும், பொருட்களையும் நாம் ஏற்க முடியாதிருக்கிறோம். உதவிப் பணம் அனுப்புவதில் நாணயக் கட்டுப்பாட்டில் தளர்ச்சி ஏற்படும். இவ்வாறு இலங்கையிலுள்ள இந்திய வர்த்தக சங்கம் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளதாக, சங்கத் தலைவர் ஜனுப் செய்யது முகம்மது நமது நிருபரிடம் கூறினுர்.

இலங்கையிலுள்ள வர்த்தகர் சங்கம் (சிலோன் மேர்க்கண்டைல் சேம்பர்) சென்ற 10ம் திகதி கூடியது. சீன ஆக்கிரமிப்பைக் கண்டித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

கூட்டத்தில் சீன ஆக்கிரமிப்பைக் கண்டிக்கும் ஒரு தீர்மானத்தை திரு. மதார் அவர்கள் பிரேரித்தார்கள். நட்புறவு கொண்டு அன்னியோன்யமாக வாழவேண்டும் என்று இந்தியா எண்ணியிருக்கையில் சீனு நயவஞ்சகமாகப் போருக்கான ஏற்பாடுகள் செய்து கொண்டு இன்று இந்தியாவைத் தாக்கியுள்ளது என்றும், இந்த ஆக்கிரமிப்பை எதிர்த்து பல கஷ்டங்களையும் சமாளித்து நாட்டுக்காக வெஞ்சமர் புரிபவர்களை நாம் முழு மனதுடனும் பாராட்ட வேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் கூறப்பட்டது. தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது.

ஆதரவைப் பேச்சளவில் தெரிவிப்பதுடன் நில்லாது அடுத்து இந்தியப் பாதுகாப்பு நிதிக்கு பணம் கொடுத்து உதவ வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. பணம் கொடுத்து உதவுபவர்கள் கொழும்பு குமார வீதியிலுள்ள இந்திய வர்த்தக சங்கத்திற்கு அனுப்பிவைக்கும்படி கோரும் ஒரு வேண்டுகோளும் விடப்பட்டது.

இது விடயமாக எமது நிருபர், சங்கத்தின் தலைவர் திரு. செய்யது முகமதைச் சந்தித்தபோது அவர் நிதிக்கு இந்திய வர்த்தகர்கள் மட்டுமின்றி, பல இலங்கையர்களும் உதவியது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் என்று கூறினுர். அத்தோடு நிதியாக வந்துசேரும் பணத்தைப்போடுவதற்காக ஒரு தனிப்பட்ட வங்கிக் கணக்கு (பாங்க் அக்கவுன்ட்) திறந்து அதில் தற்காலிகமாகப்போடுவதாகவும் பின்னர் முழுத்தொகையையும் இந்தியத்தூதுவர் காரியாலயம் மூலமாக இந்தியா அனுப்புவதாகவும் கூறினுர்.

பலர் நகைகள், பொன் முதலியன கொடுத்து உதவ முன் வந்தனர் என்றும் அவற்றைத் தாம் ஏற்கவில்லை என்றும், தாங்கள் பொன் நகை முதலியன சேர்க்கவில்லை என்றும் கூறினுர்கள். இரத்த தானம் செய்யப்பலர் விரும்பினும் அதற்கு வசதியில்லை என்றும் தெரிவித்தார்.

செலவாணிக் கட்டுப்பாடு விடயத்தில் சங்கடம் ஏதாவது இருக்குமோ என்று கேட்டதற்கு, தாங்கள் வெள்ள நிதி சேர்த்து அனுப்பியதாகவும் அத்தகைய நெருக்கடியான நிலைமைகளின் போது வழக்கமாக எந்த அரசாங்கமும் விதிகளைத் தளர்த்தி உதவும் என்று நம்புவதாகவும் கூறினுர்.



இலங்கைக்கு அண்மையில் வந்திருந்த பாரதப் பிரதமர் நேருஜிக்கு இந்திய வர்த்தக சங்கத்தார் கால்பேஸ் ஹோட்டலில் அளித்த வரவேற்புபசாரத்தின் போது, சங்கத் தலைவர் ஜனுப் செய்யது முகம்மது மலர் மாலை சூடி நேருஜியை வரவேற்கிறுர்.

## கொழும்பில் சீன—இந்திய பிரச்சினை

அடுத்த மாதம் 31ந் திகதியில் கொழும்பு மாநகர சபைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது.

இந்த தேர்தலிலே ஐக்கிய தேசியக் கட்சிக்கும் கொம்யூனிஸ்டு— சமசமாஜ முன்னணிக்குமிடையே தான் கடுமையான போராட்டம் நடைபெறுமெனத் தெரிகிறது. இப் போராட்டத்திலே சீன—இந்திய யுத்தம் முக்கிய பிரச்சினையாக இருக்குமென்றும் தெரிகிறது.

கொம்யூனிஸ்டு-சமசமாஜ முன்னணியைப் பலமாகத் தாக்குவதற்கு சீன--இந்திய யுத்தத்தை யு. என். பி. ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளுமென அறியப்படுகிறது.

——

## பதிவுத் திருமணம்

இலங்கை வானெலி தமிழ் நாடகப் பகுதித் தலைவரும், 'லண்டன் கந்தையா' மூலம் சிரிப்பூட்டியவருமான திரு. எஸ். சண்முகநாதன் (சானு) அவர்களின் டைரக்ஷனில் உருவான 'பதிவுத் திருமணம்' நகைச்சுவை நாடகம் 18-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பொரளை வை. எம். பி. ஏ. மண்டபத்தில் நடைபெறுகிறது. சிரிப்பு மூலம் சிந்தனையைத் தூண்டும் இந்நாடகத்தை திரு. கே. பாலச்சந்திரன் தயாரித்துள்ளார். 'ஆர்பி' அவர்கள் கதை வசனத்தை எழுதியுள்ளார்.

டைரக்ஷன் பொறுப்புடன் சானு அவர்கள் சிறந்த பாத்திரத்தையும் ஏற்று நடிக்கிறுர். நடிகவேள் லடிஸ் வீரமணி, பி. உதயகுமார், என். மகேஸ்வரன், ரொசைரோ பீரிஸ், டி. ராஜேஸ்வரன், செல்வி இராசம்மா வேலாயுதன், செல்வி கோகிலா சுப்பிரமணியம் ஆகியோர் நடிக்கின்றனர்.

## மாஸ்கோ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கமிட்டிக் கூட்டத்தில் செய்யப்படும் முடிவையொட்டியே இலங்கை கொம்யூனிஸ்டுக்கட்சி தனது கொள்கையை வகுத்துக் கொள்ளும். இதற்கு முன்பும் இம்மாதிரித்தான் செய்து வந்துள்ளது.

இதற்கிடையே கொம்யூனிஸ்டுக் கட்சிக்குள் கெனமன் — சண்முகதாசன் கோஷ்டி சீன ஆக்கிரமிப்பை ஆதரிக்க வேண்டுமென்று கூறிவருகின்றனர். திரு. சண்முகதாசன் கொழும்பிலுள்ள சீனத் தூதராலயத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாகக் கிடைத்த ஒரு செய்தி கடந்த வாரம் சுதந்திரனில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அக் கட்சியினுள் தேசிய கோஷ்டியாகக் கருதப்படும் டாக்டர் விக்கிரமசிங்காவின் கோஷ்டியினர் சீன ஆக்கிரமிப்பை ஆதரிப்பதில் ஆர்வம் காட்டவில்லையாம். இக் கருத்துவேற்றுமை மாஸ்கோ கட்டளை வரும் வரைதான் நீடிக்கும். ஏனெனில் இரு கோஷ்டியினரும் மாஸ்கோ உத்தரவை நிபந்தனையின்றி ஏற்றுக் கொள்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாதுகாப்பு நிதியை........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கு அனுப்பும்படி நிதி வசூல் செய்பவர்களை அரசாங்கம் கேட்டுக் கொள்ளவிருக்கிறதாம்.

ஆனுல் இம்மாதிரிப் பொருட்களை வாங்கி அனுப்புவதில் இந்திய யுத்தமுயற்சிக்கு அதிக பயன் ஏற்படப் போவதில்லையென்றும், யுத்த தளவாடம் உட்பட பல்வேறு யுத்தப் பொருட்கள் வாங்குவதற்கும், யுத்தம் சம்பந்தமான வேறுபல செலவுகளுக்குமே இந்தியா இந் நிதியை உபயோகப்படுத்துமென்றும் நிதி வசூல் செய்யும் வட்டாரங்களில் சுட்டிக் காட்டப்படுகிறது.

பல்வேறு வழிகளில் இந் நாட்டிலிருந்து பணம் வெளியேறிக் கொண்டிருக்கிறதெனினும், நமது அண்டை நாட்டை ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்க ஒரு சில இலட்ச ரூபாய்களை நமது காணிக்கையாக பாரத நாட்டுக்கு அனுப்புவதைத் தடை செய்ய முயற்சி செய்தல் ஒரு பெரிய ஆபத்தில் சிக்கியுள்ள பாரத நாட்டு மக்களுக்கு இந்த நெருக்கடியான சமயத்தில் இழைக்கும் துரோகமென்று அரசியல் வட்டாரங்களில் கருத்து தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் நெருக்கடியைப் பயன் படுத்தி இலங்கை உற்பத்திப் பொருட்களை விற்க முயற்சிப்பது ஒரு வர்த்தக நடவடிக்கையென்றும் இதிலும் சுயநலம் பாராட்டினுல் மக்கள் நன்கொடை [illegible] தோக்சமே சிதறுண்டு [illegible] லிங்கென்றும் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

## உண்மையா ?

இந்தியாவுக்கு அமெரிக்கா ஆயுதங்களளிப்பதை பிரிட்டிஷ் கொம்யூனிஸ்ட் கட்சி கண்டிக்கிறது.

சீனுவிற்கு 14 ரெயில்களில் செக்கோஸ்லவேக்கியா ஆயுதங்கள் அனுப்பியதை எந்த கொம்யூனிஸ்ட் கட்சியும் இதுவரையில் கண்டிக்கவில்லை.

இந்தியாவைத் தாக்கியது சீனக் கொம்யூனிஸ்டுகளல்ல, சீனத் துருப்புகள் என்கிறுர் சென்னை சட்ட சபை கொம்யூனிஸ்ட் உறுப்பினர் கலியாண சுந்தரம்.

கொம்யூனிஸ்ட் சீனர்கள் எங்கள் குடும்பச் சகோதரர் [illegible] பெற்ற தமிழ் நாடு கொம்யூனிஸ்ட் பாலதண்டாயுதம்.


பொங்கும் எழிலிற்கும்;
நிதம்
தங்கும் நீடிய சேவைக்கும்!!

மௌலானு

அச்சடி சீத்தைகளே!!



மனங்கவர் மங்காத பல
நிறங்கள்!
மகிழ்விக்கும் மனோரம்மிய
நவீன டிசைன்கள்!

நீடித்த சேவை அத்தனையும் கொண்ட மௌலானு அச்சடி சீத்தைகளை அணிந்து உயர்ச்சி மிகு கவர்ச்சி பெறுங்கள்!!

மௌலானு (சிலோன்) லிமிட்.,
கொழும்பு, மருதானை, கண்டி.

—MYLADS/MCL—


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலோன் என்டெர்டெயின்மென்ட்ஸ் திரைகளில்!

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

## சென்ட்ரல் - மருதானை

மற்றும் 6 திரைகளில்!



4 வதும்
கடைசியுமான
வாரம்!

சிவாஜி கணேசன்
பத்மினி
சந்திரபாபு - தங்கவேலு
நடிக்கும்
ஏ. எல். எஸ்.
புரொடக்ஷன்ஸாரின்

## செந்தாமரை

டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

வருகிறது!

உணர்ச்சிமிகு காதல்!
செவிக்கினிய கீதம்!
பரபரப்பூட்டும் கதை!

தேவ் ஆனந்த் - வஹிதா ரேஹ்மான்
நடிக்கும்
எச். எஸ். ராவெயில்லின்

## ரூப் கி ராணி சோரொன் கி ராஜா

சங்கீதம்: சங்கர் - ஜெய்கிஷன்

## 4-வது வாரத் திரை விருந்து!

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!


**கிங்ஸ்லி - பிளாஸா**
[கொழும்பு] [வெள்ளவத்தை]

**வெலிங்டன் - விஜயா**
[யாழ்ப்பாணம்] [மட்டக்களப்பு]

**வெம்பிளி - ஸ்ரீ கிருஷ்ணா**
[கண்டி] [திருகோணமலை]

மற்றும் 8 திரைகளில்

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, பி. சரோஜாதேவி,
கே. ஏ. தங்கவேலு, எம். சரோஜா, சௌகார் ஜானகி, சி. கே. சரஸ்வதி
மற்றும் பலர் நடித்த



## பார்த்தால் பசி தீரும்

டைரக்ஷன்: ஏ. பீம்சிங்
இசை: விஸ்வநாதன்-ராமமூர்த்தி
பாடல்கள்: கண்ணதாசன்
வசனம்: ஆரூர்தாஸ்

5-வது வெற்றி
வாரமாக
எல்பின்ஸ்டன்
மற்றும்
10 திரைகளில்
ஜெமினி கணேசன்
சௌகார் ஜானகி,
நடித்த

## பாக்கிய லட்சுமி

கொழும்பு தெற்கு
ரசிகர்களின் வேண்டு
கோளுக்கிணங்க
ரெக்ஸி திரையில் இப்
பொழுது காண்பிக்கப்
படுகிறது.
பானுமதி,
நாகேஸ்வரராவ்,
நடித்த

## கானல் நீர்

சாரதா பாடல்களையும் வசனங்களையும் 18-ம் திகதி ஞாயிறு மாலை 4-15 மணிக்கு இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் கேளுங்கள்.

எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி
எஸ். வி. ரங்கராவ்—வி. நாகையா
எம். ஆர். ராதா — அசோகன்
சகஸ்ரநாமம் — எஸ். ராமராவ்
எம். வி. ராஜம்மா — புஷ்பலதா
எம். எஸ். எஸ். பாக்கியம்
தோன்றும்



## சாரதா

கதை, வசனம், டைரக்ஷன்:
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

பாடல்கள்:
கவிஞர் கண்ணதாசன்

இசை:
கே. வி. மகாதேவன்



இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில் 1962-ம் வருடம் நவம்பர் மாதம் 18-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org